# பகுதி IV

# பகுதி IV

## மத்திய வங்கியினதும், இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும், தொழிற்பாடுகளும் தொடர்பான 1997 ஆம்ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 1997 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம் | I |
| 2. | 1997 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம் | II |
| 3. | 1997 ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் சட்டம் | IX |
| 4. | 1997 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம் | XXXI |
| 5. | 1997ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் | LI |
| 6. | 1997 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் (திருத்தச்) சட்டம் | LV |
| 7. | 1997 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டம் | LX |
| 8. | 1997 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் | LXII |
| 9. | 1997 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் | XCI |
| 10. | 1997 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் | XCV |
| 11. | 1997 ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம் | XCVIII |
| 12. | 1997 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவுதொகை (திருத்தச்) சட்டம் | CI |

# 1997 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க
# இலங்கை சமுர்த்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

[1997 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1995ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க இலங்கைச் சமுர்த்தி அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச் சட்டம், 1997 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபை(திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகார சபைச் சட்டத்தின் 4ஆம் பிரிவு; இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "வசதிப்படுத்துதல்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "வசதிப்படுத்துதல்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(11) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(எ) நிகழ்ச்சித் திட்டத்தின் பயனுகர்களுக்கு பணமாக அல்லது வேறு வகையில் நிவாரணம் வழங்குதல்"

3. 1989ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சனசக்திச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்டதும் சொல்லப்பட்ட சட்டம் நீக்கஞ் செய்யப்பட்ட தேதிக்கு நேர் முந்திய நாளன்று வலுவுற்றதுமான உரித்துச் சான்றிதழ் ஒன்றை வைத்திருப்பவரும் மாதமொன்றுக்கு இருநூற்றி ஐம்பது ரூபா பணக் கொடுப்பனவொன்றைப் பெறுகின்றவருமான ஒவ்வோராளும் முதன்மைச் சட்டவாக்கத்தில் முரணான எது எவ்வாறிருப்பினும் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் வகுத்தமைக்கப்பட்ட சமுர்த்தி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிவாரணத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராதல் வேண்டும்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1997 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம்

[1997 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 29ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ஆளொருவரினால் இலங்கையில் அல்லது வெளியே கொண்டிருக்கப்படும் திரட்டிய இலாப வருமானங்களையும் அத்தகைய எந்த இலாப வருமானங்கள் தொடர்பில் வருமானவரி விதித்தல் பற்றிய சட்டத்தின் கீழ் அவ்வாள் விவரத் திரட்டொன்றைக் கொடுத்துதவாதிருக்கின்றாரோ, அந்த இலாப வருமானங்களை அல்லது அத்தகைய ஆனிளால் கொடுத்துதவப்பட்ட விவரத் திரட்டொன்றில் வெளிப்படுத்தப்படாத இலாப வருமானங்களைக் குறித்துநிற்கும் பணங்களை அல்லது வைப்பு நோக்கத்துக்காக, இலங்கைக்கு வெளியே ஆளொருவரினால் வைத்திருக்கப்பட்டு இலங்கை ரூபாவில் மாற்றப்பட்ட இயைபான வெளிநாட்டு நாணயத்தை தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்புக் கணக்குகளில் வைப்பீடு செய்வதை இயலச் செய்வதற்கும்; அத்தகைய விசேட கணக்குகளில் வைப்பீடு செய்யப்பட்ட பணங்களைக் குறைத்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக மீளப் பெறுவதை இயலச் செய்வதற்கும்; குறித்த சில வரிகளைச் செலுத்தும் பொறுப்பிற்கெதிராகவும் வருங்காலத்தில் அத்தகைய ஆட்களை வரிச்சட்டங்களுக்கும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டங்களுக்கும் முழுமையாக இணங்கியொழுகச் செய்வதை நோக்கமாகக் கொண்டு அத்தகைய வரிச்சட்டங்கள் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் தொடர்பிலான தவறுகளுக்காகக் குற்றவழக்குத் தொடரப்படுவதற்கு அல்லது தண்டப்பணங்களுக்கு எதிராக ஆட்களுக்கு நட்டோத்திரவாதமளிப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றிற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

*1. இச்சட்டம் 1997 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வரி சுருக்க மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம் என பெயர் எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. (1) இச்சட்டம் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய-*

*(அ) வருமானவரி அல்லது வருமானவரிமீதான மிகைவரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் அப்போதைக்கான சட்டத்தின் கீழ் 1996 மாச்சு மாதம் 31ஆந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எழுந்த அல்லது திரண்ட எவையேனும் இலாப வருமானங்கள் தொடர்பில் 1996, மாச்சு மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் ஆண்டிற்கென வருமானவரி செலுத்தவதற்கு ஆளாக இருந்தவரும் அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்காக வருமானத்தின் விவரத் திரட்டொன்றைக் கொடுத்துதவாதவரும் அல்லது அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விவரத் திரட்டில் அத்தகைய இலாபங்களை அல்லது வருமானத்தை வெளிவிட்டிராதவருமான; அல்லது*

*(ஆ) இலங்கைக்கு வெளியே ஏதேனும் இயைபான வெளிநாட்டு நாணயத்தை வைத்திருக்கின்றவரான,*

*எவரேனும் ஆளுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.*

(2) இச் சட்டமானது, 1997 பெப்புருவரி 15ஆம் திகதியன்று எந்த ஆள் தொடர்பில் –

(1) 1996, மார்ச்சு 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எழுந்த அல்லது திரண்ட அல்லது அத்தகைய ஆளினால் பெறப்பட்ட விடயத்திற்கேற்ப ஏதேனும் இலாபங்களும்

வருமானமும் தொடர்பில் அல்லது மொத்த விற்பனை வரவு தொடர்பில் வருமானவரி விதிப்பனவுக்கு அப்போதைக்கு ஏற்புடைத்தான சட்டத்தின் கீழ் அல்லது 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் அல்லது 1981 ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழ் அல்லது 1991 ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அளவீட்டுச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரியைச் சார்த்தப்பட்டதான அல்லது சந்தேகிக்கப்பட்டதான ஏதேனும் தட்டிக்கழித்தலுக்காக:

(11) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் சார்த்தப்பட்டதான அல்லது சந்தேகிக்கப்பட்டதான மீறுகைக்காக

ஏதேனும் புலனாய்வு முடிவுறாதிருக்கின்றதோ அந்த எவரேனும் ஆள் தொடர்பில் இச் சட்டம் ஏற்புடையதாதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர் அல்லாத, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வோர் ஆளும். இச் சட்டத்தில் இதனகத்துப் பின்னர் "இச் சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளொருவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

3. (அ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே 1996, மார்ச்சு 31 ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன் முடிவடைகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான திரண்ட இலாபங்களை அல்லது வருமானத்தை குறித்து நிற்கின்றதும் எந்த இலாப வருமானங்கள் தொடர்பில் அப்போதைக்கு வருமானவரி அல்லது வருமானவரி மீதான மிகைவரி விதிப்பனவிற்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின்கீழ் அவ்வாள் வருமான விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவாதிருக்கின்றாரோ அந்த இலாப வருமானங்களை அல்லது அத்தகைய ஆளினால் கொடுத்துதவப்பட்ட வருமான விபரத் திரட்டொன்றில் வெளிப்படுத்தப்படாத இலாப வருமானங்களைக் குறிக்கும் எவையேனும் (இயைபான வெளிநாட்டு நாணயம் அல்லாத) பணங்களை வைத்திருக்கின்றவரும்; அல்லது

(ஆ) இயைபான ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தைக் கொண்டிருக்கின்றவரும்,

இச் சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அத்தகைய வருமான ஆளொருவர் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய பணங்களின் விடயத்தில் இந் நோக்கத்திற்கென அவரால் வங்கியில் ஆரம்பிக்கப்படும் விசேடக் கணக்கொன்றில் அவரது வரவில் 1997, பெப்புருவரி 15ஆம் திகதியன்று, அல்லது அதன் பின்னர் ஆனால் 1997 ஓகத்து 15ஆம் திகதிக்கு முன்னர் அத்தகைய பணங்களை வைப்பீடு செய்யலாம் அல்லது மாற்றி வைப்பீடு செய்யலாம் என்பதுடன்(ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய வெளிநாட்டு நாணயத்தின் விடயத்தில் அந்நோக்கத்திற்கென அவரால் வங்கியில் ஆரம்பிக்கப்படும் விசேட கணக்கொன்றில் அவரது வரவில் 1997, பெப்புருவரி 15ஆம் திகதியன்று, அல்லது அதன் பின்னர் ஆனால் 1997 ஓகத்து 15 ஆந் திகதிக்கு முன்னர் அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை மாற்றி வைப்பீடு செய்யலாம்.

4. (1) மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் வங்கியில் உள்ள விசேட கணக்கொன்றில் எவையேனும் பணங்களை வைப்பீடு செய்கினற் ஆளொவ்வொருவரும் இச் சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் வங்கிக்கு வெளிப்படுத்துகையொன்றை செய்தல் வேண்டும்.

(2) வங்கியானது (1)ஆம் உட்பிரிவின் கீழ் அதற்குச் செய்யப்பட்ட ஒவ்வொரு வெளிப்படுத்துகையினதும் பிரதியொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்;வித்தல் வேண்டும் என்பதுடன் மாற்றப்பட்டு வைப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயம் தொடர்பில் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றின் விடயத்தில் வங்கியானது அத்தகைய வெளிப்படுத்துகையின் பிரதியொன்றை செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அனுப்;வித்தலும் வேண்டும்.

5. வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும் 3ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் எவையேனும் பணங்களை வைப்பீடு செய்துள்ள ஆளெவரும், வைப்பீடு செய்யப்பட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைய;முன்னர் அத்தகைய விசேட கணக்கில் அத்தகைய ஆளின் வரவிலிருக்கும் பணத்தொகை முழுவதைய;மோ அல்லது அதன் ஏதேனும் பாகத்தையோ (அத்தகைய தொகை மீது திரளும் வட்டியைத்தவிர) 6ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவிற்கான காப்ப; வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகவ;ம் காலப்பகுதியின் பின்னரும் தவிர, மீளப் பெறுவதை வங்கி அனுமதித்தலாகாது.

6. (1) மூன்றாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் எவையேனும் பணங்களை வைப்பிலிட்டுள்ள எவரேனும் ஆள், அவர் வைப்பீடு செய்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக் கொண்டதொரு காலப்பகுதி கழிந்த பின்னர் அத்தகைய விசேட கணக்கில் அவரது வரவிலிருக்கும் மீதித் தொகையை மீளப்பெறலாம்.

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய ஆள், அவ்வாறு செய்வதற்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்படுவதன் மீது, அவர் வைப்பீடு செய்த தேதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதி கழிந்த பின்னர் கமத்தொழில் அல்லது கைத்தொழில் பொறுப்ப; முயற்சியொன்றில் அல்லது ஏதேனும் அரசாங்க அதிகார சபையால் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபையால் அல்லது 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையால் முறையே அதிகாரமளிக்கப்பட்ட உள்ளகக் கட்டமைப்ப; அபிவிருத்திக்கான ஏதேனும் பொறுப்ப; முயற்சியில் அல்லது வசதியில் முதலீடு செய்வதற்கு அத்தகைய மீதித்தொகை முழுவதைய;ம் அல்லது அதன் பாகம் எதனையும் மீளப்பெறலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற்கான காப்ப; வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுள் எவற்றிற்காகவ;ம் 3ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய விசேட கணக்கில் அவரது வரவிலிருக்கும் ஏதேனும் பணங்களைத் தாம் வைப்பீடுசெய்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்தின் பின்னர் மீளப் பெறுகின்ற ஆளெவரும் அத்தகைய பணங்கள் எந்த நோக்கத்திற்காக மீளப் பெறப்பட்டனவோ அந்த நோக்கத்திற்குப் பிரயோகிக்கத் தவறுகின்றவிடத்து, அத்தகைய ஆள் இச் சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் மீளப் பெறப்பட்ட பணங்களுக்குச் சமமான தொகையைய;ம் அத்துடன் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு தொகையைய;ம் கொண்ட குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(3) ஆளெவரும், 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய விசேட கணக்கில் அவரது வரவிலிருக்கும் எவையேனும் பணங்களை அவர் வைப்பீடு செய்த திகதியிலிருந்து ஒரு மாத காலம் கழிந்த பின்னர் (1)ஆம் உட்பிரிவிற்கான காப்ப; வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுள் எவற்றிற்காகவ;ம் மீளப் பெறுகின்றவிடத்து வங்கியானது

அத்தகைய ஒவ்வொரு மீளப்பெறல் தொடர்பிலுமான விவரங்களை ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பு்வித்தல் வேண்டும்.

7. வங்கியானது, 3ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய விசேட கணக்கில் எவரேனும் ஆளின் வரவிலிருக்கும் தொகைமீது, வங்கியால் சேமிப்பு்க் கணக்குகளில் வரவிலிருக்கும் பணங்கள் மீது செலுத்தற்படற்பாலதான நடப்பு் வட்டி வீதத்திலான வட்டியைச் செலுத்துதல் வேண்டும்.

8. இச் சட்டம் ஏற்பு்டைத்தாகின்றவரும் மூன்றாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் எவையேனும் பணங்களை வைப்பீடு செய்துள்ளவருமான எவரேனும் ஆள்-

(அ) (i) அப்போதைக்கு வருமானவரி விதிப்பனவு்க்கு ஏற்பு்டைத்தாகும் சட்டத்தின் கீழும் அப்போதைக்கு வருமானவரி மீதான மிகைவரி விதிப்பனவு்க்கு ஏற்பு்டைத்தாகும் சட்டத்தின் கீழும், 1996 மார்ச்சு 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையு்ம் ஏதேனும் வரிமதிப்பிட்டாண்டிற்காக, அத்தகைய விசேட கணக்கில் அவரால் வைப்பீடு செய்யப்பட்ட எவையேனும் பணங்களைக் குறித்து நிற்கின்றவறான அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் தொடர்பில் முறையே ஏதேனும் வருமானவரியை அல்லது செலுத்தப்படற்பாலதான வருமானவரி மீதான மிகைவரியை:
(ii) அப்போதைக்கு செல்வவரி விதிப்பனவு்க்கு ஏற்பு்டைத்தாகும் சட்டத்தின் கீழும் அப்போதைக்கு செல்வவரி மீதான மிகைவரி விதிப்பனவு்க்கு ஏற்பு்டைத்தாகும் சட்டத்தின் கீழும் 1996 மார்ச்சு 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையு்ம் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (I) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய ஏதேனும் பாகத்தைப் பயன்படுத்தி, கொள்ளப்பட்டவாறான அவரது தேறிய செல்வத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் முறையே செலுத்தப் படற்பாலதான ஏதேனும் செல்வவரியை அல்லது செல்வவரி மீதான மிகைவரியை:
(iii) எந்த மொத்த விற்பனை வரவிலிருந்து (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவறான இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் எழுந்ததோ அல்லது பெறப்பட்டதோ அத்தகைய மொத்த விற்பனை வரவு் தொடர்பில் 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ் வியாபார மொத்த விற்பனை வரவு் வரியை அல்லது 1981 ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க மொத்த விற்பனைவரவு் வரிச் சட்டத்தின் கீழ் மொத்த விற்பனைவரவு் வரியை அல்லது 1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் ஏதேனும் தேசிய பாதுகாப்பு் அறவீட்டை,

செலுத்துவதற்கு ; அல்லது

(ஆ) (i) 1996 மார்ச்சு 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையு்ம் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில், (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் சம்பந்தமாக அல்லது தொடர்பில் அல்லது (அ) என்னும் பந்தியின் (ii) உட் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அவரது தேறிய செல்வத்தினதும் அத்தகைய பாகம் சம்பந்தமாக அல்லது தொடர்பில் அப்போதைக்கு ஏற்புடைத்தான வருமானவரி அல்லது வருமானவரி மீதான மிகைவரி அல்லது செல்வவரி அல்லது செல்வவரி மீதான மிகைவரி விதிப்பனவிற்கு ஏற்பு்டைத்தான சட்டத்தின் கீழ்; (ii)

பந்தி (அ) என்பதன் (iii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய மொத்த விற்பனை வரவு சம்பந்தமாக அல்லது அது தொடர்பில் 1963ஆம் ஆண்டின் 11 இலக்க நிதிச் சட்டத்தின் கீழ், அல்லது 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க மொத்த விற்பனைவரவு வரிச் சட்டத்தின் கீழ் அல்லது 1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அளவீட்டுச் சட்டத்தின்கீழ்:

(iii) அவரால் மாற்றப்பட்டு அத்தகைய விசேட கணக்கில் வைப்பீடு செய்யப்பட்ட இயைபான வெளிநாட்டு நாணயம் முழுவதும் தொடர்பில் அல்லது ஏதேனும் பாகம் தொடர்பில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ்:

ஏதேனும் தவறுக்காகக் குற்ற வழக்கொன்றுக்கு அல்லது தண்டப் பணமொன்றுக்கு ஆளாதல் ஆகாது:

9. இச் சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும் ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் இறுதியானதும் முடிவானதாயுமுள்ள -

(அ) (i) வருமானவரி அல்லது வருமானவரி மீதான மிகைவரி அல்லது செல்வவரி அல்லது செல்வவரி மீதான மிகைவரி விதிப்பனவு தொடர்பிலான அப்போதைக்கான சட்டத்தின்:
அல்லது

(ii) 1963ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க மொத்த விற்பனை வரிச் சட்டத்தின் அல்லது 1991 ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அளவீட்டுச் சட்டத்தின்.

ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டை:

(ஆ) 1996, மாச்சு 31 ஆம் தேதிக்கு முன், இச்சட்டம் ஏற்புடைத்தாகும் எவரேனும் ஆள் மீதும் அத்துடன் அவரால் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினது ஏதேனும் மீறுகை தொடர்பிலும் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டை: அல்லது

(இ) வேறு ஏதேனும் கருமத்தை மீளாய்வு செய்வதற்கு அதிகாரமளிப்பதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

10. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அல்லது வங்கியின் அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தை நிர்வகிக்கையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் இரகசியத்தை பேணுதலும் பேண உதவுதலும் வேண்டும் என்பதுடன், 3ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்கு தொடர்பில், எத்தகையதுமான ஏதேனும் தகவலை எவரேனும் தனியாளுக்கு, ஏதேனும் கூட்டுத்தாபனத்துக்கு, வங்கிக்கு நீதிமன்றத்திற்கு, நிறுவனத்திற்கு, அமைப்பிற்கு, திணைக்களத்திற்கு, இலங்கை அரசாங்கத்தின் ஏதேனும் அலுவலருக்கு, முகவருக்கு, பிரதிநிதிக்கு அல்லது எவரேனும் சட்ட ஆளுக்கு அல்லது இயற்கையான ஆளுக்குக் கொடுத்தலோ, வெளிப்படுத்தலோ அல்லது வெளிவிடுதலோஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், விடயத்திற்கேற்ப ஆணையாளர் தலைமையதிபதி அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி அல்லது வர்த்தக வங்கியின் ஓர் அலுவலர் அல்லது ஊழியர் –

(i) அத்தகைய கருமம் அல்லது தகவல் எந்த ஆள் தொடர்பிலானதோ, அந்த ஆளினால்,

(ii) போதைப் பொருள் அல்லது விமானக் கடத்தல் மீதான சர்வதேச சமவாய மொன்றுக்குப் பயனளிக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட எவையேனும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில், அச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால்:

(iii) மூன்றாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சிறப்புக் கணக்கிலுள்ள பணங்கள் 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க, பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான தவறொன்றாக அமையும் செயலொன்றை முன்னெடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன அல்லது பயன்படுத்தப்படுகின்றன என்ற ஏதுவின் மீது அதற்கான விண்ணப்பமொன்றின் மீது செய்யப்பட்ட உயர் நீதிமன்றக் கட்டளையொன்றினால் ; அல்லது

(iv) மூன்றாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சிறப்புக் கணக்கொன்றை வைத்திருப்பவரால் அல்லது அவருக்கெதிராக அத்தகைய சிறப்புக் கணக்கினின்று எழும் வங்கித் தொழில் கொடுக்கல் வாங்கல் ஒன்றின் தொடர்பில் வங்கியால் அல்லது வங்கிக்கெதிராகத் தொடரப்பட்ட எவையேனும் சட்ட நடவடிக்கைகளில் நீதிமன்றக் கட்டளையொன்றினால்;

அவ்வாறு செய்யுமாறு அவர் தேவைப்படுத்தப்படின், இச் சட்டத்தை நிர்வகிக்கையில் அவரது அறிவுக்கு எட்டியுள்ள ஏதேனும் கருமத்தை அல்லது தகவலை அத்தகைய தெரிவிப்பு, அத்தகைய தேவைப்பாட்டிற்கு அல்லது நீதிமன்ற கட்டளைக்கு இணங்கியொழுகும் நோக்கங்களுக்குக் கண்டிப்பாக அவசியப்படக் கூடியவாறான அத்தகைய அளவுக்கு, அத்தகைய ஆளுக்கு அல்லது நீதி மன்றத்திற்கு தெரிவித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படுகின்ற உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அல்லது வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் இச் சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ; நீதிவான் ஒருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு, மறியற்றண்டைனக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

11. இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்தள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

12. இச் சட்டத்தின் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி

"வங்கி " என்பது 1971ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி என்று பொருள்படும்:

"ஆணையாளர் தலைமையதிபதி", "உள்ளூரதிகாரசபை " "தேறிய செல்வம் " "இலாபங்களும் வருமானமும்", "வரிமதிப்பீட்டாண்டு" என்பன 1979 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்டவாறான பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி" என்பது, மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தலைவராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர் என்று பொருள்படும் என்பதுடன் அவருக்கு உதவியாளராக பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவரையும் உள்ளடக்கும்.

"செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்" என்பது (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பொருள்படும்;

"வெளிநாட்டு நாணயம்" என்பது இலங்கை நாணயத்தைத் தவிர்ந்த வேறு ஏதேனும் நாணயம் என்று பொருள்படும் என்பதுடன் இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிவுள்ள ஆளொருவருக்கு அவரது ஓய்வூதியம் தொடர்பில் அல்லது அவருக்கு வருமதியான வேறு பணிக்கொடைகள் தொடர்பில் ஒரு வெளிநாட்டு அரசாங்கத்தால் அல்லது நிறுவனத்தால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் நாணயத்தையும் அத்துடன் இலங்கை நாணயத்தைத் தவிர்ந்த வேறு ஏதேனும் நாணயத்தில் செலுத்தப்படற்பாலதான எல்லா வைப்பீடுகளையும் வரவுகளையும் மீதிகளையும் அத்துடன் இலங்கை நாணயத்தில் வெளிப்படுத்தப்பட்டவை அல்லது வரையப்பட்ட ஆனால், இலங்கை நாணயம் தவிர்ந்த ஏனைய நாணயத்தில் செலுத்தப்படற்பாலதான அத்தகைய எவையேனும் பண உண்டியல்களையும் பிரயாணிகள் காசோலைகளையும் நாணயக் கடிதங்களையும் அத்துடன் நாணயமாற்று உண்டியல்களையும் உள்ளடக்கும்:

"ஆள்" என்பது ஒரு கம்பனியை, ஆட்கள் குழுவொன்றை அல்லது பங்காண்மையொன்றை உள்ளடக்கும் ;

"இயைபான வெளிநாட்டுச் செலாவணி" என்பது ஆளொருவர் தொடர்பில் 1996, மார்ச் 31 ஆம் திகதியன்று அத்தகைய ஆளினால், இலங்கைக்கு வெளியே செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி, கொடை, நன்கொடை, மரபுரிமை என்ற வகையில் அல்லது வேறுவகையில் அவரால் இலங்கைக்கு வெளியே கொள்ளப்பட்டதும் இலாபங்களும் வருமானமுமாக உள்ள அல்லது இலாபங்களும் வருமானத்திற்கும் ஏற்றிக் கூறப்படற்பாலதான அல்லது இலாபங்களும் வருமானமுமாக அல்லாத அல்லது இலாபங்களுக்கும் வருமானங்களுக்கும் ஏற்றிக் கூறப்படற்பாலதல்லாத வெளிநாட்டுச் செலாவணி என்று பொருள்படும்;

"அப்போதைக்கு வருமானவரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டம்" என்பது 1979ஆம ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் என்று பொருள்படும்;

"அப்போதைக்கு வருமானவரி மீதான மிகைவரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டம்" என்பது 1982ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வருமானவரி மீதான

மிகைவரிச்சட்டம். 1989ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வருமானவரி மீதான மிகைவரிச்சட்டம் என்று பொருள்படும்.

"அப்போதைக்கு செல்வவரி அல்லது செல்வவரி மீதான மிகைவரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டம்" என்பது 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்ட ரசிறைச் சட்டம், 1982 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, செல்வவரி மீதான மிகைவரிச் சட்டம் 1989ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க செல்வவரி மீதான மிகைவரிச் சட்டம் என்று பொருள்படும்;

"மொத்த விற்பனை வரவு" அத்துடன் "காலாண்டு" என்பன 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க, மொத்த விற்பனைவரிச் சட்டத்தால் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

# 1997ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிராந்திய அபிவிருத்தி வங்கிச் சட்டம்

[1997ம் ஆண்டு ஜூன் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

குறித்துரைக்கப்பட்ட பிராந்தியங்களுக்கென விவசாயம், கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம் என்பனவற்றின் அபிவிருத்திக்கும் பிராந்தியத்தில் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் ஏற்பாடு செய்வதன் மூலம் பிராந்தியத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் அபிவிருத்தி வங்கிகளைத் தாபிப்பதனையும் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட பிராந்தியங்களில் அமைந்துள்ள பிராந்தியக் கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் தொழிலை நேரொத்த அபிவிருத்தி வங்கிகளுக்கு உரித்தாக்குவதனையும் மத்திய வங்கியின் பணச்சபைக்கு இயலச் செய்வதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

*1. இச் சட்டம் 1997 ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

## பாகம் I

### குறித்துரைக்கப்பட்ட பிராந்தியங்களுக்கு அபிவிருத்தி வங்கிகளைத் தாபித்தல்

*2. (1) குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பொன்றுக்கு அப்பிராந்தியத்தினுள் விவசாயம், கைத்தொழில் வியாபாரம், வர்த்தகம் என்பனவற்றின் அபிவிருத்திக்கும் வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் ஏற்பாடு செய்வதன் மூலம் அத்தகைய பிராந்தியத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக (இதனகத்துப் பின்னர் "வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும் அபிவிருத்தி வங்கியொன்று தாபிக்கப்படுவது அவசியமென (இதனத்துப்பின்னர் "பணச்சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) மத்திய வங்கியின் பணச்சபையின் விதப்புரையின் மீது அமைச்சர் முடிவு செய்யுமிடத்து, பணச்சபையானது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் (இதனகத்துப் பின்னர் "கூட்டிணைப்புக் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.*

*(அ) அப்பிராந்தியத்தில் விவசாயம், கைத்தொழில் வியாபாரம், வர்த்தகம் என்பனவற்றின் அபிவிருத்திக்கும் வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் ஏற்பாடு செய்வதன் மூலம் அப்பிராந்தியத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக (இ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பிற்கு வங்கியொன்று தாபிக்கப்பட வேண்டுமென வெளிப்படுத்துதல் வேண்டும். ;*

*(ஆ) வங்கிக்கு கூட்டிணைப்புப் பெயர் ஒன்றைக் குறித்தொதுக்குதல் வேண்டும் ;*

*(இ) வங்கி எந்தப் பிராந்தியத்திற்குள் தொழிற்பட வேண்டுமோ அந்த இடப்பரப்பை குறித்துரைத்தல் வேண்டும்.; அத்துடன்*

*(ஈ) வங்கி எந்தத் திகதியன்று தொழிலைத் தொடங்க வேண்டுமோ அந்தத் திகதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும்.*

*(2) வங்கியானது, கூட்டிணைப்புக் கட்டளையினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறா வழியுரிமையையும் பொது*

இலச்சினையொன்றும் உடையதாயிருத்தலும் வேண்டும்; அத்துடன் அததகைய பெயரில் அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

3. (1) வங்கியின் பிராதான தொழிலிடம் கூட்டிணைப்புக் கட்டளையில் குறித்துரைக்கப் பட்டவாறாதல் வேண்டும்;

(2) அவ்வாறு செய்தலவசியமென வங்கியின் பணிப்பாளர்கள் கருதுவிடத்து, வங்கியானது, கூட்டிணைப்புக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு அது தொழிற்படும் பிராந்தியத்திற்குட்பட்ட ஏதேனுமிடத்தில் அதன் கிளைகளையும் முகவராண்மைகளையும் தாபிக்கலாம்.

4. வங்கியின் குறிக்கோள் அப்பிராந்தியத்தின் விவசாயம், கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம், என்பனவற்றையும் கடற்றொழில் செயற்பாடுகளையும் சமுர்த்தி பயனுகரிகளின் கருத்திட்டங்களையும் மாகாண சபைகளால், பிரதேச சபைகளால் அத்துடன் வேறு ஏதேனும் உள்ளூரதிகார சபைகளினால் அப்பிராந்தியத்தில் பொறுப்பேற்கப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்களையும் ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல் என்பனவற்றிற்கு முக்கியத்துவமளித்து, அது தொழிற்படும் பிராந்தியத்தின் முழுமொத்த அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்தலாதல் வேண்டும்.

5. வங்கியானது, இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அதற்கு அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களுக்குப் பங்கமின்றியும் பின்வரும் தத்துவங்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம்:-

(அ) தனியாட்களுக்கும் கூட்டிணைக்கப்பட்ட குழுக்களுக்கும் குழுமங்களுக்கும் குறுகிய தவணை, நடுத்தவணை, நீண்ட தவணைக் கடன்களும் வேறு வசதிகளும் வழங்குதல்.

(ஆ) அதன் வாடிக்கையாளர்களுக்கு நடைமுறைக் கணக்குகள் தவிர்ந்த வேறு வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தலும், பேணுதலும், முகாமை செய்தலும்.

(இ) செலாவணி, உண்டியல்கள், வாக்குறுதிப்பத்திரங்கள், உண்டியல்கள், பங்குகள் , தொகுதிக்கடன்கள், சான்றுப்பத்திரங்கள், பங்குச் சான்றிதழ் தொகுதிகள் என்பவற்றையும் வேறு சாதனங்களையும் பிணையங்களையும் கழிவு செய்தல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், அவற்றில் வாணிகம் செய்தல்;

(ஈ) கடன்களையும் முற்பணங்களையும் கைமாற்றிக் கொடுத்தல்.

(உ) பாதுகாப்பான கட்டுக்காப்பிற்காக பிணையங்களையும் பெறுமதி வாய்ந்த பொருட்களையும் பெற்றுக் கொள்ளுதல்;

(ஊ) பணத்தையும் பிணையங்களையும் சேகரித்தலும் அனுப்புதலும்;

(எ) அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை முகாமை செய்தலும் அத்துடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கீழ் எந்த முகவராண்மைத் தொழில்களைக் கொண்டுநடாத்துவதற்கு அனுமதிக்கப் படுகின்றனவோ அந்த முகவராண்மைத் தொழில்களைக் கொண்டு நடாத்துதல் ;

(ஏ) வங்கி பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் பணத்தைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல் அத்துடன் தற்காலத்திலாயினுஞ்சரி, வருங்காலத்தினுஞ்சரி வங்கியின் ஆதனம் அல்லது சொத்துக்கள் முழுவதன் மீதும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் மீதும் ஈட்டினால், பொறுப்பினால் அல்லது

சோந்தையால் அத்துடன் வங்கி பொறுப்பேற்கும் ஏதேனும் கடப்பாட்டை அல்லது பொறுப்பின் நிறைவேற்றுகையை உறுதிப்படுத்துவதற்கும் அதற்கு உத்தரவாதமளிப்ப தற்கும் அதனையொத்த ஈடு, பொறுப்பு அல்லது சோந்தையின் மீது கடனெடுக்கப்பட்ட, திரட்டப்பட்ட அல்லது கொடுக்குமதியான ஏதேனும் பணத்தின் துரித மீள் கொடுப்பனவை பெறுதல் ;

(ஐ) ஆதனப் பிணைப் பொறுப்பின் மீது பணத்தை கடனாகவும், முற்பணமாகவும் கொடுத்தலும், அத்துடன் பிணைப் பொறுப்புடனோ பிணைப் பொறுப்பின்றியோ, உசிதமானதென அது கருதக் கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீது ஆட்களுக்கு, ஆட்களின் குழுக்களுக்கு, கழகங்களுக்கு அல்லது கம்பனிகளுக்கு கடன் வசதியளித்தலும்;

(ஒ) விவசாய விளைபொருளின் அல்லது வேறு எவையேனும் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் செம்மைப்படுத்துவதற்கும் துணைபுரிதலும் அவற்றை ஊக்குவித்தலும்.

(ஓ) அடைவு பிடிப்பவர் ஒருவரின் தொழிலைக் கொண்டு நடாத்துதல்;

(ஔ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை அல்லது விவசாய, கைத்தொழில் கடற்றொழில், வர்த்தக அல்லது வேறு தொழில் முயற்சிகளைக் கொள்ளுதலும் அல்லது கொள்வனவு செய்தலும் அத்துடன் ஏதேனும் அத்தகைய ஆதனத்தை அல்லது தொழில் முயற்சியை முகாமை செய்தலும் அல்லது அதன் முகாமைத்துவத்திற்கு ஏற்பாடு செய்தலும் அத்துடன் அத்தகைய ஆதனத்தை அல்லது தொழில் முயற்சியை விற்பனை செய்தலும் அல்லது வேறு வகையில் கையுதிர்தலும்;

(க) வங்கியின் குறிக்கோளை எய்துவதற்கு பரீட்சார்த்த கருத்திட்டங்கள் உட்பட, சிறிய அளவிலான கிராமிய அபிவிருத்தி கருத்திட்டங்களைப் பொறுப்பேற்றல்;

(ங) உயிரின வாழ்க்கைச் சூழல் சார்ந்த சீர்திருத்தத்தின் ஓர் அங்கமாக மர நடுகை போன்ற அத்தகைய செயற்பாடுகளுக்கு உற்சாகமளிப்பதன் மூலம், அது எந்தப் பிராந்தியத்திற்குள் தொழிற்படுகின்றதோ அந்த இடப்பரப்பின் அபிவிருத்திக்குத் துணைபுரிதலும் அதனை ஊக்குவித்தலும் கிராமங்களை மேம்படுத்துவதும் அத்துடன் பொதுவாக வங்கியின் குறிக்கோளுக்குதவும் மதியுரையுதவி அளித்தலும்;

(ச) அது தொழிற்படும் பிராந்தியத்திற்குள், விவசாய, கைத்தொழில், வியாபார, வர்த்தக செயற்பாடுகளுக்குத் தேவையான குதங்களினதும், கிட்டங்கிகளினதும், களஞ்சியங்களினதும் கட்டிடங்களினதும் நிர்மாணத்தைப் பொறுப்பேற்றலும் ஊக்குவித்தலும்.

(ஞ) வங்கியின் பணிப்பாளர் சபையால் தொகுத்தமைக்கப்பட்ட வழிகாட்டுதலுக்கமைய அத்தகைய வங்கித் தொழில் நிறுவனத்தால் அல்லது கூட்டுறவுச் சங்கத்தால் நிதியுதவியளிக்கப்படும் அல்லது அத்தகைய வங்கித் தொழில் நிறுவனத்தால் அல்லது கூட்டுறவுச் சங்கத்தால் கொண்டு நடாத்தப்படுகின்ற ஏதேனும், பொறுப்பு முயற்சியை அல்லது கருத்திட்டத்தைக் கையேற்பதற்கு ஏதேனும் வங்கித் தொழில் நிறுவனத்துடன் அல்லது கூட்டுறவுச் சங்கத்துடன் ஏதேனும் உடன்படிக்கையைச் செய்து கொள்ளுதல்;

(ட) மத்திய வங்கியுடன் உரிமம் பெற்ற ஏதேனும் வர்த்தக வங்கியுடன் அல்லது உரிமம் பெற்ற வேறு ஏதேனும் தனித்துவச் சிறப்புடைய வங்கியுடன் அல்லது கூட்டுறவுச் சங்கத்துடன் அல்லது பணச்சபையின் அங்கீகாரத்தின் பேரில் இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் வங்கியுடன் அல்லது நிதி நிறுவனத்துடன் கணக்குகளை ஆரம்பித்தல்;

(ண) அது தொழிற்படும் பிராந்தியத்திற்குள் குதங்களையும், கிட்டங்கிகளையும், களஞ்சியங்களையும் கட்டிடங்களையும், பொறித் தொகுதிகளையும், உபகரணங்களையும் வேறு பண்டங்களையும் குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல், ஒரேயடியாக விற்பனை செய்தல் அல்லது வாடகைக் கொள்வனவு அடிப்படையில் விற்பனை செய்தல்;

(த) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தன்மையதுமான ஏதேனும் முறையில் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைவு வைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறு வகையாக கையுதிர்தல்;

(ந) அது தொழிற்படும் பிராந்தியத்தின் உள்ளமைப்பின் அபிவிருத்தியில் பங்குபற்றுதல்;

(ப) அது தொழிற்படும் பிராந்தியத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதில், அபிவிருத்தி செய்வதில் அல்லது அவற்றிற்கு நிதியுதவியளிப்பதில் ஈடுபட்டுள்ள வேறு நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல் ;

(ம) சுயதொழில் புரியும் ஆட்களுக்கு அல்லது விவசாயம், கைத்தொழில் வியாபாரம், வர்த்தகம் என்பவற்றில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மதியுரைச் சேவைகள் வழங்குதலும் அவர்களின் தேர்ச்சிப் பயிற்சியை பொறுப்பேற்றலும். ;

(ய) சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகளுக்கு கைத்தொழிற் பூங்காக்களை அபிவிருத்தி செய்தலும் முகாமை செய்தலும்;

(ர) வங்கியின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவர்களான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும் அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் ஊதியங்களை, சம்பளங்களை அல்லது வேறு வேதனத்தை நிர்ணயித்தலும் அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவை பற்றிய நியதி நிபந்தனைகளைத் தீர்மானித்தலும்;

(ல) வங்கியால் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் நலன்புரி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளையும் தங்குமிட வசதிகளையும் ஏற்பாடு செய்தல்;

(வ) வங்கியின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் இலங்கையிலாயினுஞ்சரி, வெளியிலாயினுஞ்சரி செய்து கொள்ளுதலும் நிறைவேற்றுதலும்;

(அஅ) அதன் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனம், பதவியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, அவர்களுக்கு லீவு வழங்குதல் என்பன உட்பட அவர்கள் தொடர்பில் விதிகளை ஆக்குதல்;

(ஆஆ) வங்கி அலுவல்களை நிர்வகித்தல் தொடர்பில் விதிகளை ஆக்குதல்; அத்துடன்

(இஇ) வங்கிப் பணிப்பாளர் சபையின் அபிப்பிராயப்படி வங்கியின் அலுவல்களைத் தகுந்த விதத்தில் கொண்டு நடாத்த வசதியளிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லா விடயங்களையும் செய்தல்;

## பாகம் II

### வங்கியின் முகாமைத்துவம்

6. (1) வங்கியின் அலுவல்களினதும் தொழிலினதும் முகாமைத்துவமும் நிர்வாகமும் பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.)

(2) சபையானது, இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் வங்கியின் எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிக்கலாம்; அத்துடன் விடயத்திற்கேற்ப இச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் எந்தச் செயல்களையும் விடயங்களையும் புரிவதற்கு அது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்தச் செயல்கள், விடயங்கள் அனைத்தையும் புரியலாம்.

(3) வங்கியானது, அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் உறுதியான தொழிற்கோட்பாடுகளின் மீது செயற்படுதல் வேண்டும் என்பதுடன் வங்கி எந்தப் பிராந்தியத்திற்குள் தொழிற்படுகின்றதோ அந்த இடப்பரப்பின் பொருளாதார அபிவிருத்திக்கு உரிய கரிசனை காட்டுதல் வேண்டும்.

7. (1) சபையானது, பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களும் தெரிவு செய்யப்பட்டவர்களுமான ஐந்துக்குக் குறையாத, பன்னிரண்டிற்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இவர்கள் விடயத்திற்கேற்ப இச் சட்டத்தின் 8ஆம் அல்லது 9ஆம் பிரிவின் கீழ் பெயர் குறித்து நியமிக்கப்படுதலோ அல்லது தெரிவு செய்யப்படுதலோ வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் வங்கியின் முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நடாத்தப்படும்வரை சபையானது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களை மட்டுமே கொண்டிருத்தல் வேண்டும்.

8. (1) அமைச்சர், பின்வருவோரை சபையின் உறுப்பினர்களாக பெயர் குறித்து நியமித்தல் வேண்டும் :-

(அ) வங்கியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் எட்டுச் சதவீதத்திற்குக் குறையாததை மத்திய வங்கி வைத்திருக்குமிடத்து, பணச்சபையின் விதப்புரையின் மீது மத்திய வங்கியின் ஓர் அலுவலர்:

ஆயின் மத்திய வங்கியானது 18ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் கீழ் அதன் உதவு தொகையைச் செலுத்தும் அத்தகைய காலம் வரை வங்கியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் எட்டுச் சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் இப் பந்தியின் கீழ் சபையில் அதன் சார்பில் பணிப்பாளர் ஒருவர் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கும் உரித்துடையதாதலும் வேண்டும்;

(ஆ) வங்கியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் எட்டுச் சதவீதத்திற்குக் குறையாததை இலங்கை வங்கி வைத்திருக்குமிடத்து, அத்தகைய வங்கியின் பணிப்பாளர் சபையினது விதப்புரையின் மீது இலங்கை வங்கியின் அலுவலர் ஒருவர்;

(இ) வங்கியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் எட்டு சதவீதத்திற்குக் குறையாததை மக்கள் வங்கி வைத்திருக்குமிடத்து அத்தகைய வங்கியின் விதப்புரையின் மீது மக்கள் வங்கியின் அலுவலர் ஒருவர் ;

(ஈ) வங்கியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் எட்டுச் சதவீதத்திற்குக் குறையாததை தேசிய சேமிப்பு வங்கி வைத்திருக்குமிடத்து, அத்தகைய வங்கியின் விதப்புரையின் மீது தேசிய சேமிப்பு வங்கியின் அலுவலர் ஒருவர்;

(உ) வங்கியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் எட்டு சதவீதத்திற்குக் குறையாததை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் வைத்திருக்குமிடத்து பணச்சபையின் விதப்புரையின் மீது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு மத்திய வங்கியின் அலுவலர் ஒருவர்; அத்துடன்

(ஊ) வியாபாரம், வர்த்தகம், கமத்தொழில், கைத்தொழில் அல்லது நிதி ஆகிய துறைகளில் முன்னணி வகிப்பவராகக் கணிக்கப்பட்டவரும் வங்கி தொழிற்படும் பிராந்தியத்தின் அபிவிருத்தியில் குன்றாத அக்கறை கொண்டுள்ளவருமான ஆள் ஒருவர்.

இவ்வுட்பிரிவின் கீழ் பணிப்பாளரொருவராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர் இதனகத்துப் பின்னர் "பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றார்.

(2) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் நான்கு ஆண்டுகளைக் கொண்ட தவணையொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.:

ஆயின் எவ்வாறாயினும் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் நிறுவனம் பங்குகளின் தகைமையளிக்கும் நூற்றுவீதத்தைக் கொண்டிருப்பதினின்று இல்லாதொழியுமிடத்து அத்தகைய நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் தமது பதவியிலிருந்து விலகுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பணிப்பாளர் பதவியிலிருந்து விலகத்தவறுமிடத்து, அமைச்சர் அத்தகைய பணிப்பாளரைப் பதவியிலிருந்து விலக்குதலும் வேண்டும்.

(3) அமைச்சரானவர், அதற்கான காரணம் எதுவும் காட்டாமல் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அதன் பொருட்டு அமைச்சருக்கு முகவரியிடப்பட்டெழுதப்பட்ட கடிதமொன்றின் மூலம் அவரது பதவியைத் துறக்கலாம்.

(5) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் சுகயீனம் காரணமாக அல்லது வேறு பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளை தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து, அமைச்சரானவர் விடயத்திற்கேற்ப எந்த நிறுவனத்தை அத்தகைய பணிப்பாளர் பிரதிநிதித்துவப்படுத்துகின்றாரோ அந்த நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையுடன் அல்லது தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் சபைக் கூட்டங்களில் அவரது மாற்றாளராகச் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளை பெயர் குறித்து நியமிக்கலாம் என்பதுடன் அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கான உரிமையொன்றை உடையவராதலும் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தின் கீழ் பதவி விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லாது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் மரணம், பதவி விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாகப் பதவியை வறிதாக்குகின்றவிடத்து அமைச்சர், பதவியை வறிதாக்கிய அத்தகைய ஆள் எந்த நிறுவனத்தைப்

பிரதிநிதித்துவம் செய்திருந்தாரோ, அந்த நிறுவனத்தை பிரதிநிதித்துவம் செய்வதற்கு இன்னோர் ஆளை (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும் அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆள், அவர் எப்பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளரை அடுத்து வருகின்றாரோ, அப்பணிப்பாளரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவி காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

9. (1) சபையினது தேர்ந்தெடுக்கப்படும் பணிப்பாளர்கள், (8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் பங்குதாரர்கள் தவிர்ந்த) அத்தகைய பங்குதாரர்களால் வைத்திருக்கப் படுகின்றவறாக வங்கியின் வழங்கப்பட்ட மொத்தப் பங்கு மூலதனத்தின் அத்தகைய ஒவ்வொரு எட்டு சதவீதத்திற்கும் ஓர் உறுப்பினர் என்ற அடிப்படையில் வங்கியின் பங்குதாரர்களது ஒவ்வொரு வருடாந்த பொதுக் கூட்டத்தின் போதும் வங்கியின் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். ஆயின் எவ்வாறாயினும் தேர்ந்தெடுக்கப்படும் பணிப்பாளர்களின் எண்ணிக்கை 7 ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள பணிப்பாளர்கள் சபையின் பணிப்பாளர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கைக்கும் 8ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படக்கூடிய பணிப்பாளர்களின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை விஞ்சுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பணிப்பாளர் எவரையும் தேர்ந்தெடுப்பதற்கு உரித்துடைய வங்கியின் பங்குதாரர்கள், (1) ஆம் உட்பிரிவின் கீழ் சபையின் தேர்ந்தெடுக்கப்படும், பணிப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உரித்துடைய பங்குதாரர்களின் எண்ணிக்கையின் எட்டிலொரு பங்கைக் கொண்டவர்களின் வேண்டுகோளின் பேரில் கூட்டப்படும் அத்தகைய பங்குதாரர்களின் கூட்டமொன்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அவரின் இடத்துக்கு இன்னொரு பணிப்பாளரைத் தேர்ந்தெடுக்கலாம்.

(3) தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர், அதற்கெனச் சபையின் தவிசாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதம்மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(4) சுகயீனம் அல்லது வேறு இயலாமை, இலங்கையில் இல்லாமை காரணமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் தமது பதவியின் கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாமல் இருக்கின்றவிடத்து, அத்தகைய பணிப்பாளர், சபையின் ஒருப்பாட்டுடன் சபையின் கூட்டங்களில் அவருக்கு மாற்றாகப் பதிற் கடமையாற்றுவதற்கு வேறோராளை நியமிக்கலாம் என்பதுடன், அவ்வாறு நியமிக்கப்படும் ஆள் அத்தகைய கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை உடையவராக இருத்தலும் வேண்டும்.

(5) தேர்ந்தெடுக்கப்படும் பணிப்பாளர் ஒருவர், பதவியிலிருந்து அகற்றப்படுதல், மரணம் அல்லது பதவியிலிருந்து விலகுதல் மூலம் பதவியை வறிதாக்குகின்ற விடயத்தில் அல்லது (8 ஆம் பிரிவின் (1) உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பங்குதாரர்கள் தவிர்ந்த வேறு) பங்குதாரர்களின் பங்குப் பற்றுகளில் அதிகரிப்பொன்று ஏற்படுவதன் காரணமாக, தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட, தேர்ந்தெடுக்கப்படவேண்டிய பணிப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால், சபையானது, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு விடயத்துக்கேற்றவாறு இன்னோராளை அல்லது சபைக்கு புதிய உறுப்பினர் ஒருவரை நியமிக்கலாம். அத்துடன் அவ்வாறு நியமிக்கப்படும் ஆள், அத்தகைய நியமனத்தின் பின்னர் வங்கியின் முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நடாத்தப்படும்வரை பதவி வகித்தல் வேண்டும். அவ்வாறு நடாத்தப்படும் கூட்டத்தில் பணிப்பாளர் ஒருவராக மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவர் தகவுடையவராதல் வேண்டும்.

(6) வங்கியின் பங்குதாரர்களினதும் ஒவ்வொரு வருடாந்தக் கூட்டத்திலும் தேர்ந்தெடுக்கப் பட்ட பணிப்பாளர்களில் மூன்றிலொரு எண்ணிக்கையினர், அல்லது தோந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்களின் எண்ணிக்கை மூன்றாக அல்லது மூன்றின் பெருக்குத் தொகை ஒன்றாக இல்லாதிருக்கின்றவிடத்து அவ்வெண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கு எண்ணிக்கைக்கு மிகச்

சமீபமாக உள்ள எண்ணிக்கையினர் அத்துடன் விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய வெற்றிடத்தை அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் வேறு ஆட்கள், 08 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் தவிர்ந்த வேறு) பங்குதாரர்கள் அத்தகைய வெற்றிடத்தை அல்லது வெற்றிடங்களை நிரப்புவதில்லை என வெளிப்படையாகத் தீர்மானித்தால் அல்லது அத்தகைய கூட்டத் திகதிக்கு நேர்முந்திய நாளன்று (18ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்கள் தவிர்ந்த) பங்குதாரர்களின் பங்கு வைத்திருப்புக்கள் அத்தகைய வெற்றிட்டத்தை நிரப்புவதை நியாயப்படுத்தாவிட்டால் ஒழிய, அத்துடன் அத்தகைய வெற்றிடத்தை அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட ஏனைய உறுப்பினர்கள் பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் (1), (5) அத்துடன் (6) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அவ்வுட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் பந்திகளிலுள்ள அந் நிறுவனங்களில் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் வீதத்தைவிடக் குறைவான வீதத்தைக் கொண்டுள்ள 8ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவையேனும் நிறுவனங்கள் பெயர் குறித்து நியமிக்கப்படும் பணிப்பாளர் ஒருவரைக் கொண்டிருப்பதற்கு உரித்துடையவையாய் வருகின்றவிடத்து, அத்தகைய நிறுவனங்கள், அதன் கண் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பங்குதாரர்களோடு சேர்த்து, விடயத்துக்கேற்றவாறு,(1) ஆம், (5) ஆம் அல்லது (6) ஆம உட்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பணிப்பாளரொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு உரித்துடையனவாதல் வேண்டும்.

(8) ஆறாம் உட்பிரிவின் கீழ் ஓய்வு பெறும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்கள், அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் வருடாந்தப் பொதுக் கூட்டத் திகதியன்று பதவியில் மிக நீண்ட காலம் சேவை புரிந்துள்ள பணிப்பாளராக அல்லது பணிப்பாளர்களாக இருத்தல் வேண்டும். ஆனால், அத் திகதியன்று சம அளவு காலப்பகுதிகளுக்குச் சேவை புரிந்திருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்களைப் பொறுத்தவரை, ஓய்வு பெறவேண்டிய பணிப்பாளர் யார் என்பது, கூட்டத்தின்தவிசாளரினால் இழுக்கப்படும் திருவுளச் சீட்டு மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(9) ஓய்வு பெறுகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர், மீளத் தேர்ந்தெடுக்கப் படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

10. (1) வங்கிக்காக அமைக்கப்பட வேண்டிய முதலாவது பணிப்பாளர்கள் சபையானது, இச் சட்டத்தின் 8ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையில் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சபையானது 9ஆம் பிரிவின் கீழ் பங்குதாரர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில், எந்நேரத்திலும் நடாத்தப்படவேண்டிய தேர்ந்தெடுக்கப்படும் பணிப்பாளர்களின் தெரிவு வரையிலான அத்தகைய காலம்வரை தொடர்ந்து பணிபுரிதல் வேண்டும்.

(2) சபையின் உறுப்பினர் ஒருவர் மரணம், பதவி விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படல் அத்துடன் தற்காலிகமாக இல்லாமை காரணமாக பதவியை வறிதாக்கல் தொடர்பான 8ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் முதலாம் சபையின் உறுப்பினர்கள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

11. (1) சபையானது, சபையின் பணிப்பாளர்களில் ஒருவரைச் சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) தவிசாளர் சுகயீனம், இயலாமை அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருந்தால் அவரது இடத்தில் பதில் கடமையாற்றுவதற்கு இன்னொரு பணிப்பாளரைச் சபை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) சபை, காரணம் எதுவும் காட்டாமல் சபையின் தவிசாளரின் நியமனத்தை முடிவுறுத்தலாம் என்பதுடன் அத்தகைய முடிவுறுத்தலானது ஏதேனும் நீதிமன்றத்தில் வினாவுக்குட்படுத்தலும் ஆகாது.

(4) தவிசாளர் சபைக்கு முகவரியிடப்படும் கடிதம் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(5) இரண்டாம், (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய சபையின் உறுப்பாண்மையில் தவிசாளரின் காலப்பகுதியே, அவரது பதவி காலமாதல் வேண்டும்.

12. இச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழ் முதலாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நடாத்தப்படும் வரை அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறாக வங்கி நிதியிலிருந்து அத்தகைய ஊதியம் பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்படலாம். அதன் பின்னர் பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஊதியம் ஒவ்வொரு வருடாந்தப் பொதுக் கூட்டத்திலும் வங்கியின் பங்குதாரர்களால் தீர்மானிக்கப்படுகின்றவாறாக இருத்தல் வேண்டும்.

13. வங்கியினால் செய்யப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தமொன்றில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள பணிப்பாளர் ஒருவர், தமது அக்கறையின் தன்மை பற்றிச் சபையின் கூட்டமொன்றில் வெளிப்படுத்துதல் வேண்டும். இவ்வெளிப்படுத்தல் அத்தகைய சபையின் குறிப்புகளில் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அப் பணிப்பாளர் அத்தகைய ஒப்பந்தம் தொடர்பில் அத்தகைய சபையின் வாதப் பிரதிவாதத்தில் அல்லது முடிவில் பங்கு பற்றுதலும் ஆகாது.

14. (1) சபையின் தவிசாளர், சமூகமாயிருந்தால் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகை தராமல் இருக்கின்றவிடத்து சமூகமாயிருக்கும் பணிப்பாளர்கள், அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கு சமூகமாயிருக்கும் பணிப்பாளர்களிலிருந்து ஒருவரைத் தோந்தெடுத்தல் வேண்டும்.

2) பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை (தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் ஆகிய இருபாலாரும் உட்பட) எட்டாக அல்லது எட்டுக்குக் குறைவாக இருக்கின்றவிடத்து, சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் மூன்று பணிப்பாளர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன் சொல்லப்பட்ட பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை எட்டுக்கு மேலாக இருக்கின்றவிடத்து, அது ஐந்து பணிப்பாளர்களாக இருத்தல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தில் தலைமை தாங்குகின்ற ஆளுக்கு, தமது சொந்த வாக்கோடு சேர்த்து அறுதியிடும் வாக்கொன்றும் இருத்தல் வேண்டும்.

(4) இரண்டாம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது, சபையின் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கையாளப்படவேண்டிய விதம் பற்றிய நடவடிக்கை முறையையும் ஒழுங்குபடுத்தலாம்.

15. சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், பணிப்பாளர்களுக்கிடையில் ஏதேனும் வெற்றிடம் அல்லது பணிப்பாளர் ஒருவரின் நியமனத்தில் அல்லது தேர்ந்தெடுத்தலில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் வலிதுடையதாதலற்றல் ஆகாது.

16. (1) சபையானது, அதன் தத்துவங்களையும் கடமைகளையும் வங்கியின் பொது முகாமையாளருக்கு அல்லது வேறு ஏதேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தத்துவம் அல்லது கடமை எதுவும் எவ்வாளுக்குக் கையளிக்கப்படுகின்றதோ, அவ்வாள் ஒவ்வொருவரும் சபையினது பொதுவான அல்லது விசேட பணிப்புகளுக்கு அமைய அவருக்கு கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவத்தைப் பிரயோகித்தல் வேண்டும் அல்லது கடமையைப் புரிதல் வேண்டும்.

17. (1) வங்கியின் இலச்சினையானது, தவிசாளரின் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(2) வங்கியின் இலச்சினையானது சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) வங்கியின் இலச்சினையானது சபையின் இரு பணிப்பாளர்களின் அல்லது சபையின் ஒரு பணிப்பாளரினதும் பொது முகாமையாளரினதும் சமூகத்தில் தவிர ஏதேனும் சாதனத்தில் பொறிக்கப்படுதலாகாது. இவ்விருவரும் தாம் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் III

## நிதி

18. (1) வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம், ஒவ்வொன்றும் பத்து ரூபா கொண்டதும் ஐம்பது மில்லியன் பங்குகளாக பிரிக்கப்பட்டதுமான ஐநூறு மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

(2) பின்வரும் நிறுவனங்களில் ஒவ்வொன்றும், அவையாவன–

(அ) இலங்கை வங்கி:
(ஆ) மக்கள் வங்கி :
(இ) தேசிய சேமிப்பு வங்கி ; அத்துடன்
(ஈ) ஊழியர் சகாய நிதியம்.

வங்கி தாபித்தல் தொடர்பான கூட்டிணைப்புக் கட்டளை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இரு வாரங்களுக்குப் பிந்தாமல், நூற்று இருபது இலட்சம் ரூபாவை விஞ்சாத பணத்தொகை ஒன்றாக இருக்கின்றதும் அமைச்சரினால் தீர்மானிக்கக் கூடியவாறானதுமான அத்தகைய பணத்தொகை கொண்ட உதவு தொகையொன்றை அத்தகைய வங்கியின் ஆரம்ப மூலதனத்துக்கு வழங்குதல் வேண்டும். அத்துடன் அத்தகைய நிறுவனம், அத்தகைய உதவுதொகையின் பயனாக வங்கியின் பங்குதாரர் ஒருவராக வருதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நிறுவனத்துக்கு அதன் உதவு விகிதாசாரத்துக்கு ஏற்ப வங்கியில் பங்குகள் ஒதுக்கீடு செய்யப்படுதலும் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, இச்சட்டத்தின் 47ஆம் பிரிவின் கீழ் பணச்சபையினால் அத்தகைய தேறிய பெறுமதி உறுதி செய்யப்பட்ட பின்னர், உடைமையாக்குகின்ற வங்கியின் அல்லது வங்கிகளின் தேறிய பெறுமதியைக் கருத்திற் கொண்டு, அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பணச்சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையை வங்கியின் ஆரம்ப மூலதனத்துக்கு உதவு தொகையாக அளித்தல் வேண்டும்: அத்துடன் –

(அ) வங்கியொன்று தொடர்பில் அவ்வாறு தீர்மானிக்கப்படும் உதவுதொகை அத்தகைய உடைமையாக்குகின்ற வங்கியின் அல்லது வங்கிகளின் தேறிய பெறுமதிக்குச் சமனான அல்லது குறைவாக இருக்கின்றவிடத்து, அவ்வாறு தீர்மானிக்கப்படும் பெறுமதி வரைக்குமான தேறிய

பெறுமதியானது, அத்தகைய வங்கியின் ஆரம்ப மூலதனத்துக்கு மத்தியவங்கியினால் செய்யப்படும் உதவு தொகையாகக் கருதப்படுதல் வேண்டும், அத்துடன் வழங்கப்பட்டதாகக் கருதப்படும் உதவுதொகை 48ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு கையாளப்படுதல் வேண்டும்;

(ஆ) வங்கியொன்று தொடர்பில் அவ்வாறு தீர்மானிக்கப்படும் உதவுதொகை அத்தகைய உடைமையாக்குகின்ற வங்கியின் அல்லது வங்கிகளின் தேறிய பெறுமதியைவிடக் கூடுதலாக இருக்கின்றவிடத்து அத்தகைய தேறிய பெறுமதி அத்தகைய வங்கியிலுள்ள ஆரம்ப மூலதனத்திற்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உதவு தொகையின் ஒரு பாகமாகப் கருதப்படுதல் வேண்டும். என்பதுடன் மத்திய வங்கி அத்தகைய தேறிய பெறுமதிக்கும் அந்த வங்கிக்காக அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட உதவு தொகைக்கும் இடையேயுள்ள வித்தியாசத்துக்குச் சமமான மேலும் ஒரு பணத்தொகையை உதவுதொகையாக அளித்தலும் வேண்டும்)

(4) மூன்றாம் உட்பிரிவின் செய்யப்பட்ட உதவுதொகையின் பயனாக, மத்திய வங்கி, வங்கியின் பங்குதாரர் ஒருவராக வருதல் வேண்டும் என்பதுடன் அதனால் செய்யப்படும் உதவுதொகையின் விகிதாசாரத்துக்கு ஏற்ப அதற்குப் பங்குகள் ஒதுக்கப்படுதலும் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், பிராந்திய கிராமயி அபிவிருத்தி வங்கியொன்று தாபிக்கப்பட்டிருக்காத குறித்துரைக்கப்பட்டுள்ள பிராந்தியமொன்றுக்கு இச் சட்டத்தின் கீழ் வங்கியொன்று தாபிக்கப்படுகின்றவிடத்து, மத்திய வங்கி, அத்தகைய வங்கி தாபிக்கப்பட்ட தேதியிலிருந்து இரு வாரங்களுக்குப் பிந்தாமல் அத்தகைய வங்கியின் மூலதனத்துக்கு, அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் பணச்சபையினால் தீர்மானிக்கப்படும் பணத்தொகை ஒன்றினை வழங்குதல் வேண்டும் என்பதுடன், அதன் காரணமாக அத்தகைய வங்கியின் பங்குதாரர் ஒருவராக வருதல் வேண்டுமென்பதுடன், அதன் உதவுதொகைகளின் விகிதாசாரத்துக்கு ஏற்ப அத்தகைய வங்கியில் அதற்குப் பங்குகள் ஒதுக்கப்படுதலும் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் பங்குதாரர்கள் தமது தற்றுணிபின்பேரில் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்ட பணத்தொகையை விஞ்சுகின்றவாறு, வங்கியில், அந்த வங்கியின் ஆரம்ப மூலதனத்துக்கு அத்தகைய பங்குதாரர்களால் வழங்கப்படும் உதவுதொகை என்றவாறு, மேலும் மூலதனத்தை அளிக்கலாம் அல்லது பங்குகளைக் கொள்வனவு செய்யலாம்.

19.(1) சபையானது, தாமாகவோ அல்லது பணச் சபையின் விதப்புரையின் மீதோ 18 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளனவும், அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் ஒதுக்கப்படாதனவுமான அத்தகைய பங்குகளை உரிமம்பெற்ற வர்த்தக வங்கி, உரிமம் பெற்ற சிறப்புத் தகுதி பெற்ற வங்கி எதற்கும் அல்லது வேறு எவரேனும் ஆளுக்குச் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நேரத்தில் அல்லது நேரங்களில் அத்தகைய தொகையில் அல்லது தொகைகளில் அத்துடன் அத்தகைய முறையில் வழங்கலாம்.

(2) உரிமம் பெற்ற வர்த்தக வங்கி எதுவும் வங்கியில் பங்குகள் எவற்றையும் கொள்கின்ற விடத்து, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் 17 அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் அத்தகைய பங்குகள் கொள்ளப்படுதல் மற்றும் வைத்திருக்கப்படுதல் தொடர்பில் ஏற்புடையனவாகா.

20.வங்கியின் பங்குதாரர்கள், 18ஆம் பிரிவின் கீழ் வங்கியின் ஆரம்ப மூலதனத்துக்கு உதவுதொகைகள் அளித்த பங்குதாரர்கள் உட்பட, இன்னோராளுக்குத் தமது பங்குகளைக் கைமாற்றுவதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

21.வங்கி, அரசாங்கத்திடமிருந்து காலத்துக்குக் காலம் கடன் பெறலாம். அத்துடன், அரசாங்கம், காலத்துக்குக் காலம் வங்கிக்குத் திரட்டு நிதியத்திலிருந்து மத்திய வங்கி ஊடாக, அரசாங்கத்தினால்

தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கமைய அரசாங்கத்தினால் அங்கீகாரம் வழங்கப்படும் பணத்தொகை எதனையும் வழங்கலாம்.

22.வங்கியானது, அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் அளிக்கப்பட்ட பணச்சபையின் முன்னங்கீகாரத்துடன் காலத்துக்குக் காலம், ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்தோ அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள எத்தன்மைத்தான வேறு ஏதேனும் மூலத்திலிருந்தோ ஏதேனும் பணத்தொகையை, அதன் மீதான வட்டி மற்றும் அதன் மீளக் கொடுப்பனவு தொடர்பில் அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் பணச்சபையினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளின் மேல் கடனாகப் பெறலாம்.

23.வங்கி, ஒரு பொது ஒதுக்கு நிதியத்தைத் தாபித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நிதியத்தில் ஒவ்வோராண்டும் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அதன் வருடாந்த இலாபங்களின் அத்தகைய சதவீதத்தை வரவு வைத்தலும் வேண்டும்.

24.வங்கி, வாரத் தனிசுகளுக்கும் சந்தேகத்துக்கு இடமான தனிசுகளுக்கும் என ஒரு விசேட ஒதுக்கு நிதியத்தை தாபித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நிதியத்தில் ஒவ்வோராண்டும், சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அதன் வருடாந்த இலாபங்களின் அத்தகைய சதவீதத்தை வரவு வைத்தலும் வேண்டும்.

25.(1) வங்கி, "அபிவிருத்தி நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்றைத் தாபித்துப் பேணுதல் வேண்டும். அத்துடன், அது அத்தகைய நிதியத்தில் ஒவ்வோராண்டும் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அதன் வருடாந்த இலாபங்களின் அத்தகைய சதவீதத்தையும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மூலங்களிடமிருந்து மானியங்களாக அல்லது நன்கொடைகளாகப் பெறப்படும் எவையேனும் பணங்களையும் வரவில் வைத்தல் வேண்டும்.

(2) அபிவிருத்தி நிதியத்தில் வரவு வைத்திருக்கப்படும் பணங்கள் பின்வருவனவற்றுக்குப் பயன்படுத்தப்படலாம்;-

(அ) நீண்டகால நோக்கில் சிறந்த பயன்தரக் கூடிய சாத்திய கூறுகொண்ட மிகுந்த அபாயம் கொண்ட தொழில் முயற்சிகளுக்கு நிதியுதவி வழங்குதல் அல்லது அவற்றில் ஒப்புரவுப் பங்குகளைக் கொள்வனவு செய்தல்.

(ஆ) வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு, வங்கியின் செயற்பாடுகளுக்கு இயைபான தொழில்நுட்ப மற்றும் வேறு நிபுணத்துவத்தைக் கிடைக்கக்கூடியதாகச் செய்வதற்கு அவற்றைப் பெறுதல்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலத்திலிருந்து பெறப்பட்டதும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் நிதியத்தின் வரவில் வைக்கப்பட்டதும் ஏதேனும் மானியத்தை அல்லது நன்கொடையைக் கொண்டதுமான பணங்கள், அத்தகைய மானியம் அல்லது நன்கொடை எந்நியதி நிபந்தனைகளுக்கு அமைய வழங்கப்பட்டதோ அந்நியதி நிபந்தனைகளுக்கு இணங்க மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நோக்கங்கள் எவற்றுக்கும் உடனடியாகத் தேவைப்படாதனவும் அபிவிருத்தி நிதியத்தின் வரவில் இருக்கின்றனவுமான அத்தகைய பணங்கள் எவையும் சபையினால் முதலீடு செய்யப்படலாம்.

26.வங்கி பங்காளர்களுக்குப் பங்கு இலாபங்களைக் கொடுப்பனவு செய்யும் நோக்கத்துக்காக, சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அதன் வருடாந்த இலாபங்களின் அத்தகைய சதவீதத்தைப் பயன்படுத்துதல் வேண்டும்.

27.வங்கிக்கு, அதன் தொழில் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இரண்டாண்டு காலப்பகுதியொன்றுக்கு வங்கியின் இலாபங்கள் மற்றும் வருமானம் மீதான வருமான வரிக்கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

28.(1) வங்கியினால் வழங்கப்படும் கடன் எதுவும் பிணைப்பொறுப்பின் மீதும் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு நியதி நிபந்தனைகள் மீதும் இருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் உள்ள எதுவும் எப்படி இருப்பினும், சபையானது எழுத்தில் அதனால் பதிவு செய்யப்படும் காரணங்களுக்காக எவ்விடயங்களில் அத்தகைய பிணைப்பொறுப்பு அவசியமில்லையென வங்கி முடிவு செய்கிறதோ அவ்விடயங்களில் தனது தற்றுணிபின்பேரில் பிணைப்பொறுப்பில்லாமல் கடன்கள் வழங்கலாம்.

## பாகம் IV
## பணியாட்டொகுதி

29.(1) சபையானது வங்கித் தொழில் அல்லது நிதி பற்றி விரிவான அனுபவம் கொண்டவரும்–

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பட்டமொன்றைப் பெற்றவரும், அல்லது

(ஆ) கணக்கியலில், வங்கித் தொழிலில் அல்லது இயைபான வேறு ஏதேனும் துறையில் முழுமையான தகைமைகளைக் கொண்டுள்ளவருமான,

ஆளொருவரை சபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய சேவை நியதி நிபந்தனைகள் மீது வங்கியின் பொது முகாமையாளராக நியமிக்கலாம்.

(2) பொது முகாமையாளர் வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும் அத்துடன் அவர் சபையின் பொதுவான பணிப்புக்கு, மேற்பார்வைக்கு அத்துடன் கட்டுப்பாட்டுக்கு அமைய, வங்கியின் அலுவல்களை நடாத்துதல் வேண்டும். முகாமை செய்தல் வேண்டும், அத்துடன் நிர்வகித்தல் வேண்டும் என்பதுடன் வங்கியின் குறிக்கோள்களை எய்துவதில் வங்கிக்கு உதவி புரிதலும் வேண்டும்.

30.(1) சபை, அதன் பணிகள் திறம்பட நிறைவேற்றப்படுவதற்கு அவசியமானவர்கள் எனக் கருதுகின்ற அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர்கள் அத்தகைய சேவை நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தோரதலும் வேண்டும்.

## பாகம் V
## வங்கிக் கணக்குகளின் கணக்காய்வு

31.(1) வங்கியின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) வங்கியின் பங்குதாரர்களின் ஆண்டுப் பொதுக்கூட்டம் ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவிலிருந்து ஆறு மாதத்திற்குப் பிந்தாமல் நடைபெறுதல் வேண்டும்.

32.(1) சபையானது, வங்கியின் வருமானம், செலவினம், சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பன பற்றியும் அதன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றியும் முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) வங்கியின் ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து ஒரு மாதத்திற்குள் அந்நிதியாண்டு தொடர்பாக வங்கியானது -

(அ) கடைசி வேலை நாளன்று உள்ளபடியான ஐந்தொகையையும்;

(ஆ) ஒரு இலாப நட்டக் கணக்கையும் தயாரித்தல் வேண்டும்

33.(1) வங்கிப் பங்குதாரர்கள் வங்கியின் ஒவ்வொரு ஆண்டுப் பொதுக் கூட்டத்திலும் வங்கியின் கணக்காய்வாளராக தகைமை பெற்ற ஒரு கணக்காய்வாளரை நியமித்தல் வேண்டும் என்பதுடன் அக் கூட்டம் முடிவடைவதிலிருந்து அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டம் முடியும்வரை அவர் பதவி வகித்தலும் வேண்டும்;

ஆயின், 10 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் வங்கியின் முதலாவது பணிப்பாளர் சபை, அதன் முதலாவது கூட்டத்தின் போது, அதன் பின்னரான பங்குதாரர்களின் முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெறுகின்ற வரையில் வங்கியில் கணக்காய்வாளராகப் பதவி வகிப்பதற்கு தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்திற்காக "தகைமைபெற்ற "கணக்காய்வாளர்" என்பது, எக் கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை வரைவு பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அல்லது சட்டத்தினால் தயாரிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் இருந்து அத்தகைய நிறுவனத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றாரோ அக் கணக்காளர் குழுமம் ஒன்று என்று பொருளாகும்.

34.(1) கணக்காய்வாளர் வங்கியின் கணக்குகளை, நிதியை நிதி முகாமையைச் சோதனை செய்தல் வேண்டும் என்பதுடன் அவசியமேற்படுமிடத்து

(அ) இச் சட்டத்தின் அத்துடன் இவை சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க, வங்கியின் வங்கி அலுவலகள் நடாத்தப்பட்டிருக்கின்றனவா ;

(ஆ) சபையினால் கணக்குகள் திருப்திகரமாகப் பேணப்பட்டிருக்கின்றனவா: அத்துடன்

இ) சபையினால் தயாரிக்கப்படும் ஐந்தொகையும் இலாப நட்டக்கணக்கும் உள்ளடங்கலான, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள், கணக்கீடு, நிதி வசதி மதிப்பீடு பற்றிய நெறிகளுக்கு உரிய கவனம் செலுத்தி பரிசீலனைக்குட்பட்ட காலப்பகுதி தொடர்பில் வங்கி அலுவல்கள் பற்றிய உண்மையான நேரிய நோக்கீடு ஒன்றை சமர்ப்பிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றனவா எனப் பரிசீலனை செய்தலும் வேண்டும்.

(2) கணக்காய்வாளர், அவரினால் பரிசீலனை செய்யப்பட்ட கணக்குகள் மீதும் சபையினால் தயாரிக்கப்பட்ட ஐந்தொகை அத்துடன் இலாப நட்டக் கணக்கு என்பவற்றின் மீதம் ஓர் அறிக்கையைத் தயாரித்தல் வேண்டும்.

(3) கணக்காய்வாளரின் அறிக்கை வங்கியின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வங்கியின் பங்குதாரர்கள் முன்னிலையில் வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் எவரேனும் பங்குதாரரினால் பரிசீலனை செய்யப்படுவதற்கு திறந்து வைக்கப்படுதலும் வேண்டும்.

35 (1) வங்கியின் ஒவ்வோர் ஆண்டுப் பொதுக் கூட்டமும், முடிவடைந்ததன் மீது, அத்தகைய கூட்டத்தில் பங்குதாரர்களினால் சீர்தூக்கிப் பார்க்கப்பட்ட பின்வரும் ஆவணங்கள் ஒவ்வொன்றினதும் ஒரு பிரதியை, சபை அமைச்சருக்கு அனுப்பி வைக்கச் செய்வித்தல் வேண்டும். அவையாவன ;-

(அ) ஐந்தொகை

(ஆ) இலாப நட்டக் கணக்கு;

(இ) கணக்காய்வாளர் அறிக்கை; அத்துடன்

(ஈ) எந்த நிதியாண்டு தொடர்பில் வங்கியின் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தனவோ அந் நிதியாண்டின்போது அவ் வங்கியின் செயல் நிறைவேற்றம் பற்றிய விளக்கம் ஒன்றைத் தருவதான சபைத் தவிசாளரின் அறிக்கையொன்று.

(2) வங்கியின் ஐம்பது சதவீதத்திற்குக் குறையாத வழங்கப்பட்ட மூலதனம் அரசாங்கத்திற்கு அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானவிடத்து அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் பாராளுமன்றத்தின் முன்னர் வைக்கப்படுவதற்கு செய்வித்தல் வேண்டும்.

36.ஐந்தொகையிலும், இலாப நட்டக் கணக்கிலும் காட்டப்படவேண்டிய கருமங்களுக்கும், சபையினால் பேணப்பட்ட கணக்குப் புத்தகங்கள் பேணப்படவேண்டிய முறைக்கும் கணக்காய் வாளர்களின் ஊதியம், வங்கியின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான வேறு எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்காக சபையினால் விதிகள் ஆக்கப்படலாம்.

## பாகம் VI
## பொது

37.பின்வரும் எழுத்திலான சட்டங்களின் ஏற்பாடுகள் வங்கிக்கு ஏற்புடையதாகாது;-

(அ) பணம் கடன் வழங்குதல் கட்டளைச்சட்டம் ;

(ஆ) கடன் இணக்கக் கட்டளைச் சட்டம் ; அத்துடன்

(இ) நகை அடைவு பிடிப்போர் கட்டளைச் சட்டம்.

38.வங்கியானது (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச்சட்டத்தின் கருத்தெல்லையினுள் ஓர் அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர் நிலையமாகக் கருதப்படுதல் வேண்டும்.

39.ஒரு கடனுக்கான ஏதேனும் பிணைப் பொறுப்பு தொடர்பில் வங்கியினால் ஆக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்படத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் சாதனம் அல்லது வங்கியினால், வங்கித் தொழில் தொடர்பில் ஆக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனம் அத்துடன் வங்கியின் சார்பாக வேறு எவரேனும் ஆளினால் ஆக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனம், 1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தில் உள்ளது என எப்படியிருப்பினும், அச்சட்டத்தின் கீழ் தீர்வைக் கொடுப்பனவி லிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

40.வங்கியின் பணிப்பாளர், அலுவலர், அல்லது வேறு ஊழியர் ஒவ்வொருவருக்கும், அவரது வேண்டுமென்ற செயலினால் அல்லது தவறுகையால் ஏற்படுவனவற்றைத் தவிர அவரது கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவரால் உறப்படும் எல்லா நட்டங்களுக்கும் செலவுகளுக்கும் எதிராக, வங்கியின் நட்டோத்திரவாதம் அளிக்கப்படுதல் வேண்டும்.

41.(1) வங்கியின் பணிப்பாளர், கணக்காய்வாளர், அலுவலர் அல்லது சேவையாளர் அல்லது முகவர் அல்லது அதன் தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு ஆள் ஒவ்வொருவரும் தமது கடமைகைள ஏற்க முன்னதாக வங்கியினதும் அதன் வாடிக்கையாளர்களினதும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் தொடர்பிலும், எவரேனும், ஆளுடனான அல்லது நிறுவனத்துடனான கணக்கின் நிலைமை தொடர்பிலும், எவரேனும் ஆளுடனான அல்லது நிறுவனத்துடனான கணக்கின் நிலைமைதொடர்விலும் அது தொடர்பான மற்றெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கண்டிப்பாக இரகசியத்தைக் கடைப்பிடிப்பதாகத் தம்மைக் கட்டுப்படுத்தி வெளிப்படுத்துகை ஒன்றில் கையொப்பமிடுதல் வேண்டும்; அத்துடன்

அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது;

i. சபையினால் ;
ii. ஒரு நீதி மன்றத்தினால் ;
iii. அக் கருமங்கள் எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளினால் அல்லது
iv. பணச்சபையினால்;

அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது;

(ஆ) தமது கடமைகளைப் புரிகையில்; அல்லது
(இ) இச் சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகுவதில்,

தவிர, அவரது கடமைகளை நிறைவேற்றுவதில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய வேறு எந்தக் கருமத்தையும் வெளியிடமாட்டாரென அத்தகைய வெளிப்படுத்துகை மூலம் தம்மைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

(2) வங்கியின் பணிப்பாளர், கணக்காய்வாளர், அலுவலர், அல்லது சேவையாளர் அல்லது முகவர் அல்லது அதன் தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு ஆள் ஒவ்வொருவரும், (1) ஆம் உட்பிரிவின் கீழான இரகசியத்தைக் கடைப்பிடிப்பதாகத் தம்மைக் கட்டுப்படுத்திய வெளிப்படுத்துகையை மீறாமல் கேள்விக்கு விடையளிக்க அவரினால் முடியாவிடின் வங்கித் தொழில் சம்பந்தமான ஏதேனும் கேள்விக்கு விடையளித்தலாகாது.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் அவரினால் ஒப்பமிடப்பட்ட ஒரு வெளிப்படுத்துகையை மீறி ஏதேனும் தகவலை வெளிப்படுத்துகின்ற, வங்கியின் பணிப்பாளர், கணக்காய்வாளர், அலுவலர் அல்லது சேவையாளர் அல்லது முகவர் அல்லது அதன் தொழிலில் தொழிக்கமர்த்தப்பட்டுள்ள வேறு ஆள் ஒவ்வொருவரும் இச் சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஒரு நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்துக்கு அத்தகைய குற்றப்பணம் சாதாரண நியாயாதிக்கத்தை பிரயோகிக்கையில் ஒரு நீதிவானால் விதிக்கப்படக் கூடியவாறான ஒரு குற்றப்பணத்தொகையை விஞ்சுவதாகவிருப்பினும் கூட, ஆளாதல் வேண்டும்.

42.இச் சட்டத்தின் கீழ் விதிகள் ஆக்கப்படத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது எவையேனும் கருமங்களுக்காகவும் அல்லது இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் வங்கி பதிற கடமையாக திறமையாக

நிறைவேற்றவும், புரியவும் இயலச் செய்வதற்கு அவசியமான வேறு ஏதேனும் கருமம் தொடர்பிலும் சபை விதிகளை ஆக்கலாம்.

43.வங்கியானது -

(அ) 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினதும் 1990 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டத்தினதும் கருத்தெல்லையினுள்ளும் அதன் நோக்கத்திற்காகவும் ஒரு "கடன் வழங்கும் நிறுவனம்" ஆகவிருத்தல் வேண்டும்;

(ஆ) 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள்அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கருத்தெல்லையினுள்ளும் அதன் நோக்கத்திற்காகவும் ஒரு "வங்கி" ஆகவிருத்தல் வேண்டும்.

(இ) 1998 ஆம் ஆண்டின்30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கருத்தெல்லையினுள்ளும் அதன நோக்கத்திற்காகவும் ஒரு "உரிமம் பெற்ற விசேட வங்கி" ஆகவிருத்தல் வேண்டும் என்பதுடன் கூட்டிணைக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஓர் உரிமம் வழங்கப்படுவதாதலும் வேண்டும். உரிமம் பெற்ற விசேட வங்கிகள் தொடர்பில் அச்சட்டத்தின் கீழ் பணச்சபையினால் வழங்கப்படக் கூடிய அத்தகைய எல்லாப் பணிப்புக்களும் அமைந்ததாதலும் வேண்டும் ;

(ஈ) (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 47அ என்னும் பிரிவின் கருத்தெல்லையினுள் ஒரு "கடன் வழங்கும் நிறுவனம்" ஆகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(உ) 1990ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப்பற்றுச் சீட்டுக்கள் சட்டத்தின் கருத்தெல்லையினுள்ளும் அதன் நோக்கத்திற்காகவும் ஓர் "அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிலையம்" ஆகவிருத்தல் வேண்டும்.

44. (1) இச் சட்டத்தின் (2)ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பிராந்தியத்திற்கு வங்கியொன்று தாபிக்கப்பட்டதும், அவ்வங்கி எந்தக் குறித்துரைக்கப்பட்ட பிராந்தியம் தொடர்பில் தாபிக்கப்படுகின்றதோ அப்பிராந்தியத்தினுள் தொழில் கொண்டுநடாத்தும் எவையேனும் பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கி அல்லது எல்லாப் பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகளும், 45ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டளை வெளியிடப்படு முன்னர், விடயத்திற்கேற்ப அப்பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கியில் அல்லது வங்கிகளில் கேள்வி வைப்புக்களை வைத்திருக்கும் வைப்பாளர்களை, அதற்கென அனுப்பி வைக்கப்படும் பதிவுக் கடிதம் மூலம், அத்தகைய கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள், அத்தகையவைப்பாளர் அத்தகைய கேள்வி வைப்பை சேமிப்பு அல்லது கால வைப்புக்களாக மாற்ற சம்மதமளிக்கிறாரா எனக் கோருதல் வேண்டும்.

(2) பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கி அல்லது வங்கிகள் -

(அ) வைப்பாளர் அத்தகைய கேள்வி வைப்பை சேமிப்பு வைப்பாக அல்லது கால வைப்பாக மாற்றச் சம்மதமளிக்குமிடத்து அல்லது கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் தமது விருப்பத்தைத் தெரிவிக்கத் தவறுகின்றவிடத்து, அத்தகைய கேள்வி வைப்பை சேமிப்பு வைப்பாக அல்லது காலவைப்பாக மாற்றுதல் வேண்டும்; அல்லது

(ஆ) வைப்பாளர், கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் மாற்றுவதற்கு அவரது ஆட்சேபனை தெரிவிக்குமிடத்து, அத்தகைய கேள்வி வைப்பில் வரவிலிருக்கும் பணங்களை வைப்பாளருக்கு மீளளித்தல் வேண்டும்.

## பாகம் VII

### பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் தொழிலை உரித்தாக்கல்

45. (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கூட்டிணைப்புக் கட்டளையொன்றின் மூலம் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பிராந்தியத்திற்கு ஒரு வங்கியை தாபிப்பதன் மீது, (இது இதனகத்துப் பின்னர் "கொள்ளும் வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணச்சபையானது, வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்விதமிருப்பினும், (இதனகத்துப் பின்னர் "உரித்தாக்கற் கட்டளை" யெனக் குறிப்பீடு செய்யப்படும்.) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், நியாயமான நேரத்தினுள் ஆனால் கொள்ளும் வங்கியினால் தொழில் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் கொள்ளும் வங்கிக்கு அத்தகைய வங்கி எக் குறித்துரைக்கப்பட்ட பிராந்தியத்திற்குத் தாபிக்கப்பட்டிருக்கின்றதோ அக் குறித்துரைக்கப்பட்ட பிராந்தியத்தினுள் தொழிற்படுவதும் அல்லது தொழிற்படுவனவுமான ஏதேனும் பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கியினால் அல்லது எல்லாப் பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகளினாலும் (இவை இதனகத்துப்பின்னர் "உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகள்" எனக் குறிப்பிடப்படும்.) கொண்டு நடாத்தப்படுவதும், சொல்லப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ் அது அல்லது அவை கொண்டு நடாத்த அதிகாரமளிக்கப்பட்டதுமான தொழிலை, உரித்தாக்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக "ஏதேனும் அல்லது எல்லா உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளினால் கொண்டு நடாத்தப்படும் தொழில்" என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கும்;

(அ) உரித்தாக்கற் கட்டளைத் தேதிக்கு நேர் முந்திய நாளன்று, உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனம் எல்லாம் (காசு மீதிகள், ஒதுக்கு நிதிகள், முதலீடுகள் அத்துடன் வைப்புக்கள் உட்பட);

(ஆ) உரித்தாக்கற் கட்டளைத் தேதிக்கு முற்போந்த நாளில் உரித்தாக்கல் வங்கியினால் அல்லது வங்கிகளினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தில் அல்லது அதிலிருந்து எழுகின்ற உரிமைகள், தத்துவங்கள், சிறப்புரிமைகள், அதிகாரங்கள் அத்துடன் அக்கறைகள் எல்லாமும் அத்துடன் அத்தகைய உரித்தாக்கல் வங்கியினால் அல்லது வங்கிகளினால், அனுபவிக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம் மீதான ஏதேனும் குத்தகை பற்று உரிமைகளும் ;

(இ) உரித்தாக்கற் கட்டளைத் தேதிக்கு முற்போந்த நாளன்று உளதாகவிருப்பனவும் உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளுக்கான பொறுப்புகள் எல்லாம் ; அத்துடன்

(ஈ) அத்தகைய உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் தொழில் தொடர்பான அல்லது அதனோடிணைந்த, புத்தகங்கள், கணக்குகள் அத்துடன் ஆவணங்கள் எல்லாம்,

46.விடயத்திற்கேற்ப ஏதேனும் அல்லது எல்லா உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் தொழில் கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கிய தேதியிலிருந்து –

(அ) கொள்ளும் வங்கி, உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் உரித்தாக்கப்பட்ட தொழிலைக் கட்டுப்படுத்தலும், உடைமை கொண்டிருத்தலும் வேண்டுமென்பதுடன்,

அத்தகைய உரித்தாக்கல் வங்கியிற் அல்லது வங்கிகளுக்கு உரித்தாக்கப்பட்ட தொழிலின் கைமாற்றம் பெறுபவராக கருதலும் வேண்டும்.; அத்துடன்

(ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 15ஆம் இலக்க, பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விடயத்திற்கேற்ப, எக் கூட்டிணைக்கப்பட்ட கட்டளை அல்லது கட்டளைகளினால் அத்தகைய உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகள் தாபிக்கப்பட்டனவோ அந்தக் கூட்டிணைக்கப்பட்ட கட்டளை அல்லது கட்டளைகள் நீக்கப்பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

47.(1) உரித்தாக்கல் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று ஏதேனும் உரித்தாக்கல் வங்கியினது அல்லது வங்கிகளினது தொழிலின் தேறிய பெறுமதியை நிச்சயிக்கும் நோக்கத்திற்காக, பணச்சபையினது தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரைக் கொண்டு அத்தகைய உரித்தாக்கப்பட்ட தொழிலின் கணக்காய்வொன்றை செய்வித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர், பணச் சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதியினுள் பணச்சபைக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், பணச்சபையானது, அறிக்கையைச் சீர்தூக்கிப்பார்த்து, அத்தகைய அறிக்கையை ஏற்குமுன்னர் அவசியமாயின் அது அவசியமெனக் கருதக் கூடியவாறான, அத்தகைய ஏதேனும் மேலதிகத் தகவலை அல்லது விளக்கங்களை கொடுத்துதவுமாறு, கணக்காய்வாளரைத் தேவைப்படுத்தல் வேண்டும்.

48.(1) உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் தேறிய பெறுமதி, 18ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் ஒரு வங்கியின் ஆரம்ப மூலதனத்திற்கு மத்திய வங்கி அளித்த உதவு தொகையை விஞ்சுவதாக இருக்குமிடத்து, அத்தகைய வங்கி, உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் தேறிய பெறுமதி 47ஆம் பிரிவின் கீழ் பணச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து இரு வாரங்களினுள், அத்தகைய மிகையான பெறுமதிக்கு தொகுதிக் கடன்களை, ஆண்டொன்றுக்கு நூற்றுக்குப் பன்னிரண்டு வீதப்படியான வட்டி சம்பாதித்ததாக, பணச்சபைக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் பணச்சபைக்கு வழங்கப்படும் தொகுதிக் கடன்களை வேறு எவரேனும் ஆளுக்குக் கைமாற்ற பணச்சபை உரித்துடையதாதல் வேண்டும்என்பதுடன், அத்தகைய தொகுதிக் கடன்களை கைமாற்றம் பெறுபவர் அத்தகைய தொகுதிக்கடன்கள் தொடர்பில் பணச்சபைக்குள்ளே அதே உரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட எவையேனும் தொகுதிக்கடன்களை, அத்தகைய தொகுதிக்கடன்கள் வழங்கப்பட்ட தேதியிலிருந்து பத்து ஆண்டுகள் முடிவடைவதன் மீது மீட்பது கொள்ளும் வங்கியின் கடமையாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் பணச்சபைக்கு வழங்கப்படும் தொகுதிக்கடன்களின் அல்லது அதன் ஏதேனும் பகுதியின் பெறுமதிக்குச் சமமான பெறுமதியிலான பங்குகளை சமப்பெறுமதியின் எந்நேரத்திலும் மத்திய வங்கி கொள்ளலாம் என்பதுடன், மத்திய வங்கி அவ்வாறு செய்யத் தீர்மானிக்குமிடத்து, சபையானது அப்பெறுமதிக்கு விகித சமமாக வங்கியில் உள்ள பங்குகளை அதற்குக் குறித்தொதுக்குதல் வேண்டும்.

49.உரித்தாக்கற் தேதியிலிருந்து ;-

(அ) உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளின் உரித்தாக்கப்பட்ட தொழில் பற்றியவையும் அல்லது அது தொடர்பானவையும் உரித்தாக்கற் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையும் அல்லது பயனுள்ளவையும், உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகள் அதற்கு ஒரு திறத்தவராக

உள்ளதும் அல்லது உள்ளவையும் அல்லது உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளின் சார்பில் உள்ளதும் அல்லது உள்ளனவுமான எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், அற்றோணித் தத்துவங்களும், சட்டப் பிரதிநிதித்துவ அளிப்புக்களும், அத்துடன் அத்தகைய தன்மையினவுமான ஏனைய சாதனங்களும் கொள்ளும் வங்கியினால், விடயத்திற்கேற்ப செய்து கொள்ளப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள், உறுதிகள், முறிகள், உடன்படிக்கைகள் அற்றோனித் தத்துவங்கள் சட்ட பிரதிநிதித்துவ அளிப்புக்கள் அல்லது வேறு சாதனங்கள் என்பனவாக உரித்தாக்கல் தேதியிலிருந்து கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளினால் அல்லது அதற்கெதிராக தொடுக்கப்பட்ட வையும் அத்தகைய வங்கி அல்லது வங்கிகளின் உரித்தாக்கப்பட்ட தொழில் பற்றியவையும் அல்லது அது தொடர்பானவையும், உரித்தாக்கற் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையும் எத்தகைய தன்மையினவுமான எல்லா வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும் கொள்ளும் வங்கியினால் அல்லது அதற்கெதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைக ளாகவும் இருப்பனவாக உரித்தாக்கற் தேதியிலிருந்து கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்படலாம் அல்லது குறை வழக்குத் தொடுக்கப்படலாம்;

(இ) உரித்தாக்கற் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அத்தகைய உரித்தாக்கல் வங்கியில் அல்லது வங்கிகளில், ஊழியத்திலிருக்கின்ற உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் அத்தகைய எல்லா அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் கொள்ளும் வங்கியில் ஊழியம் முனையப்படுதல் வேண்டும் என்பதுடன் -

(i) அத்தகைய முனைவு ஏற்கப்படுமிடத்து, அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் தகைமைகளையும் அனுபவங்களையும் கவனத்திற்கொண்டு கொள்ளும் வங்கி நியாயமெனக் கருதுகின்றவாறான அத்தகைய ஊழிய நியதி, நிபந்தனைகளின் மீது அதில் அத்தகைய அலுவலர்களும், சேவையாளர்களும் ஊழியத்திலமர்த்தப்படுதல் வேண்டும்.

(ii) அத்தகைய முனைவு ஏற்கப்படாதவிடத்து, அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும் 50ஆம் பிரிவின் கீழ் தீர்மானிக்கப்படுகின்றவாறான நட்டஈட்டுக் கொடுப்பனவிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

50. உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் நட்டஈடு செலுத்தப்படுவதற்கு உரித்துடையவராக இருக்குமிடத்து, கொள்ளும் வங்கி, தொழில் ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டுத் தொகையைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தீர்மானம், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அத்தகைய அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு இருக்கக் கூடிய ஏதேனும் உரிமைகளைப் பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது.

51. இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள, உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

52. இச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"கடனுதவி" என்பது, எதிர்பாராப் பொறுப்பொன்றை ஏற்றுக் கொள்வதற்கான பாரப் பொறுப்பு உட்பட ஏதேனும் கடன் அல்லது மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது ஏதேனும் கடனை, மேலதிகப்பற்றை அல்லது முற்பணத்தை வழங்குவதற்கான ஏதேனும் எதிர்பாராப் பொறுப்பு என்று பொருளாகும்.

"இலங்கை வங்கி" என்பது, (397 ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கி என்று பொருளாகும்;

"வங்கித் தொழில் நிறுவனம்" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு வங்கியெனப் பொருள்படும்;

"மத்திய வங்கி" என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்.

"கூட்டுறவுச் சங்கம்" என்பது, 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஒரு சங்கம் என்று பொருளாகும் ;

"ஊழியர் சகாய நிதியம்" என்பது, 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சகாய நிதியம் என்று பொருளாகும்;

"தொழில் முயற்சி" என்பது, கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி, கூட்டிணைக்கப் படாதாயினுஞ்சரி எத்தன்மையினதான பெயராலும் அல்லது பதவிப் பெயராலும் அழைக்கப்படினுஞ்சரி ஏதேனும் ஆட்களின் குழு என்று பொருளாகும் என்பதுடன் தனிக் கூட்டுத்தாபனமொன்றை அல்லது தனி உரித்தாண்மையொன்றையும் உள்ளடக்கும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட அல்லது உரிமமளிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒரு வர்த்தக வங்கியென்று பொருளாகும்;

"உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி" என்பது, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட அல்லது உரிமமளிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒரு கம்பனி அல்லது நிறுவனம் என்று பொருளாகும்;

"பணச்சபை" என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை என்று பொருளாகும்;

"தேசிய சேமிப்பு வங்கி" என்பது, 1971ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி என்று பொருளாகும்.

"உரித்தாக்கும் வங்கி அல்லது வங்கிகளின் தேறிய பெறுமதி" என்பது, (47 ஆம் பிரிவின் கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரினால் தீர்மானிக்கக்கூடியவாறான அறவிடப்படமுடியாத சொத்துக்கள் நீங்கலாக) 45ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையின் பயனைக்கொண்டு கொள்ளும் வங்கிக்குக்கு உரித்தாக்கப்பட்ட உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் சொத்துக்களின் பெறுமதியிலிருந்து அக் கட்டளையின் பயனைக் கொண்டு கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் பொறுப்புக்களின் பெறுமதியை கழித்துவரும்பெறுமதி எனப்பொருளாகும்;

"மக்கள் வங்கி" என்பது, 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள்வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி என்று பொருளாகும்.

"பிராந்திய அபிவிருத்தி வங்கி அல்லது வங்கிகள்" என்பது, 1985ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வங்கி அல்லது வங்கிகள் என்று பொருள்படும்;

"பிராந்தியம" என்பது, (392 ஆம் அத்தியாயமான) நிருவாக மாவட்டங்கள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஒன்றோ, பலவோவாய நிருவாக மாவட்டங்கள் என்று பொருளாகும்;

"சிறிய அளவு" என்பது, கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்று தொடர்பில் எந்தக் கருத்திட்டத்தின் நிலையான சொத்துக்களின் பெறமதி நான்கு மில்லியன் ரூபாவுக்குக் குறைவாகவுள்ளதோ அந்தக் கருத்திட்டம் என்று பொருளாகும்.

"உரித்தாக்கப்பட்ட தொழில்" என்பது, உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகள் தொடர்பில் 45ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றின் மூலம் அத்தகைய கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட வங்கியின் அல்லது வங்கிகளின் தொழில் என்று பொருள்படும்.

# 1997 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம்

[1997 ஆம் ஆண்டு யூன் மாதம் 18ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தை தாபிப்பதற்கும்; அதன் தத்துவங்களையும், பணிகளையும் குறித்துரைப்பதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

*1.* இச்சட்டம் 1997 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறானதும் இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான, அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தைத்தாபித்தல்

*2. (1)* (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட வேண்டிய கூட்டுத்தாபனமொன்று தாபிக்கப்பட வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக் கொண்டு, இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பெயரைக் கொண்டு வழக்குத் தொடுக்கலாம்; அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*(3)* கூட்டுத்தாபனத்தின் தலைமையலுவலகம் கொழும்பிலிருத்தல் வேண்டும். பணிப்பாளர் சபை அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கிளை அலுவலகங்கள் கொழும்புக்கு வெளியே இலங்கையிலுள்ள இடங்களில் தாபிக்கப்பட வேண்டும்.

*3. (1)* கூட்டுத்தாபன அலுவல்களின் நிருவாகமும் முகாமையும் (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) இரு பதவி வழி பணிப்பாளர்கள் ; அவர்கள் –

(i) வீடமைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அந்த அமைச்சின் பிரதிநிதி ஒருவர் ;

(ii) திறைசேரிச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஆ) நான்கு பணிப்பாளர்கள்; அவர்களுள்

(i) ஒரு பணிப்பாளர் இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதியொருவராகவிருத்தல் வேண்டும்; அவர், சபையின் கலந்தாலோசனையுடனும் நிதி என்ற விடயத்துக்குப்

பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருமைப்பாட்டுடனும் அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதலும் வேண்டும்;

(ii) ஒரு பணிப்பாளர் வீடமைப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அந்த அமைச்சரின் பிரதிநிதியொருவராகவிருத்தல் வேண்டும்.

(iii) ஒரு பணிப்பாளர், நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதியொருவராகவிருத்தல் வேண்டும்; அவர், சபையின் கலந்தாலோசனையுடனும் நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனும் அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும் ;

(iv) ஒரு பணிப்பாளர் தொழில் என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரது அமைச்சின் பிரதிநிதியாகவிருத்தல் வேண்டும். அவர், சபையின் கலந்தாலோசனையுடனும், தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனும் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

இப் பந்தியின் கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளரொருவர் இதனகத்துப்பின்னர் "பெயர் நியமனப் பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றார்.

(இ) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களின் எண்ணிக்கை கூட்டுத்தாபனத்தில், அரசாங்கம் அல்லது அரசாங்க நிறுவனங்கள் கொண்டிருக்கும் ஒப்புரவு மூலதனப் பங்கிற்கு விகிதாசாரம் கொண்டிருப்பதை நிச்சயிக்கவென ஒன்று அல்லது அதற்குக் கூடிய பணிப்பாளர்கள், 17ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களின் கொடுப்பனவுகள், அந்தப் பிரிவின் கீழ் திருப்பிச் செலுத்தப்பட்டதன்மேல் விடயத்திற்கேற்ப முதலாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அல்லது அதன் பின்னர்வரும் வருடாந்தப் பொதுக் கூட்டங்களில் தங்களது பதவிகளை விட்டு விலகுதல் வேண்டும்.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கூட்டுத்தாபனத்தின் பங்குதாரர் களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு பணிப்பாளர்கள்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்களுள் பெரும்பான்மையோர் எல்லா நேரங்களிலும் இலங்கைப் பிரசைகளாகவிருத்தல் வேண்டும்;

ஆயின், மேலும் தொடக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

இக்காப்பு வாசகத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளரொருவர் இதனத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட பணிப்பாளா" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றார்.

(2) (அ) பெயர் நியமனப் பணிப்பாளரொருவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட அதன் சார்பிலான ஒரு கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்;

(ஆ) அமைச்சர் எந்நேரத்திலும் அதற்கான காரணமெதுவும் காட்டாமல், பெயர் நியமனப் பணிப்பாளரொருவரின் பதவிக்காலம், அவரது பெயர் நியமனக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியாதல் வேண்டும்;

(இ) பந்திகள்(அ) மற்றும் (ஆ) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, பெயர் நியமனப் பணிப்பாளரொருவரின் பதவிக்காலம், அவரது பெயர் நியமனக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியாதல் வேண்டும்;

(ஈ) பெயர்நியமனப் பணிப்பாளரொருவர் இறக்குமிடத்து, பதவியிலிருந்து விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு அவரது இடத்தில் வேறோர் ஆளைப் பெயர் குறித்து நியமிக்கலாம். அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள், அவர் எந்தப் பணிப்பாளர் அடுத்துறுகின்றாரோ அந்தப் பணிப்பாளரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(உ) பெயர் நியமன உறுப்பினரொருவர் சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, அமைச்சர் அவரது இடத்திற் செயலாற்றவென ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கலாம்.

(3) (அ) நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் இருவர் நியமிக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் நடாத்தப்படும் கூட்டுத்தாபனத்தின் முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பதவியை வறிதாக்குதல் வேண்டும். நியமிக்கப்பட்ட இன்னும் இரண்டு பணிப்பாளர் கள், நியமிக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் நடாத்தப்படும் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பதவியை வறிதாக்குதல் வேண்டும்; எல்லா நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களும் பதவியை வறிதாக்கும்வரை இவ்வாறு நடைபெறுதல் வேண்டும். ஏதேனும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பதவியை வறிதாக்கும் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் பற்றிய தீர்மானம் அத்தகைய ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சீட்டிழுப்பின் மூலம் செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட அதன் சார்பிலான கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்;

(இ) அமைச்சர் எந்நேரத்திலும், அதற்கான காரணமெதுவும் காட்டாமல், நியமிக்கப்பட்ட பணிப்பாளரொருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்;

(ஈ) நியமிக்கப்பட்ட பணிப்பாளரொருவர், இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட சூழ்நிலைகளில் அல்லாது வேறுவகையாகப் பதவியை வறிதாக்குமிடத்து அமைச்சர், அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(உ) நியமிக்கப்பட்ட பணிப்பாளரொருவர் சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்துக்குக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, அவரது இடத்திற் செயலாற்றவென அமைச்சர் வேறோர் ஆளை நியமிக்கலாம்;

(ஊ) அகற்றுகை மூலமல்லாது வேறு வகையாகப் பதவியை வறிதாக்கும் நியமிக்கப்பட்ட பணிப்பாளரொருவர் இப்பிரிவின் அடுத்துறும் ஏற்பாடுகளின் கீழ் பணிப்பாள ரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்;

(4) (அ) கூட்டுத்தாபனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமொன்றில் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளரொருவர் தனது பதவியை வறிதாக்குமிடத்து, அத்தகைய ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருக்கும் பங்குதாரர்கள் அத்தகைய பணிப்பாளரை அடுத்துறுவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஆள் இதனகத்துப் பின்னர் "தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றார்;

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரொருவர் சபைக்கு முகவரியிடப்பட்ட அதன்சார்பிலான கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்;

(இ) கூட்டுத்தாபனத்தின் பங்குதாரர்கள், பங்குதாரர்களின் கூட்டமொன்றில் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரொருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்;

(ஈ) பந்திகள் (ஆ) மற்றும் (இ) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, தேர்தெடுக்கப்பட்ட பணிப்பாளரொருவரின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாதல் வேண்டும்.

(உ) காலங்கழிவதன் மூலம் பதவியை வறிதாக்குகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரொருவர் மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(ஊ) தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரொருவர் இறக்குமிடத்து, பதவியிலிருந்து விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, கூட்டுத்தாபனத்தின் பங்குதாரர்கள் அத்தகைய, பங்குதாரர்களின் கூட்டமொன்றில் அத்தகைய பணிப்பாளரை அடுத்துறுவதற்கென வேறோர் ஆளைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள், அவர் எந்தப் பணிப்பாளரை அடுத்துறுகின்றாரோ அந்தப் பணிப்பாளரின் பதவிக் காலத்தில முடிவுறா தெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்;

(எ) தேர்தெடுக்கப்பட்ட பணிப்பாளரொருவர் சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, கூட்டுத்தாபனத்தின் பங்குதாரர்கள், பங்குதாரர்களின் கூட்டமொன்றில் அவரது இடத்திற் செயலாற்றவென வேறோர் ஆளைத் தேர்ந்தெடுக்கலாம்.

4. (1) ஆளெவரும் கூட்டுத்தாபனத்தின் மூலதனத்தில் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத பெறுமதிக்கான பங்குகளை

(அ) உடையவராகவிருந்தாலொழிய; அல்லது

(ஆ) உடைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளராக அல்லது அலுவலராக விருந்தாலொழிய, 3ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் கீழ் பணிப்பாளரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராதலாகாது

ஆயினும், எவ்வாறாயினும், 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும், முதலாவது பணிப்பாளர்கள் பொதுமக்களுக்குப் பங்குகள் முதலாவதாக வழங்கப்பட்டபின் இரண்டு மாதங்கள் கழியும்வரை, இவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமைகளைக் கொண்டிருக்குமாறு தேவைப்படுத்தப்படுதலாகார்.

(2) ஆளொருவர் –

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது மாகாணசபை உறுப்பினரொரு வராக அல்லது உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது வரின்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் அலுவலரொருவராக அல்லது ஊழியர் ஒருவராக இருப்பின் அல்லது வரின்;

(இ) இலங்கையில் அல்லது வேறொரு நாட்டில் வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்ற ஒருவராக அல்லது வங்கி முறிந்தவராக

வெளிப்படுத்தப்பட்டுள்ள ஓர் ஆளாக இருந்து, பொறுப்பு; விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்ற ஒருவராக அல்லது வங்கி முறிந்தவராக இருப்பின்;

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றவராக இருப்பவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின்;

(உ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள நீதிமன்றமொன்றில் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவித்துள்ள ஒருவராக அல்லது அனுபவிக்கின்றவராக இருப்பின்,

அவர், பணிப்பாளரொருவராக பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப் படுவதற்கு அல்லது பணிப்பாளர் ஒருவராக பதவியில் தொடர்ந்திருப்பதற்கு தகைமை இழந்தவராதல் வேண்டும்.

5. (1) பணிப்பாளர் தங்கள் மத்தியிலிருந்து சபையின் தவிசாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபைக்கு முகவரியிடப்பட்ட கடிதமொன்றின் மூலம் தவிசாளர் தமது பதவியை விட்டு விலகலாம்

(3) சபை, தீர்மானம் ஒன்றின் மூலம் தவிசாளரைப் பதவியிலிருந்து விலக்க முடியும்.

(4) (2) ஆம் (3) ஆம் உப பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தவிசாளரது பதவிக்காலம் சபையில் அவரது அங்கத்துவத்துக்கான காலப்பகுதியாக இருத்தல் வேண்டும்.

(5) சுகயீனம், இலங்கைக்கு வெளியே தங்கியிருத்தல் காரணமாக அல்லது வேறு காரணங்கள் காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைத் தவிசாளர் தற்காலிகமாக ஆற்ற முடியாதிருந்தால், அவரது இடத்தில் செயலாற்றவென பணிப்பாளர்கள், தங்கள் மத்தியிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

6. (1) சபையின் சகல கூட்டங்களுக்கும் தவிசாளர் தலைமை வகிப்பார். சபையின் எந்தக் கூட்டத்திற்காவது தவிசாளர் சமுகமளிக்காவிட்டால், அத்தகைய கூட்டத்திற்குச் சமுகமளித்துள்ள பணிப்பாளர்கள் தங்கள் மத்தியிலிருந்து ஒருவரை அந்தக் கூட்டத்தின் தலைவராகத் தெரிவுசெய்வர்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்து ஆதல் வேண்டும்.

(3) ஏதேனும் சபைக் கூட்டத்தில் தவிசாளர் அவரது சொந்த வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

(4) சபையின் கூட்டமொன்றினைப் பற்றிய அறிவித்தலைப் பெறுவதற்கு அப்போதைக்கு உரித்துடையவரான எல்லாப் பணிப்பாளர்களாலும் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான தீர்மானமொன்று முறையாகக் கூட்டப்பட்டு, நடாத்தப்பட்ட சபைக் கூட்டமொன்றில் நிறைவேற்றப் பட்டிருந்த அத்தகைய தீர்மானமொன்றைப் போன்று செல்லுபடியாதலும் பயனுறுதியுடையததாலும் வேண்டும்.

(5) இச் சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கமைய சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை மேற்கொள்ளுதல் தொடர்பிலுமான நடவடிக்கை முறைகளை ஒழுங்குபடுத்தலாம்.

(6) கூட்டுத்தாபனத்தின் பங்குதாரர்களால் அத்தகைய பங்குதாரர்களின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேதனம் எல்லாப் பணிப்பாளர்களுக்கும் அல்லது அவர்களுள் எவருக்கும் செலுத்தப்படுதல் வேண்டும்.

7. சபையால் செய்யப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள பணிப்பாளர் ஒருவர் அத்தகைய அக்கறையின் தன்மையை சபைக் கூட்டமொன்றில் வெளியிடுதல் வேண்டும். வெளிப்படுத்துகை சபையின் கூட்டக்குறிப்புகளில் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பணிப்பாளர் அத்தகைய ஒப்பந்தம் தொடர்பில் ஏதேனும் தீர்மானத்தில் அல்லது முடிவில் பங்கெடுத்தலாகாது.

8. பணிப்பாளர்சபை இச்சட்டத்தின் கீழான அல்லது வேறேதேனும் சட்டத்தின் கீழான தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிக்கலாம். நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம் என்பதுடன், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை நிருவகிப்பதற்கும், முகாமைசெய்வதற்கும் அவசியமான எல்லாச் செயல்களையும் காரியங்களையும் புரியவும் செய்யலாம்.

9. சபையானது, அதன் எவையேனும் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் மூன்று பணிப்பாளர்களுக்குக் குறையாதோரைக் கொண்ட அதன் ஏதேனும் குழுவுக்குக் கையளிக்கலாம். சபையானது அத்தகைய ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும் அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம். நிறைவேற்றலாம் அல்லது புரியலாம்.

10. (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை சபையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை இரண்டு பணிப்பாளர்களின் முன்னிலையிலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது. இவர்களிருவரும் தாங்கள் சமூகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

11. சபை உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்றுள்ளது என்ற காரணத்தினால் அல்லது அதன் எவரேனும் உறுப்பினர்களின் பெயர் நியமனத்தில், நியமனத்தில் அல்லது தேர்ந்தெடுத்தலில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் சபையின் அல்லது அதன் ஏதேனும் குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாதலோ அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது.

## பாகம் II

### கூட்டுத்தாபனத்தின் பணிகளும், தத்துவங்களும்

12. கூட்டுத்தாபனத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:

(அ) இச்சட்டத்தின் கீழ் அமைச்சர் விதிக்கக்கூடியவாறான அத்தகைய வழிகாட்டிகளுக்கிணங்க வீடமைப்பு நோக்கங்களுக்காகவும் வதிவிட ஆதனத்தை மீட்பதற்காகவும் தனியாட்களுக்கும் வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனங்களுக்கும் கடன்களும் அத்துடன் வேறுவகையான நிதி உதவியும் அளித்தல்.

(ஆ) வீடமைப்பு அபிவிருத்தியை அவற்றின் குறிக்கோள்களாகக் கொண்டுள்ள கம்பனிகளில் ஒவ்வொரு விவரணத்திலுமான பங்குகளுக்கும், பிணையங்களுக்கும் ஒப்பப்பணம் செலுத்துதலும் அவற்றைக் கொள்வனவு செய்தலும்;

(இ) வீடமைப்புடன் தொடர்புடைய உள்ளகவமைப்பின் அபிவிருத்தியில் ஈடுபடுதலும் அதனை ஊக்குவித்தலும்;

(ஈ) வீடமைப்புத் திட்டங்களில் வாழும் ஆட்களுக்கு வாழ்வசதிகளையும், ஏனைய வசதிகளையும் ஏற்பாடு செய்தல்.

(உ) வீட்டு நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ள தனியாட்களுக்கும் நிறுவனங்களுக்கும் சட்ட, பொறியியல், கட்டிடக்கலை, நில அளவை, மற்றும் வேறு ஆதார சேவைகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல்;

(ஊ) நிர்மாணத் தொழில் நுட்பங்கள், கட்டிடப்பொருட்கள், மற்றும் வீடமைப்பு, மனிதக் குடியிருப்பு தொடர்பான வேறு கருமங்கள் என்பனமீது ஆய்வுகளையும் மதிப்பீடுகளையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொள்ளுதல்;

(எ) வீடமைப்பு நோக்கங்களுக்குக் கடன் வசதியளிக்கும் நோக்கத்திற்காக மூலவளங்கைளத் திரட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமைத்தல் ;

(ஏ) சமுதாயத்தின் பொருளாதார ரீதியில் வாய்ப்பில்லாத பிரிவினர்களுக்கு வீடமைப்பு வசதியை அளிப்பதற்கான செயற்றிட்டங்களை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்தலும்;

(ஐ) வீடமைப்பு தொடர்பிலான விடயங்கள் பற்றி பயிற்சித் திட்டங்களையும், கருத்தரங்குகளையும், ஆய்வரங்குகளையும் நடாத்துதல்.

(ஒ) வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனங்களுக்கு நியம சாதனங்களையும் ஆவணங்களையும் தயாரித்தல் தொடர்பான உதவி உட்பட தொழில்நுட்ப முகாமைத்துவ உதவி வழங்குதல்;

(ஓ) அரசாங்கத்தின் அல்லது மத்திய வங்கியின் முகவரொருவராகச் செயற்படுதல்;

(ஔ) வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனங்களின் நிதி சார்ந்த கடப்பாடுகளுக்கு உத்தரவாதமளித்தலும் அத்துடன் வீடைமப்பு நிதிக் கூட்டுத்தாபனங்களினதும் வீடமைப்பு அபிவிருத்தியை அவற்றின் குறிக்கோளாகக் கொண்டுள்ள கம்பனிகளினதும் பங் குத் தொகுதிப் பங்குகள், முறிகள், தொகுதிக்கடன் முறிகள், பிணையங்கள் என்பவற்றின் வழங்கீட்டை பொதுமக்கள் கொள்வனவு செய்யாதவிடத்து கொள்வனவு செய்தலும் ;

(க) ஏதேனும் வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனத்தினால் வேறு எவரேனும் ஆளுடன் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் ஈட்டின் கீழ் அத்தகைய வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனத்தின் உரிமைகளைக் கொள்வனவு செய்தல்.

13. சபையானது, அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக –

(அ) தனியாட்களுக்கும், வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனங்களுக்கும் கடன்களை அல்லது நிதியுதவியை வழங்குவதற்கும்;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும் அல்லது வாடகைக்கு எடுப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் ஈடுவைப்பதற்கும் அல்லது வேறு வகையில் கையுதிர்ப்பதற்கும்;

(இ) அந் நோக்கத்திற்காக அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது அதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் மூலமாகவோ அல்லது முகவர் மூலமாக செய்து கொள்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் ;

(ஈ) அத்தகைய நோக்கத்திற்கு அவசியமாகக் கூடியவர்களான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்துவதற்கும்;

(உ) அதன் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனம், பதவியுயர்வு, வேதனம் ஒழுங்காற்றுக்கட்டுப்பாடு, அவர்களுக்கு லீவு வழங்குதல் என்பன உட்பட அவர்கள் தொடர்பில் விதிகளை ஆக்குவதற்கும்;

(ஊ) அதன் அலுவலர்களுக்கும், சேவையாளர்களுக்கும் ஒரு சேமலாபநிதியத்தை அல்லது ஓய்வூதியத் திட்டத்தைத் தாபிப்பதற்கும் அத்தகைய நிதியத்திற்கு அல்லது திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துவதற்கும் அத்துடன் அத்தகைய அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் நலன்புரி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் ;

(எ) கூட்டுத்தாபனத்தால் ஏற்பாடு செய்யப்படும் எவையேனும் சேவைகளுக்கு அறவீடு செய்வதற்கும்;

(ஏ) வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனங்களுக்கும் வழங்கப்படும் எவையேனும் கடன்கள், நிதி வசதிகள் என்பவற்றிற்கு உத்தரவாதமளிப்பதற்கும்;

(ஐ) வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனங்களினதும், வீடமைப்பு அபிவிருத்தியைத் தமது குறிக்கோளாகக் கொண்ட கம்பனிகளினதும் பங்குத்தொகுதிகள், பங்குகள், முறிகள், தொகுதிக்கடன் முறிகள், அத்துடன் பிணைப் பொறுப்புக்கள் என்பவற்றை வழங்குவதற்குப் பொறுப்பேற்பதற்கும்;

(ஒ) சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் பொது மக்களிடமிருந்து தவணை வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுவதற்கும், அத்தகைய வைப்புக்கள் மீது வட்டி செலுத்துவதற்கும்;

(ஓ) கூட்டுத்தாபனம் தகுந்ததென எண்ணக்கூடியவாறான அத்தகைய பிணைப் பொறுப்புக்களில் அதன் நிதியங்களை முதலீடு செய்வதற்கும் ;

(ஔ) நம்பகமான நிதி முறைமை என ஏற்றங்கீகரிக்கப்பட்டவையும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டவையுமான நியதி நிபந்தனைகள் மீது பணத்தைக் கடனாகப் பெறுதல்;

(க) கொடைகள், மானியக் கொடைகள் அத்துடன் நன்கொடைகள் என்பவற்றைக் காசாகவோ அல்லது வேறு வகையாகவோ பெறுதற்கும் அவற்றை அத்தகைய நோக்கங்களுக்காகக் பிரயோகிப்பதற்கும் ;

தத்துவமுடையதாதல் வேண்டும்.

## பாகம் III

### கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களும் பணியாட்டொகுதியினரும்

14. (1) அமைச்சரின் முற்கூட்டிய எழுத்து மூலமான அங்கீகாரத்துடன், கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதியினருக்கென சபையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளம், ஏனைய கொடுப்பனவுகளுடன் பொது முகாமையாளர் ஒருவரை சபை நியமிக்கும்.

(2) பொது முகாமையாளர், கூட்டுத்தாபனத்தின் முழுநேர அலுவலராகப் பணியாற்றுவதோடு, கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(3) சபை, வேறு விதமாகப் பணித்தாலேயொழிய, சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் பொதுமுகாமையாளர் சமுகமளித்திருத்தல் வேண்டும். ஆனால் அவருக்கு வாக்களிக்கும் உரிமை இருத்தல் ஆகாது.

15. (1) இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அவசியமென சபை கருதுகின்றவாறான அத்தகைய ஏனைய அலுவலர்கள், சேவையாளர்கள் ஆகியோரை சபை நியமிக்கலாம்.

(2) அரசுக்குச் சொந்தமான கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான சம்பள அளவுத் திட்டங்களும், படிகளும் தொடர்பிலான ஏதேனும் அரசாங்கச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக இத்தகைய அலுவலர்கள், சேவையாளரின் சம்பளங்களையும் படிகளையும் காலத்துக்குக் காலம் சபை தீர்மானிக்கலாம் ; அத்துடன் மாற்றலாம்.

(3) பிணைப் பொறுப்புக் கொடுத்துதவ வேண்டும் என சபையினால் தேவைப்படுத்தப்படும் ஒவ்வோர் அலுவலரும் அல்லது சேவையாளரும் அவரது கடமைகளை உரியமுறையில் நம்பிக்கையோடு புரிவதற்காக சபையின் திருப்திக்கேற்ப பிணைப்பொறுப்புக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தினால், வேறு எவரேனும் ஆளுக்கு வழங்கப்பட்ட எத்தகைய கடனும் திருப்பிச் செலுத்தப்படுவது சம்பந்தமாக கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரோ அலுவலரோ சேவையாளரோ உத்தரவாதமளித்தல் ஆகாது.

## பாகம் IV

### நிதி

16. (1) கூட்டுத்தாபனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனமானது. ஒவ்வொன்றும் நூறு ரூபாவைக் கொண்ட இருபது மில்லியன் பங்குகளாகப் பிரிக்கப்பட்ட இரண்டாயிரம் மில்லியன் ரூபாவாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் வழங்கப்பட்ட மூலதனம், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஆயிரம் மில்லியன் ரூபாவாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனமானது, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பங்குகளை வழங்குவதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் மூலதனத்திற்கு உதவுதொகைகளாகப் பணத் தொகைகளைத் திரட்டலாம்.

17.(1) இதன் கீழ் 1ஆம் நிரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள நிறுவனம் ஒவ்வொன்றும், நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்தாண்டுக்குள்ளாக, இதன் கீழான 11ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்குச் சமமானதொரு தொகையைக் கூட்டுத்தாபனத்தின் மூலதனத்திற்கு உதவுதொகையளித்தல் வேண்டும் ;-

| நிரை 1 | நிரை 11 |
|---|---|
| செவன நிதியம் | காசாக ஐந்நூறு மில்லியன் ரூபா |
| தேசிய வீடமைப்பு அதிகாரசபை | காசாக நூறு மில்லியன் ரூபா |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | காசாக ஐம்பது மில்லியன் ரூபா |

தேசிய சேமிப்பு வங்கியானது நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக்குள் காசாக நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு தொகையை கூட்டுத்தாபனத்தின் மூலதனத்திற்கு உதவு தொகையளிக்கலாம்.

(2) வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமாக 401 ஆம் அத்தியாயமான தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கட்டடச் சங்கத்தின் உறுப்பினர்கள் அக் கூட்டுத்தாபனத்திற்கு அதன் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கைமாற்றத் தீமானிப்பதன் மீது அத்தீர்மானத் திகதிக்கு முந்தியநாளன்று, வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தில் பங்குகள் வைத்திருக்கும் ஒவ்வோராளும் வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தில் அந்நாளன்று அவரால் வைத்திருக்கப்பட்ட பங்குகளின் பெறுமதிக்குச் சமமான கூட்டுத்தாபனப் பங்குகள் ஒதுக்கப்பட்டவராதல் வேண்டும்.

(3) பதினாறாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பங்குகளின் மீதி, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் பின்னர், சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய விதத்தில் பொது மக்களுக்கு விற்பதற்காக முனைவு செய்யப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு பங்குகளின் விற்பனை பூர்த்திசெய்யப்பட்ட பின்னர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் கூட்டுத்தாபனத்தின் மூலதனத்திற்கு அத்தகைய நிறுவனங்களால் எந்த உதவுதொகைகள் செய்யப்பட்டனவோ அந்த உதவு தொகைகளை கூட்டுத்தாபனம் அந்த உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு மீளளிப்புச் செய்தல் வேண்டும்.

(5) (1) கூட்டுத்தாபனமானது -

(அ) ஏதேனும் கம்பனியின் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது தனியாள் ஒருவரின் பெயரில், எவையேனும் பங்கு ஒதுக்கலானது அல்லது பதிவு செய்தலானது, அத்தகைய கம்பனி கூட்டிணைக்கப்பட்ட குழு அல்லது தனியாள் கூட்டுத் தாபனத்தின் வழங்கப்பட்ட மொத்தப் பங்கு மூலதனத்தின் பதினைந்து நூற்றுவீதத்திற்குக் கூடுதலாகச் சொந்தமாக வைத்திருப்பதனை விளைவிக்குமாயின்,

(ஆ) கம்பனி ஒன்றின் அல்லது பின்வருவனவான ஏதேனும் ஒன்றின் அல்லது பலவற்றின் பெயரில்-

(i) அதன் எவையேனும் துணைக் கம்பனிகள்

(ii) அதன் கொளிக் கம்பனி;

(iii) அதன் கொளிக் கம்பனியின் துணைக் கம்பனி; அல்லது

(iv) எந்தக் கம்பனியில் அத்தகைய கம்பனி அல்லது அதன் துணைக் கம்பனி அல்லது அதன் கொளிக் கம்பனி அல்லது கொளிக் கம்பனியின் துணைக் கம்பனி கணிசமானதோர் அக்கறையை வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பனி.

எவையேனும் பங்குகள் ஒதுக்கானது அல்லது பதிவு செய்தலானது அத்தகைய கம்பனி அத்துடன் (i) ஆம், (ii) ஆம், (iii) ஆம், (iv) ஆம் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒன்றோ அல்லது பலவோவான ஆட்கள் கூட்டுத்தாபனத்தின் வழங்கப்பட்ட மொத்தப் பங்கு மூலதனத்தின் பதினைந்து நூற்றுவீதத்திற்கு மேற்படக் கூட்டுமொத்தமாகச் சொந்தமாக வைத்திருப்பதனை விளைவிக்குமாயின்;

(இ) தனியாள் ஒருவரின் அத்துடன் பின்வருவோரான ஒருவரின் அல்லது பலரின் பெயரில்,

(i) அவரது நெருங்கிய

(ii) அவர் அல்லது அவரது நெருங்கிய உறவினர் கணிசமானோர் அக்கறையைக் கொண்டிருக்கும் கம்பனியொன்று

(iii) உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்றின் துணைக் கம்பனியொன்று

(iv) உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்றின் கொளிக் கம்பனியொன்று;

(v) உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்றின் ஒரு கொளிக்கம்பனியின் துணைக் கம்பனியொன்று ;

(vi) உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்று அல்லது அதன் துணைக் கம்பனி அல்லது அதன் கொளிக்கம்பனி அல்லது அதன் கொளிக்கம்பனி யொன்றின் துணைக் கம்பனியொன்று எந்தக் கம்பனியில் கணிசமானதோர் அக்கறையைக் கொண்டுள்ளதோ அந்தக் கம்பனியொன்று, அல்லது ;

(vii) கம்பனியொன்று தவிர்ந்த எந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றில் அத்தகைய தனியாள் அல்லது அவரது நெருங்கிய உறவினர் கணிசமான அக்கறையொன்றைக் கொண்ருக்கின்றாரோ அந்தக் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று.

எவையேனும் பங்கு ஒதுக்கலானது அல்லது பதிவு செய்தலானது அத்தகைய தனியாள் அத்துடன் (i) ஆம், (ii) ஆம், (iii) ஆம், (iv) ஆம், (v) ஆம், (vi) ஆம், அத்துடன் (vii) ஆம் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்படும் ஆள் கூட்டுத்தாபனத்தின் வழங்கப்பட்ட மொத்தப் பங்கு மூலதனத்தின் பதினைந்து நூற்று வீதத்திற்கு மேற்படக் கூட்டுமொத்தமாகச் சொந்தமாக வைத்திருப்பதை விளைவிக்குமாயின்;

அத்தகைய பங்கு ஒதுக்கலைச் செய்தலோ அல்லது பங்கு பதிவு செய்தலோ ஆகாது.

ஒரு கம்பனி அல்லது தனியாள் அத்தகைய கம்பனி அல்லது தனியாள் விடயத்துக்கேற்றாற் போல அத்தகைய கம்பனியில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவில் ஐம்பத்தொரு நூற்றுவீதத்திற்குக் கூடுதலான பங்குகளைச் சொந்தமாக வைத்திருக்குமிடத்து, இவ்வுட்பிரிவின் கருத்துக்குள்ளான கம்பனியொன்று தவிர்ந்ததான கம்பனியொன்றில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணிசமான ஓர் அக்கறையைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக –

"நெருங்கிய உறவினர்" என்பது ஆளொருவர் தொடர்பாக பெற்றோருள் ஒருவர் வாழ்க்கைத் துணை அல்லது அந்த ஆளின் பிள்ளை அல்லது அந்த ஆளின் ஒரு பிள்ளையின் வாழ்க்கைத்துணை என்ற பொருளாகும் ;

"துணைக் கம்பனி" என்பது, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தினுள் அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

18. கூட்டுத்தாபனத்தின் பங்கு கொண்டிருப்பவர் எவரதும் பொறுப்பானது, அவரது பங்குகள் மீது, செலுத்தப்படாத தொகை ஏதுமிருப்பின் அந்தத் தொகைக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

19. இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழும், அவற்றிற்கிணங்கவும், கூட்டுத்தாபனமானது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கும், அத்துடன் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பணத் தொகைகளை இலங்கைக்கு உள்ளேயோ வெளியேயோ கடன் மூலமாக அல்லது வேறு வகையாகத் திரட்டலாம்.

20. கூட்டுத்தாபனமானது காலத்திற்குக் காலம் அரசாங்கத்திடமிருந்து கடன் பெறலாமென்பதுடன், அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தைனகளுக்கும் அமைவாக அரசாங்கமும் ஏதேனும் பணத்தொகையைக் காலத்திற்குக் காலம் திரட்டு நிதியத்திலிருந்து கடன் கொடுக்கலாம்.

21. கூட்டுத்தாபனமானது, பணச்சபையின் அங்கீகாரத்துடன் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள எத்தன்மைத்தான வேறேதேனும் மூலத்திலிருந்து, கூட்டுத்தாபனத்திற்கும் அத்தகைய அரசாங்கத்திற்கும் அல்லது அத்தகைய மூலத்திற்குமிடையிலான ஒப்பந்தத்தின் மூலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அதன் மீதிலான வட்டி அதன் மீள்கொடுப்பனவு என்பன மீதான அத்தகைய நியதிகள் நிபந்தனைகள் என்பன மீதிலான ஏதேனும் பணத் தொகைகளைக் காலத்திற்குக் காலம் கடனாகப் பெறலாம்.

22.(1) சபையானது பங்குத் தொகுதி முறிகளையும் பங்குத் தொகுதிகளையும் உருவாக்கலாம் என்பதுடன், அவ்வாறு உருவாக்கப்பட்டு வழங்கப்பட்ட பங்குத் தொகுதி முறிகளும் பங்குத் தொகுதியும் இச்சட்டத்தில் முறையே "வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனப் பங்குத் தொகுதி முறிகள்" அத்துடன் "வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனப் பங்குத் தொகுதி" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனப் பங்குத் தொகுதி முறிகளும், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனப் பங்குத் தொகுதியும், சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதிகள், நிபந்தைனகளுக்கிணங்க வழங்கப்படுதலும் கைமாற்றப்படுதலும் கையாளப்படுதலும் கைமாற்றப்படுதலும் கையாளப்படுதலும் மீட்கப்படுதலும் இல்லாதாக்கப்படுதலும் வேண்டும்.

23.(1) அரசாங்கமானது -

(அ) சபையினால் 22ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டதும் வழங்கப்பட்டதுமான ஏதேனும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத் தொகுதிக்கடன் முறிகள் அத்துடன் ஏதேனும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனப் பங்குத் தொகுதி;

(ஆ) ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்து அல்லது 21ஆம் பிரிவின் கீழான வேறேதேனும் மூலத்திலிருந்து கூட்டுத்தாபனத்தால் திரட்டப்பட்ட ஏதேனும் கடன்,

என்பவற்றின் முழுத் தொகையையும் அவற்றின் மீதான வட்டிக் கொடுப்பனவையும் மீளக் கொடுப்பதற்கு உத்தரவாதம் அளிக்கலாம் .

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் உத்தரவாதத்தை நிறைவேற்று வதற்குத் தேவைப்படும் ஏதேனும் தொகை திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் உத்தரவாதம் ஒன்று வழங்கப்பட்ட பின்னர் உடனடியாக நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அத்தகைய உத்தரவாதம் பற்றிய கூற்றொன்றைப் பாராளுமன்றத்தில் முன் வைத்தல் வேண்டும்.

(4) ஏதேனும், அத்தகைய உத்தரவாதத்தை நிறைவேற்றுவதில் திரட்டு நிதியத்திலிருந்து ஏதேனும் தொகையானது செலுத்தப்படுமிடத்து, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அத்தகைய தொகையானது அவ்வாறு செலுத்தப்பட்டுவிட்டது என்னும் கூற்றொன்றை பாராளுமன்றத்தின் முன்வைத்தல் வேண்டும்.

24.(1) கூட்டுத்தாபனத்தால் –

(அ) கூட்டுத்தாபனத்தின் மூலதனத்திற்கான உதவு தொகைகளாக;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பணிகளை நிறைவேற்றுகையில்;

(இ) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிக்கையிலும், புரிகையிலும்

பெறப்பட்ட எல்லாப் பணத் தொகைளும் கூட்டுத்தாபனத்தின் நிதியங்களில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்

(2) (அ) கூட்டுத்தாபனத்தின் பணிகளை நிறைவேற்றுதல்

(ஆ) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித்தல், புரிதல்;

என்பவற்றில் இருந்து எழுகின்ற அல்லது அவை தொடர்பாக உறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் எல்லா நிதிசார் ஈடுபாடுகளும் அல்லது பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தின் நிதியங்களின் மீது பொறுப்பாக்கப்படுதல் வேண்டும்.

25.ஏதேனும் ஆண்டிற்கு விதித்துரைக்கப்படக்கூடியவாறாக பத்து நூற்றுவீதத்திற்கு மேற்படாத அத்தகைய இலாப நூற்றுவீதத்தை கூட்டுத்தாபனத்தின் ஒதுக்குகளுக்கு மாற்றிய பின்னர் தவிர அதன் சார்பில் விதித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க பெறுமானத் தேய்வுக்கு ஏற்பாடு செய்ததன் பின்னர் பெறப்பட்ட அவ்வாண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் இலாபங்களிலிருந்து ஏதேனும் நிதியாண்டிற்காக பங்கிலாபம் எதுவும் கூட்டுத்தாபனத்தினால் வெளிப்படுத்தப்படுதல் அல்லது செலுத்தப்படுதல் ஆகாது;

ஆயின், இப்பிரிவிலுள்ள எதுவும் அவ்வாண்டில் அதன் இலாபங்களின் கூடுதலான நூற்று வீதம் ஒன்றை அதன் ஒதுக்குகளுக்கு தன்னிச்சையாக கைமாற்றுவதிலிருந்து கூட்டுத்தாபனத்தைத் தடுப்பதாகக் கருதப்படுதலாகாது.

## பாகம் V

### கணக்குகளும் கணக்காய்வும்

26.(1) சபையானது சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கூட்டுத்தாபனத்தின் பங்குதாரர்களின் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

ஆயின் கூட்டுத்தாபனத்தின் வழங்கப்பட்ட பங்குகளிற் பெரும்பாலான பகுதியை இலங்கை அரசாங்கம் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனம் கொண்டிருந்தால் கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

(3) பங்குதாரர்கள் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளருக்கு செலுத்தப்படற்பாலதான ஊதியத்தை தீர்மானித்தல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளருக்கு கூட்டுத்தாபனத்தின் வருடாந்த ஐந்தொகையின் பிரதி ஒன்று விநியோகிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஐந்தொகையை அது தொடர்பிலான கணக்குகளுடனும் பணம் கொடுக்கும் சீட்டுடனும் சேர்த்துப் பரிசீலிப்பது அவரது கடமையாதல் வேண்டும். அவர் நியாயமான எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் புத்தகங்களையும், கணக்குகளையும் பணம் கொடுக்கும் சீட்டுக்களையும் அணுகக்கூடியதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்களிடமும் அலுவலர்களிடமும் தமது கடமைகளைப் புரிவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய தகவலையும் விளக்கங்களையும் கோருவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(5) கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர், அவர் அவ்வாறு விரும்பினால், கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் தொடர்ச்சியான கணக்காய்வொன்றைச் செய்யலாம்.

(6) கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த ஐந்தொகை மற்றும் கணக்குகள் மீதான எழுத்திலான அறிக்கையொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிக்கையில், கூட்டுத்தாபனத்தின் புத்தகங்களையும் கணக்குகளையும் அவர் பார்வையிடக் கூடியதாக இருந்ததா இல்லையா என்பதையும் அவரால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் அவர் பெற்றுக் கொண்டாரா அல்லது பெறவில்லையா என்பதையும் அவரது கருத்தில் அத்தகைய கணக்குகள் அவருக்கு வழங்கப்பட்ட அத்துடன் கூட்டுத்தாபனத்தின் புத்தகங்களால் காட்டப்பட்டுள்ளவாறான அவரது தகவல் மற்றும் விளக்கங்களின் சிறந்தவற்றுக்கிணங்க கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் உண்மையானதும் சரியானதுமான நோக்கைக் காண்பிப்பதற்கு ஏற்றவாறு தகுந்த முறையில் வரையப்பட்டிருக்கின்றதா என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

(7) கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளரின் அறிக்கையானது சபைக்கு அவரினால் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(8) சபையானது கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளரின் அறிக்கையின் பிரதி ஒன்றை அத்தகைய அறிக்கை குறிப்பிடுகின்ற ஐந்தொகை அத்துடன் இலாப நட்டக் கணக்கின் பிரதியுடன் சேர்ந்து பங்குதாரர்கள் ஒவ்வொருவருக்கும் அத்துடன் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(9) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(10) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(அ) இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவனத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினராகவுள்ளவரும் அத்துடன் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கென வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டுள்ளவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) குழுமத்தின் ஒவ்வொரு வதிவிடப் பங்காளர்களும் இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவனத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராகவுள்ளவரும், அத்துடன் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கென வழங்கப்பெற்ற சான்றிதழொன்றைக் கொண்டுள்ளவருமான கணக்காய்வாளர்கள் குழுமம் ஒன்று.

என்று பொருள்படும்.

## பாகம் VI

### பொது

*27.(1)* சபையானது இச் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படாத கருமங்கள் பற்றிக் கையாள்வதற்கென விதிகளை ஆக்கலாம்; 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு கம்பனியின் விடயத்தில் அதன் அமைப்பு அகவிதிகளினால் இவை கையாளப்படும்.

(2) இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பங்குதாரர்கள் விசேட தீர்மானத்தின் மூலம் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியைத் திருத்தலாம். அல்லது இல்லாதாக்கலாம் அல்லது அவ்வாறு ஆக்கப்பட்ட விதிகளுக்கு சேர்த்தல்களைச் செய்யலாம்.

இவ்வுட்பிரிவில் "விசேட தீர்மானம்" எனும் சொல்லமைப்பானது அக் கூட்டத்தில் பிரேரிக்கப்படக் கருதப்பட்ட தீர்மானத்தைக் குறித்துரைத்து அதுபற்றி பங்குதாரர்களுக்கு இருபத்தொரு நாட்களுக்குக் குறையாத, அறிவித்தல் முறையாகக் கொடுக்கப்பட்டுள்ளதான பங்குதாரர்களின் கூட்டமொன்றில் நேரிலோ பதிலி மூலமோ வாக்களிப்பதற்கு உரித்துடைய அத்தகைய பங்குதாரர்களின் நாலில் மூன்றிற்குக் குறையாத பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் என்று பொருளாகும்.

*28.* 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள், எக்கருமத்திற்கு இச் சட்டத்தில் அல்லது 27ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியில் ஏற்பாடு எதுவும் இல்லையோ அவ்வேதேனும் கருமம் தொடர்பாகக் கூட்டுத்தாபனத்திற்கு, ஏமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஆயின், கூட்டுத்தாபனமானது அச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படமாட்டாதென்பதுடன் கம்பனிகள் பதிவாளர் கூட்டுத்தாபனம் தொடர்பில் தத்துவம் எதனையும் கொண்டிருத்தலுமாகாது.

*29.* (81ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தினதும் (80 ஆம் அத்தியாயமான) பணம் கடன் கொடுக்கும் கட்டளைச் சட்டத்தினதும் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்திற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதலாகாது.

*30.* கடன் ஒன்றுக்கான பிணைப் பொறுப்பாக முன் வைக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம் கூட்டுத்தாபனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமா அல்லது ஏற்றுக்கொள்ளப் படலாகாதா என முடிவு செய்யும் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனமானது ஏதேனும் உள்ளூர் வீத வரியிடும் அதிகாரசபையின் பெறுமான மதிப்பீட்டு இடாப்புக்களைக் கட்டணம் இல்லாது பார்வையிடுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உரித்துண்டு என்பதுடன், அத்தகைய அதிகாரசபை

38.(1) இச் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் கருமங்கள் தொடர்பில் அல்லது எக் கருமங்கள் தொடர்பாக ஒழுங்கு விதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகிறதோ அக் கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய திகதியன்று அல்லது அத்தகைய திகதி எதுவும், அவ்வாறு குறித்துரைக்கப்படாவிடின் அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் இயன்றளவு விரைவாக, அத்தகைய ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற ஒரு பிரேரணை மூலம் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டு வரப்படுதல் வேண்டும்.

(4) பாராளுமன்றம் அங்கீகரிப்பதற்கு மறுக்கின்ற ஏதேனும் ஒழுங்குவிதி, அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதனதும் வலிதுடைமைக்குப் பங்கமின்றி நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஒழுங்குவிதி நீக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதி, அத்தகைய ஒழுங்குவிதியை அங்கீகரிப்பதற்குப் பாராளுமன்றம் மறுத்த திகதியாதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியானது நீக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதிபற்றிய அறிவித்தலனது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

39. வேறேதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமாக, (401 ஆம் அத்தியாயமான) தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கட்டடச் சங்கத்தின் உறுப்பினர்கள், இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட்டுத்தாபனத்திற்கு கைமாற்றுவதற்கு தீர்மானம் எடுக்கலாம் என்பதுடன் அத்தகைய தீர்மானத்தின் மீது அத்தகைய சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்ட திகதி தொடக்கம் கூட்டுத்தாபனத்திற்கு கைமாற்றப்பட்டன வாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும் அத் திகதியிலிருந்து கலைக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

40. வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் கலைக்கப் பட்டாலும்–

(அ) வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதிக்கு முந்திய திகதிகளில், நீதி மன்றத்தில் விசாரணைக்கென விருக்கும், வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கெதிராக கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு ஆரம்ப அல்லது மேன்முறையீட்டு வழக்கும், நடவடிக்கையும் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட வழக்கு அல்லது நடவடிக்கையென அந்தத் திகதியிலிருந்து கருதப்பட்டு, அத்தகைய வழக்கு அல்லது நடவடிக்கை முடியும்வரை மேற்கொள்ளப்பட்டு தீர்மானத்திற்கமைய செயற்படுத்தப்படும்.

(ஆ) வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதிக்கு முந்திய நாளன்று, தீர்க்கப்படாது இருந்துவரும் ஏதேனும் வழக்கில், கருமத்தில், நடவடிக்கையில் அல்லது காரியத்தில் ஏதேனும்

நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்குச் சாதகமாக அல்லது எதிராக பதியப்பட்டஅல்லது செய்யப்பட்ட ஒவ்வொரு தீர்வையும், கட்டளையும், தீர்ப்பளிப்பும் கலைப்புத் தேதியிலிருந்து கூட்டுத்தாபனத்திற்குச் சாதகமாக அல்லது எதிராகப் பதியப்பட்ட அல்லது செய்யப்பட்ட தீர்வையாக, கட்டளையாக தீர்ப்பளிப்பாக கருதப்படுதல் வேண்டும்.

*41.* *1990* ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 22ஆம் பிரிவு, "வங்கி" என்னும் "வரைவிலக்கணத்தில்" "(165 ஆம்அத்தியாயமான) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(165 ஆம்அத்தியாயமான) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் 1997ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் தாபிக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது

*42.(1)* (*401* ஆம் அத்தியாயமான) தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதிக்கு நேர்முந்திய திகதியில் கடமையாற்றிய ஒவ்வொரு அலுவலருக்கும் சேவையாளருக்கும் கூட்டுத்தாபனத்தில் ஊழியம் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் வேலைக்கமர்த்தப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு அலுவலரும் சேவையாளரும், அத்தகைய அலுவலரும் சேவையாளரும் கூட்டுத்தாபனத்தினரும் உடன்பட்டுக் கொள்ளும் நியதி நிபந்தனைகளுக்கு அமைய அவ்வாறு வேலைக்கமர்த்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தால் வேலைக்கமர்த்தப்படாத வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு அலுவலரும், சேவையாளரும் அவருக்குரிய ஓய்வூதிய நன்மைகளுக்கு மேலதிகமாக அந்த நிறுவனத்தில் அவர் சேவையாற்றிய வருடங்களைக் கருத்திற் கொண்டு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினாற் தீர்மானிக்கப்படும் நட்டஈட்டுத் தொகையையும் பெற்றுக்கொள்வர்.

*43.* இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*44.* இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

"தவிசாளர்" என்பது, சபையின் தவிசாளர் என்று பொருளாகும்;

"பணிப்பாளர்" என்பது, சபையின் பணிப்பாளர் என்று பொருளாகும்;

"ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" என்பது, 1980ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்று பொருளாகும் ;

"வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனம்" என்பது, சட்டத்தினால் தாபிக்கப்பட்டதும் வீடமைப்பு நோக்கங்களுக்கென கடன் வழங்குவதற்கெனத் தத்துவமளிக்கப்பட்டதுமான ஏதேனும் கூட்டுத்தாபனம் எனப் பொருளாகும்;

"உள்ளூர் அதிகார சபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேச சபை என்று பொருள்படும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய சபையினால் அல்லது பிரதேச

சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் ஒத்த அல்லது அவற்றிற்கு நேரொத்த தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் என ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்.

"தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை" என்பது, 1979ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை என்று பொருளாகும்;

"தேசிய சேமிப்பு வங்கி" என்பது, 1971ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி என்று பொருளாகும் ;

"மாகாணசபை" என்பது, அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு மாகாண சபை என்று பொருள்படும்.

"செவன நிதியம்" என்பது, 1979ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியம் என்று பொருளாகும்.

# 1997 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம்

[1997 ஆம் ஆண்டு யூன் மாதம் 18ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## 1981ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*1.* இச்சட்டம், 1997 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்தின் 2ஆம் பிரிவானது, "1981 நவெம்பர் 13" என்னும் சொற்கள் தொடங்கி "ஒவ்வோராளிடமிருந்தும்," என்னும் சொற்கள் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது;-

"(அ) 1981 நவெம்பர் 13 முதல் 1981 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்காகவும் அத்துடன் 1982 சனவரி 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1996 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டுக்காகவும்-

(i) இலங்கையில் தொழில் எதனையும் கொண்டு நடாத்துகின்றவரான ; அல்லது

(ii) இலங்கைக்கு வெளியே ஆற்றப்பட்ட சேவைகளுக்கான கொடுப்பனவு இலங்கையிலிருந்து வழங்கப்படுகின்றவரான; அத்துடன்

(ஆ) 1996 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள் சேவைகள் என்பன மீதான வரிச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டிற்காகவும் –

(i) நிதியளிப்பவராக, பணம் கடன் கொடுப்பவராக அல்லது அடைவு பிடிப்பவராக; அல்லது

(ii) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் அளிக்கப்பட்ட வங்கி ஒன்றின்; அல்லது

(iii) கப்பலொன்றின் சொந்தக்காரராக அல்லது கப்பலொன்றை வாடகைக் கமர்த்துபவராக; அல்லது

(iv) அத்தகைய விற்பனைகள் மீது மொத்த விற்பனை வரவு வரியை விதிக்கின்றதான வலுவிலுள்ள நியதிச்சட்டம் எதுவும் இல்லாத ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் பொருளை வாங்கி விற்பனை செய்கின்ற,

தொழிலைக் கொண்டுநடாத்துகின்றவரான, ஒவ்வோராளிடமிருந்தும்".

*3.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது;-

"(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு மொத்த விற்பனை வரவானது –

(i) ஏதேனும் தொழில் தொடர்பில் மூலதனச் சொத்துக்களின் விற்பனையின் மூலம் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பால ஏதேனும் தொகையை உள்ளடக்குதல் ஆகாது;

(ii) நிதியளிப்பவர் ஒருவரின் அல்லது திறைசேரி உண்டியல்களில், திறைசேரி முறிகளில் அல்லது அரசாங்கப்பிணைகளில் ஒரு முதனிலை வியாபாரியாகப் பணியாற்றும் வங்கியின் விடயத்தில், அத்தகைய நிதியளிப்பவர் அல்லது வங்கி உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் அவ்வாறாக நியமிக்கப்படுவதன் மேல், அத்தகைய ஏதேனும் உண்டியலை, முறியை அல்லது பிணை முறியைக் கையாளுவதிலிருந்து எழுகின்ற மொத்த விற்பனை வரவானது அதிலிருந்து அத்தகைய உண்டியல், முறி அல்லது பிணையம் தொடர்பிலான ஏதேனும் மீளக் கொள்வனவு தொடர்பில் செலுத்தப்பட்ட வட்டியை அல்லது அனுமதிக்கப்பட்ட தள்ளுபடியைக் கழித்ததன் பின்னர் அத்தகைய உண்டியல், முறி அல்லது பிணையம் தொடர்பில் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான வட்டியாக அல்லது தள்ளுபடியாக இருத்தல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவு அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் கடைசிக் காலாண்டுக்கு முந்திய காலாண்டுகள் ஒவ்வொன்றுக்காகவும் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு தொடர்பில் எவரேனும் ஆளினால் கொடுபடற்பாலதான மொத்த விற்பனை வரியிலிருந்து கழித்ததன் பின்னர் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க கழிக்கப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் ஏதேனும் மீதியானது மிஞ்சியிருக்கின்ற விடத்து, அத்தகைய மீதியானது இறுதிக் காலாண்டின் (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு தொடர்பில் அவ்வாளினால் கொடுபடற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து அது அவ்வாறு கழிக்கப்படக் கூடிய அளவிற்குக் கழிக்கப்படுதல் வேண்டும். அத்துடன், அவ்வாறு கழித்ததன் பின்னர் மிஞ்சியிருக்கும் மீதியானது, 49ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, 1996 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து கணக்கிடப்படும் ஆறு மாதங்கள் முடிவடைந்ததன் பின்னர் மீளளிப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக "இறுதிக் காலாண்டு" என்பது 1996 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவடைகின்ற காலாண்டு என்று பொருளாகும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் 2ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் , குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழிலுக்கு ஏற்புடையதாதலாகாது"

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில், "அத்தகைய தொகையானது" என்ற சொற்கள் தொடக்கம் அக் காப்புவாசகத்தின் முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "அத்தகைய தொகையானது அத்தகைய வழங்கல் இலங்கையிலுள்ள வங்கியொன்றில் திறக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றின் மூலம் அல்லது அத்தகைய வழங்கலுடன் தொடர்புடையதான அவ் ஏற்றுமதிகள், ஆணையாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுத்துமளவுக்கு அவரால் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய வேறு ஆவணச்சான்றின் மூலம் மேவப்பட்டிருக்குமாயின், ஆணையாளர் தலைமையதிபதியினால் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) "எவ்வொப்பந்தத்திற்கு ஆள் ஒருவர் திறந்தவராகவுள்ளாரோ அவ்வொப்பந்தத்தினைப் பின்பற்றி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1996 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள் சேவைகள் என்பன மீதான வரிச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எவ்வொப்பந்தத்திற்கு ஆளொருவர் திறத்தவராகவுள்ளாரோ அவ்வொப்பந்தத்தினைப் பின்பற்றி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் அத்தால் திருத்தப்படுகின்றது ;

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும்;

" ஆயின் –

(i) உட்பிரிவு (4) இல் உள்ள "ஒப்பந்தம்" என்பதன் வரைவிலக்கணத்தில் (vi) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தமாகவிராத அத்தகைய ஒப்பந்தம் புரியப்படுவதற்காகக் கொடுபடற்பாலதான மொத்தப் பிரதிபலன் ; அல்லது

(ii) அத்தகைய ஒப்பந்தத்தினால் மேவப்பட்ட வாடகைக் குடியிருப்புக் காலப்பகுதியில் அடங்கியுள்ள பூரணமாக்கப்பட்ட காலாண்டுகளின் எண்ணிக்கையினால் (4) ஆம் உட்பிரிவின் (vi) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒற்றைப் பின்பற்றி கம்பனி ஒன்றிற்குக் கொடுபடற்பாலதான (கட்டுப்பணம் உள்ளடங்கலாக) மொத்த வாடகையைப் பிரிப்பதன் மூலம் கிடைக்கும் தொகை.

ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாதவிடத்து, அத்தகைய கழிப்பனவு எதுவும் செய்யப்படுதல் ஆகாது";

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில்

(i) அதன் (iv) ஆம் பந்தியில் "செய்வதற்கான ஏதேனும் ஒப்பந்தம் ; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "செய்வதற்கான ஏதேனும் ஒப்பந்தம்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) அதன் (v)ஆம் பந்தியில் "ஏதேனும் ஒப்பந்தம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் ஒப்பந்தம் ; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(iii) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வருமாறு உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:–

(iv) ஏதேனும் கம்பனியினால் எவையேனும் வத்த்தக வளவுகளை வாடைக்கு விடுவதன் தொடர்பிலான ஏதேனும் ஒப்பந்தம்"

8. (அ) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க , இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கைச் செய்துகொண்டுள்ளதான ஒரு கம்பனியினால் 1992 மே 14ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1995 நவெம்பர் 9ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட; அத்துடன்,

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டனவும் 1992 மே 14ஆம் திகதிய 714/ 13ஆம் இலக்க கசெற்றிலும் அத்துடன் 1993 சனவரி 29ஆந் திகதிய 751/ 20 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்டனவுமான கட்டளைகளின் பயனைக் கொண்டு, மொத்த விற்பனை வரவு வரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படாத பொருள் ஒவ்வொன்றும், 1993 மே 14ஆம் திகதியிலிருந்து வலுவுடையதாகுமாறு முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் கொடுபடற்பாலதான ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பதாகவும் அத்துடன் விலக்களிக்கப்பட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

9. பங்குகளின் கொள்வனவு, விற்பனவு தொழிலிலீடுபட்டுள்ள ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்புக் கூறு அல்லது ஏதேனும் முதலீட்டுக் கம்பனி தவிர்ந்த ஒவ்வொரு ஆளும், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 1993 ஆம் ஆண்டு சனவரி 29ஆந் தேதிய 751/ 20ஆம் இலக்க, அதி விசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான கட்டளையில் முரணாகவுள்ளது. எது எவ்வாறிருப்பினும் அவரது மொத்த விற்பனை வரவு, பங்குகளின் விற்பனையைத் தொடர்புறுத்தும் அளவுக்கு மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்."

10. ஒன்பதாம் பிரிவு, எல்லா நோக்கங்களுக்காகவும் 1993 சனவரி 29ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

11. இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1997 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் (திருத்தச்) சட்டம்

[1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1988 ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1977 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1988 ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் 7ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "12 ஆம் பிரிவில் அல்லது 14 (2) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்க்காமைக்கான சான்றிதழை" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "14 அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்க்காமைக்கான சான்றிதழை" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :-

"(1) மத்தியஸ்த சபை இடப்பரப்பொன்றுக்காக நியமிக்கப்பட்ட குழாமொன்றின் தவிசாளர் 6ஆம் பிரிவின் கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றுக் கொண்டதன் மேல் 7ஆம் பிரிவின் அல்லது 8ஆம் பிரிவின் கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்துகை ஒன்றின்மேல் மத்தியஸ்த சபை ஒன்றை அமைக்கும் முறை பற்றிய அவர்களது விருப்பத் தெரிவை பிணக்குக்காரரிடையேயிருந்து கண்டறிதல் வேண்டுமென்பதுடன், பிணக்குக்காரரால் தெரிவிக்கப்பட்ட விருப்புத் தெரிவுகளுக்கிணங்க, பின்வருவனவற்றுள் ஒன்றைச் செய்தலும் வேண்டும்:-

(i) இரண்டாம் உட்பிரிவின் கீழ் மத்தியஸ்தசபை ஒன்றை அமைக்க வேண்டும்: அல்லது

(ii) மூன்றாம் உட்பிரிவின் கீழ் முன்னரே அமைக்கப்பட்ட சபையொன்றைத் தெரிவு செய்வதற்கு பிணக்குக்காரரை அனுமதிக்க வேண்டும்.

(2) பிணக்குக்காரர் அனைவரும் இவ்வுட்பிரிவின் கீழ் மத்தியஸ்த சபை ஒன்றை அமைப்பதற்கு விருப்பத் தெரிவு ஒன்றைத் தெரிவிக்கின்றவிடத்து மத்தியஸ்த சபை இடப்பரபொன்றுக்காக நியமிக்கப்பட்ட குழாமொன்றின் தவிசாளர், மத்தியஸ்த சபை இடப்பரப்பிற்காக நியமிக்கப்பட்ட குழாத்திடையேயிருந்து -

(அ) ஒவ்வொரு பிணக்குக்காரரினதும் தெரிவு செய்யப்பட்ட ஓர் உறுப்பினரையும்: அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களால் தெரிவு செய்யப் பட்ட ஓர் உறுப்பினரையும், கொண்ட மூன்று உறுப்பினர்களடங்கிய (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மத்தியஸ்த சபை ஒன்றை அமைத்தல் வேண்டும்:

ஆயின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பிணக்குக்காரர் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தத்தமது தெரிவுகளையிட்டு உடன்பட்டுக் கொள்ள இயலாதவர்களாயுள்ளவிடத்து, குழாத்தின் தவிசாளர் அவசியமான தெரிவைச் செய்தல் வேண்டும்.

ஆயின், மேலும் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவரேனும் பிணக்குக்காரர் அப் பந்தியின் கீழ் தெரிவு ஒன்றைச் செய்வதற்கு அவரது விருப்பமின்மையை எழுத்தில் தெரியப்படுத்துகின்றவிடத்து, குழாத்தின் தவிசாளரினால் இழுக்கப்படும் சீட்டிழுப்பு மூலம் அத்தகைய தெரிவானது, செய்யப்படுதல் வேண்டும். பிணக்குக்காரர் ஏதேனும் காரணத்திற்காக, சீட்டிழுப்பு மூலம் முதலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினருக்கு எதிர்ப்புக்காட்டுமிடத்து தவிசாளர் சீட்டிழுப்பின் மூலம் இன்னுமொரு தெரிவைச் செய்தல் வேண்டும்.

(3) பிணக்குக்காரர் எல்லோரும் அப்பிணக்கை அல்லது விண்ணப்பம் அல்லது ஆற்றுப்படுத்துகை எந்தத் தவறு தொடர்பாகச் செய்யப்பட்டதோஅந்தத் தவறை ஏலவே அமைத்துருவாக்கப்பட்ட சபைக்கு ஆற்றுப்படுத்துவதற்கான விருப்புத் தெரிவைத் தெரிவிக்கின்றவிடத்து, குழாத்தின் தவிசாளர் அந்த மத்தியஸ்த சபை இடப்பரப்பிற்கென நியமிக்கப்பட்ட குழாத்திலிருந்து தவிசாளரினால் ஏலவே அமைத்துருவாக்கப்பட்ட (தவிசாளரினால் நியமிக்கப்பட்ட பிரதான மத்தியஸ்தர் உட்பட) ஒவ்வொன்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட சபைகளிடையேயிருந்து ஏதேனும் சபையை பிணக்குக்காரர்கள் தெரிவு செய்ய அனுமதித்தல் வேண்டும்.

(2) அப்பிரிவின் (2) அத்துடன் (3)ஆம் உட்பிரிவுகளை முறையே அப்பிரிவின் (4) அத்துடன் (5) ஆம் உட்பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும்:

(3) அப் பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (4)ஆம் உட்பிரிவில் "ஓராம்" என்பது தொடங்கி "குறிப்பீடு செய்யப்படுவார்" என்பது வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:

"இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் அவ்வுட்பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட சபையின் பிரதான மத்தியஸ்தராகச் செயலாற்றுதல் வேண்டும்":

(4) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (5)ஆம் உட்பிரிவில் "சபை அமைக்கப்பட்டதன் மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சபை அமைக்கப்பட்டதன் அல்லது தெரிவு செய்யப்பட்டதன் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "ஒன்பதாம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "ஒன்பதாம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:

(2) அப் பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அத்தகைய வேறு ஆட்களுக்கும் அறிவித்தல் வேண்டும்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வேறு ஆட்களுக்கும் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் பிணக்குக்காரர்கள் எவரேனும் ஒருவர் ஏதேனும் அத்தகைய மாநாட்டுக்குச் சமுகமளிக்கத் தவறினால் அத்தகைய பிணக்குக்காரரின் சமுகமளிக்காமை பற்றி 14(அ) என்னும் பிரிவின் கீழ் வழங்கப்படக்கூடிய தீர்க்காமைக்கான சான்றிதழில் அல்லது 12ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்

அறிக்கையில் கூறப்பட வேண்டுமென அத்தகைய அறிவித்தலில் கூறுதலும் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:

(3) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டுஅதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் –

"(ஈ) 13ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் அதன் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்படுதல் வேண்டும்: அத்துடன் அவ்வாறு செய்யத்தவறும் சந்தர்ப்பத்தில், 14 அ என்னும் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகிறது.–

"தீர்வுகாண முடியாத விடத்து

12. பிணக்குக்காரர்களுள் ஒருவரின் முறையான அறிவித்தலின் பின்னர், வருகைதராத காரணத்தினால், 9ஆம் பிரிவின் கீழ் ஒரு சபையை அமைக்க முடியாதவிடத்து அல்லது, 9ஆம் பிரிவின் கீழ் ஒரு சபையை அமைத்த பின்னர், பிணக்குக்காரர்கள் ஒரு தீர்வுக்கு இணங்காதவிடத்து, அல்லது பிணக்குக்காரர்களில் ஒருவரின், முறையான அறிவித்தலின் பின்னர் அவர் வருகை தராத காரணத்தினால் ஒரு தீர்வுக்கு வர இயலாதிருக்குமிடத்து, விடயத்திற்கேற்றாற்போல, தவிசாளர் அல்லது பிரதான மத்தியஸ்தர்.–

(அ) ஆறாம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்தின் விடயத்தில், 14 அ என்னும் பிரிவின் கீழ் தொடர்ந்து செயல்படுதல் வேண்டும்.

(ஆ) ஏழாம் அல்லது எட்டாம் பிரிவின் கீழ் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆற்றுப்படுத்தப்பட்ட ஒரு பிணக்கின் விடயத்தில், மத்தியஸ்தம் மூலம் பிணக்கைத் தீர்க்க இயலாதிருக்கின்றதெனவும், அத்துடன் தீர்வு காண முடியாமைக்கான காரணங்களையும், அதில் குறிப்பிட்டு, விடயத்துக்கேற்றாற் போல தவிசாளரினால் அல்லது பிரதான மத்தியஸ்தரினால், ஒப்பமிடப்பட்டு, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், அத்தகைய நீதிமன்றத்திற்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது.

சபை செயலாற்ற வேண்டிய காலஎல்லை

13. சபையானது, மத்தியஸ்தம் மூலம் தீர்வு காணப்படுவதற்காக அதன் முன்னருள்ள ஏதேனும் பிணக்கு அல்லது தவறு தொடர்பில், 11 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அல்லது 12 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை –

(அ) ஒரு பிணக்கின் விடயத்தில் சபை அமைக்கப்பட்டு அறுபது நாட்களுக்குள்ளாகவும்:

(ஆ) ஒரு தவறின் விடயத்தில் சபை அமைக்கப்பட்டு முப்பது நாட்களுக்குள்ளாகவும்

எடுத்தல் வேண்டும்".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு, அப் பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் "அத்தகைய வேறுபாடுகளைத் தீர்த்துவைக்க இயலாதிருக்கின்றவிடத்து" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவு முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "அத்தகைய வேறுபாடுகளைத் தீர்த்து வைக்க இயலாதிருக்குமிடத்து, சபையானது 14 அ என்னும் பிரிவின் கீழ் செயற்பட முற்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகிறது.

8. பின்வரும் புதிய பிரிவுகள், 14ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப் படுகின்றன என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 14அ, 14ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும். –

" தீர்க்கப் படாமைக் கான சான்றிதழ்கள்

14அ. தீர்வொன்றின் பின்னர், பிணக்கினரிடையே எழுந்துள்ள ஏதேனும் பிணக்கின், அல்லது தவறின் அல்லது எவையேனும் வேறுபாடுகளின் தீர்மானத்தின் தீர்வொன்று இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சாத்தியப்படாதவிடத்து, விடயத்திற்கேற்றாற்போல தவிசாளர் அல்லது பிரதான மத்தியஸ்தர், அத்தகைய பிணக்கை அல்லது தவறை, மத்தியஸ்தம் மூலம் தீர்த்தல் இயலாததாக வுள்ளதெனவும், தீர்க்கவியலாமைக்கான காரணத்தையும் காட்டி, விடயத்திகேற்றாற்போல தவிசாளரினால் அல்லது பிரதம மத்தியஸ்தர்களினால் ஒப்பமிடப்பட்ட விதித்துரைத்த படிவத்திலான தீர்க்கப்படாமைக்கான சான்றிதழை வழங்குதல் வேண்டும்.

" தீர்க்கப் படாமைக் கான சான்றிதழ்கள் சான்றாகப் பெறப்படற் பாலனவாக இருக்கும்

14ஆ.(1) 14அ என்னும் பிரிவின் கீழ் வழங்கப்பட்டதாகக் கொள்ளப்பட்டதும் விடயத்துக்கேற்றாற்போல தவிசாளரினால் அல்லது பிரதம மத்தியஸ்தரினால் ஒப்பமிடப்பட்டதுமான தீர்க்கப்படாமைக்கான ஒரு சான்றிதழானது, அத்தகைய ஆள் சாட்சியாக அழைக்கப் பட்டிராவிடினும், ஏதேனும் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் சான்றாக முன் வைக்கப்படலாம்.

(2) தீர்க்கப்படாமைக்கான சான்றிதழ் எதிலுமுள்ள கையொப்பமானது, உண்மையானதெனவும், அதில் ஒப்பமிட்ட ஆள் அதனை ஒப்பமிட்ட நேரத்தில் அவர் வகிப்பதாகச் சத்தியஞ் செய்த பதவியை வகித்துள்ளாரெனவும், நீதிமன்றம் ஊகிக்கலாம்.

ஆயின், அத்தகைய நீதிமன்றத்தின் முன்னரான ஏதேனும் நடவடிக்கையில், குழாத்தின் தவிசாளர் அல்லது பிரதான மத்தியஸ்தர் சான்று கொடுப்பதற்காக சமூகமாயிருந்தல் அவசியமானதென, ஏதேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின் மீது அல்லது வேறுவகையிலும் அத்துடன் பதிவி செய்யப்படவேண்டிய காரணங்களுக்காகவும், எச் சந்தர்ப்பத்திலும் நீதிமன்றம் கருதுகின்றவிடத்து, அத்தகைய தவிசாளர் அல்லது பிரதான மத்தியஸ்தர் அத்தகைய சான்றிதழில் கையொப்பமிட்டமை தொடர்பாக மாத்திரம், சான்று தரும் நோக்கத்திற்காக ஒரு சாட்சியாக அழைக்கப்படுதல் வேண்டும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவு "12ஆம் பிரிவின் அல்லது 14ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும், எண்களுக்கும் பதிலாக, 14அ என்னும் பிரிவின் கீழ் என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவு "பிணக்குக்காரர்" என்னும் வரைவிலக்கணத்திற்கு நேரே முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.-

"பிரதான மத்தியஸ்தர்" என்பது, 9ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அல்லது அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் குழாத்தின் தவிசாளரினால் நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் எனப் பொருள்படும்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணை, அவ் வட்டவணையின் 12ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

12. நிதி என்னும் விடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாகவும் அத்தகைய வீதத்திலுமான அத்தகைய படிகள் தவிசாளருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் செலுத்தப்படுதல் வேண்டும்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை, அவ்வட்டவணையின் 1ஆம் நிரையிலும் 11ஆம் நிலையில் நேரொத்த பதிவிலும் காணப்படும் "உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய செயலொன்றினால் காயம் விளைவித்தல" என்னும் விடயத்திற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

" உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய செயலொன்றினால் காயம் விளைவித்தல் ............ 328 "

13. இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1997 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன(திருத்தச்) சட்டம்

[1997 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்துத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*1.* இச்சட்டம் 1997 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2. (1)* (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2ஆம் பிரிவு; அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது ;-

(1) "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும் என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் ;-

"(ஆ) இ.அ.நி.கூ. வங்கி என அழைக்கப்படுதல் வேண்டும்".

*3. (1)* முதன்மைச் சட்டவாக்கத்திலும் (விரிவுப் பெயரில் தவிர) எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திலும் "இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம" அத்துடன் (இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தைக் குறிக்கும்) "கூட்டுத்தாபனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இ.அ.நி.கூ வங்கி" அத்துடன் "வங்கி" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தகவல் தொடர்பில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில் "இலங்கை அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம்" என்பது பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் "இ.அ.நி.கூ வங்கி" என்பதைப் பற்றிய குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

*4.* ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டின் 25ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு; இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது;-

(1) அவ்வுட்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "தனியார் கைத்தொழில், கமத்தொழில் அத்துடன் வர்த்தகத் தொழில் முயற்சிகளை" என்ற சொற்களுக்குப் பதிலாக "கைத்தொழில் ,கமத்தொழில் அத்துடன் வர்த்தகத் தொழில் முயற்சிகளை" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்வதன் மூலமும்,

5. ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டின் 25ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஓவூ) ஆம் பந்தியின், "தனியார் கைத்தொழில், கமத்தொழில் அத்துடன் வர்த்தகத் தொழில் முயற்சிகளுக்கும் அல்லது அவற்றிற்காகவும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "கைத்தொழில், கமத்தொழில் அத்துடன் வர்த்தகத் தொழில் முயற்சிகளுக்கும் அல்லது அவற்றிற்காகவும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

6 ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டின் 25ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இவ்வுட்பிரிவின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட எல்லாக் கடன்களினதும் கூட்டுத்தொகை முன்னூறு கோடி ரூபாவை விஞ்சுமாயின், இவ்வுட்பிரிவின் கீழ் உத்தரவாதமெதுவும் கொடுக்கப்படலாகாது." என்ற சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

7. (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அத்துடன் வேறு சாதனங்கள் அனைத்தும் இ.அ.நி.கூ வங்கியால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாக அல்லது வேறு சாதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இலங்கை அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் அல்லது அதற்கெதிராக தொடரப்பட்ட வையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருக்கின்றவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், வழக்குகளும் வேறு சட்ட நடவடிக்கைகளும் இ.அ.நி.கூ வங்கியால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்ட துடர்ச்சிகளாகவும் வழக்குகளாகவும் வேறு சட்ட நடவடிக்கைகளாகவும் கருதப்பட வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் எல்லா உரிமைகளும், பொறுப்புக்களும், கடப்பாடுகளும் இ.அ.நி.கூ வங்கியின் உரிமைகளாகவும், பொறுப்புக்களாகவும், கடப்பாடுகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் வழக்கில் அல்லது நடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தால், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்ட தீர்வை, கட்டளை, அல்லது தீர்ப்பு ஒவ்வொன்றும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இ.அ.நி.கூ வங்கிக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்ட ஒரு தீர்வையாக, கட்டளையாக அல்லது தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடவும்படலாம்.

8. இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1997 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[1997ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*1. இச்சட்டம், 1997ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச்சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1984ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கச் சட்டத்தின் 4ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு மேலும் இத்தால் திருத்தப்படுகின்றது:–*

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், (iv) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:–

"(v) 1980 ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து செலுத்தப்படும் ஏதேனும் பணத்தொகை.".

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில் –

(i) அக் காப்பு வாசகத்தின் (i) ஆம் உட்பந்தியில் "இவற்றுள் எது குறைந்ததோ அதையும் அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இவற்றுள் எது குறைந்ததோ அதையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(ii) அக் காப்பு வாசகத்தின் (ii) ஆம் உட்பந்தியில் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தி நாலாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கென (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலும் விபரிக்கப்பட்டுள்ள இலாபங்களின் இருபத்தைந்து சதவீதத்தை அல்லது நாற்பத்தெட்டாயிரம் ரூபாவை, இவற்றில் எது குறைந்ததோ அதையும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தி நாலாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றேழாம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர், தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கென (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலும் (ஆ) என்னும் பந்தியிலும் விபரிக்கப்பட்டுள்ள இலாபங்களின் இருபத்தைந்து சதவீதத்தை அல்லது நாற்பத்தெட்டாயிரம் ரூபாவை, இவற்றுள் எது குறைந்ததோ அதனையும், அத்துடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்: அத்துடன்

(iii) அக்காப்பு வாசகத்தின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:
"ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூற்றேழாம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா;".

3. ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (Lxxii) என்னும் உட்பந்தியின் "தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பந்தியின் (Lxxii) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்னர், பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(Lxxiii) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள் , பரிவர்த்தனை ஆணைக் குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு"

4. ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 27ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியில் "அலுவலக முறையிலான வேதனாதிகள் அல்லது 4 (1) ஆம் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஊழியத்திலிருந்து வரும் அத்தகைய ஏதேனும் ஒய்வூதியமும் அல்லது அத்தகைய ஏதேனும் இலாபங்களும்;" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அலுவலக முறையிலான வேதனாதிகள் அல்லது ஏதேனும் ஒய்வூதியம் அல்லது 4ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஊழியத்திலிருந்து வரும் அத்தகைய எவையேனும் இலாபங்களும்;"; என்னும்; சொற்களை இடுவதன் மூலமும";

(2) அவ்வுட்பிரிவின் (ஆஆஆ) என்னும் பந்தியில் "1993ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1993ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1997ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் ;-

"(ஔ) தனியாள் ஒருவரால் அல்லது எந்தப் பிள்ளையின் மொத்த நிதியச் சட்ட வருமானம் அந்தத் தனியாளின் வருமானத்துடன் கூட்டு மொத்தமாக்கப் படுகின்றதோ அந்தப் பிள்ளையால் தொழில் தவிர்ந்த வேறு எல்லா மூலவளங்களிலுமிருந்து பெறப்பட்ட அல்லது அத்தனியாளுக்கு அல்லது அப் பிள்ளைக்குக் கிடைக்கின்ற அல்லது திரளுகின்றதான -

(அ) 1991 மாச்சு 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவுறும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு ஆயிரத்து இருநூறு ரூபா ;

(ஆ) 1991 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1997, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு இரண்டாயிரத்து நானூறு ரூபா ;

(இ) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு, நாலாயிரத்து எண்ணூறு ரூபா;

அதாவது அந்த வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு அந்தத் தனியாளின் மொத்த நியதிச் சட்ட வருமானம் பின்வருவனவற்றை மட்டும் கொண்டிருப்பின்–

(i) தொழிலிருந்து கிடைக்கின்ற பின்வருவனவற்றை விஞ்சாத இலாபங்களும் வருமானமும்

(அ) 1979, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் 1986 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டில் முப்பதாயிரம் ரூபா;

(ஆ) 1986 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடக்கம் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபா;

(இ) 1987 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1991 ஏப்பிறல் மாதத்திற்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு நாற்பத்தையாயிரம் ரூபா;

(ஈ) 1991 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு அறுபதினாயிரம் ரூபா; அத்துடன்

(உ) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஓர் இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா; அத்துடன்

(ii) தொழில் தவிர்ந்த வேறு இலாபங்களையும் வருமானத்தையும் கொண்ட எல்லா மூலவளங்களிலிருந்து பின்வருவனவற்றை விஞ்சாத இலாபங்களும் வருமானமும் –

(அ) 1979, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் 1986 ஏப்பிறல்1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டில் முப்பதாயிரம் ரூபா;

(ஆ) 1986 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபா ;

(இ) 1987 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1991 ஏப்பிறல் மாதத்திற்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு அறுபதினாயிரம் ரூபா; அத்துடன்

(ஈ) 1991 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு அறுபதினாயிரம் ரூபா; அத்துடன்

(உ) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஓர் இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா; அத்துடன்

(ii) தொழில் தவிர்ந்த வேறு இலாபங்களையும் வருமானத்தையும் கொண்ட எல்லா மூலவளங்களிலிருந்து பின்வருவனவற்றை விஞ்சாத இலாபங்களும் வருமானமும் -

(அ) 1991 மாச்சு 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவுறும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஆயிரத்து இருநூறு ரூபா;

(ஆ) 1991 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இரண்டாயிரத்து நானூறு ரூபா; அத்துடன்

(இ) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாலாயிரத்து எண்ணூறு ரூபா:

அத்துடன் அதற்கிணங்க, இப் பந்தியின் கீழ் விலக்களிக்கப்பட்ட எவையேனும் இலாபங்களும் வருமானமும் தொடர்பில், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய தனி ஆளினால் கழிப்பனவு மூலம் அல்லது வேறு வகையாக ஏதேனும் வருமானவரி எதுவும் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய வரியானது அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் அத்தகைய ஆளினால் அதன் பொருட்டு எழுத்தில் செய்யப்படும் விண்ணப்பமொன்றின் மீது அவருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்:

(4) அவ்வுட்பிரிவின் (ங) என்னும் பந்தியில் "1987 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்கு அதனால் செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகையின் அத்தகைய பாகம் ; அத்துடன" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1987 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்கு அதனால் செய்யப்பட்ட ஏதேனும் பணத் தொகையின் அத்தகைய பாகம்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

(5) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்;-

(ச) எவரேனும் ஊழியருக்கு 1987ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கப் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட தொழில்/பொறுப்பு முயற்சிகளை பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதல் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கம்பனி எதிலும், ஏதேனும் தொழிலிலிருந்து ஓய்வுபெறும் நேரத்தில் விடயத்திற்கேற்ப ஏதேனும் பகிரங்கக் கம்பனியில் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட தொழில் பொறுப்பு முயற்சியில் 1977 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் அத்தகைய ஊழியரால் ஆற்றப்பட்ட சேவைக்காலப்பகுதிக்கு ; ஏற்றிக்கூறப்படற்பாலதாகச் செலுத்தப்படும் 4(1) ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டதுமான ஏதேனும் பணத்தொகையின் அத்தகைய பாகம்; அத்துடன் ;

(6) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்தியை உடனடுத்துப்பின்னர் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் ;-

"(ஞ) நாலாம் பிரிவின் ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படுவதும், எவரேனும் ஊழியர் 1997 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் (ii) ஆம் உட்பிரிவின்(ஆஆ) என்னும் பந்தியின் (iii)

ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும். ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் தவிர்ந்த வேறு ஏதேனும் கூட்டுத்தாபனத்திலான சேவைக்காலப்பகுதிக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதானவாறு ஏதேனும் தொழிலிலிருந்து ஓய்வுபெறும் நேரத்தில் அவருக்குச் செலுத்தப்பட்டதுமான ஏதேனும் பணத்தொகையின் பாகம்.".

5. ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூற்றோராம் ஆண்டின் 49 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது;-

"(இஇ)இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையினால் இலங்கை அரசாங்கத்திற்கு வெளிநாட்டுச் செலாவணியில் வழங்கப்பட்ட கடன் ஒன்று தொடர்பாக (அத்தகைய கடன் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமான தென அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டால்) இலங்கை அரசாங்கத்தி னால் அவ்வாளுக்கு அல்லது பங்குடைமைக்கு வழங்கப்பட்ட பிணைப் பொறுப்பு பத்திரம் அல்லது கூப்பன் என்பவற்றிலிருந்து அவ்வாளுக்கு அல்லது பங்குடமைக்குச் சேருகின்ற வட்டியும்; ".

6. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "17ஒ, 17ஓ, 18" என்னும் எண்களுக்குப் பதிலாக "17ஒ, 17ஒஒ ,17ஓ, 17ஓஓ 18" என்னும் எண்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

7. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவு, (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் வருமானவரியிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, இவ்வுட்பிரிவின் (ஆ) அல்லது (ஆஆ) என்னும் பந்தியின் கீழ் வருமானவரியிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக இவ்வுட்பிரிவின் (ஆ) அல்லது (ஆஆ) என்னும் பந்தியின் கீழ் வருமானவரியிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

8. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றுநாலாம் ஆண்டின் 21ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் ஒராம் உட்பிரிவாக அப்பிரிவை மீள இலக்கமிடுவதன் மூலம்:

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவின்
(அ) என்னும் பந்தியில்
(அ) அப் பந்தியின் (xxii) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்னர், பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்;

(xxiiஅ) பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி அத்துடன் பிணைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதும் எவரேனும் ஆளினால் இரண்டாந்தரச் சந்தையில் வைத்திருக்கப்படுவதுமான ஏதேனும் திறைசேரி முறி, பதிவு செய்யப்பட்ட கையிருப்பு அல்லது வேறு ஏதேனும் பிணைப் பொறுப்பு என்பது அத்தகைய ஆளினால் விற்பனை செய்யப்படுவதன் மீதும் ";

(ஆ) அப்பந்தியின் (xxiii) ஆம் உட்பந்தியில் "உரிமை வழங்கீடொன்றின் கீழ் பெறப்பட்ட ஒரு பங்குக்கான ஏதேனும் உரிமையின" என்னும் சொற்களுக்குப் பதிலாக உரிமை வழக்கீடொன்றின் கீழ் அல்லது ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழக்கீடொன்றின் கீழ்ப் பெறப்பட்ட ஒரு பங்குக்கான ஏதேனும் உரிமையின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) ஓராம் உட்பிரிவில் (அ) என்னும் பந்தியின் (xxii) அத்துடன் (xxiiஅ) என்னும் உட்பந்திகளின் நோக்கங்களுக்காக, "மூலதன இலாபம்" என்பது, அத்தகைய உண்டியல், முறி, பங்குத் தொகுதி அல்லது வேறு பிணைப்பொறுப்பு முதிர்கின்றவரை அத்தகைய ஆளினால் அத்தகைய உண்டியல் முறி, பங்குத்தொகுதி அல்லது வேறு பிணைப் பொறுப்பு வைத்திருக்கப்பட்டிருந்தால் அத்தகைய உண்டியல் , முறி, பங்குத் தொகுதி அல்லது வேறு பிணைப் பொறுப்பு தொடர்பில் அத்தகைய விற்பனை செய்யப்பட்டிராவிட்டால் அத்தகைய உண்டியல் , முறி, பங்குத் தொகுதி அல்லது வேறு பிணைப் பொறுப்பு எக் காலப்பகுதிக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதோ அக்காலப் பகுதியின்போது, அத்தகைய ஆளுக்கு வந்திருக்கக்கூடிய வட்டியின் அத்தகைய பாகத்தின் மீது 7ஆம் பிரிவின் (2) அத்துடன் (4)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கக் கணிக்கப்படுகின்ற மூலதன இலாபத்தின் விஞ்சுதொகை எனப் பொருள்படும்."

9. பின்வரும் புதிய பிரிவு, 15அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்னர் உட்புகுத்தப் படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"எவரேனும் வதிவுள்ள விருந்தாளியின் குறித்த சில இலாபங்களுக்கும் வருமானங்களுக்கும் விலக்களிப்பு

15ஆ. (1) வதிவுள்ள எவரேனும் விருந்தாளியின் பின்வரும் இலாபங்களுக்கும் வருமானத்துக்கும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) இலங்கையில் எழுகின்ற அல்லது இலங்கையிலிருந்து பெறப்படுகின்ற இலாபங்களாக, வருமானமாக இல்லாதிருக்கின்ற இலாபங்களும் வருமானமும்; அத்துடன்

ஆ) இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் நாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் அவருக்கு அனுப்பப்படும் பணத்தொகைகளை வைப்பிலிடுவதற்காக வர்த்தக வங்கியொன்றில் அவரால் திறக்கப்பட்ட ஏதேனும் கணக்கில் அவருக்கு வரவில் இருக்கின்ற பணத்திலிருந்து சேர்கின்ற இலாபங்களும் வருமானமும்.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக "வதிவுள்ள விருந்தாளி" என்பது, 1979ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, வதிவுள்ள விருந்தாளி (வரிவிலக்குச்) சட்டத்தின் கீழ் வரிவிலக்கொன்று வழங்கப்பட்டிருக்கும் ஆள் ஒருவர் எனப் பொருள்படும்."

10. பின்வரும் புதிய பிரிவு, 17ஒ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஒஒ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

மேம்பாடடைந்த தொழில் நுட்பவியலைப் பயன்படுத்தும் கம்பனியொன்றினால் கொண்டு நடாத்தப்படும் கைத்தொழிற் பொறுப்பு முயற்சியொன்றின் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்

17ஒஒ (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படட ஏதேனும் கம்பனியின் 3ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) எந்த வரிமதிப்பீட் டாண்டில் அத்தகைய கம்பனி தொழிலைக் கொண்டுநடாத்தத் தொடங்கியதோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் –

(அ) 1996 ஏப்பிறல் 1ஆம் திததியன்று அல்லது அதற்குப் பின்னர் கூட்டிணைக்கப்பட்டதும்

(ஆ) எந்தக் கம்பனிக்கு இப்பிரிவு ஏற்புடைத்தாகின்றதோ அக் கம்பனியொன்றாக அதன்பொருட்டு 1997ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்யப்பட்ட எழுத்திலான விண்ணபமொன்றின் மீது 1998 மாச்சு 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையால் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும்.

(இ) மேம்பாடடைந்த தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி –

(1) எவையேனும் பொருட்களின் அல்லது வியாபாரப் பொருட்களின் உற்பத்திக்கென அல்லது தயாரிப்புக்கென; அல்லது

(11) ஏதேனும் சேவையை வழங்குவதற்கென

ஏதேனும் கைத்தொழில் பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்துவதில் மட்டும் ஈடுபாடுள்ளதும் :

(ஈ) 1988 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் கம்பனியினால், மேற்கொள்ளப்படும் பொறுப்பு முயற்சியின் உபயோகத்திற்கென ஏதேனும் பொறித்தொகுதியின், எந்திரத்தின் பொருத்திகளின் அல்லது உபகரணத்தின் கொள்வனவில் நான்கு மில்லியன் ரூபாவுக்குக் குறையாமல் முதலீடு செய்துள்ளதுமான:

(உ) அது தொழிலைக் கொண்டுநடாத்தத் தொடங்கிய திகதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதியைப் பிந்தாத ஒரு திகதியன்று உள்ளவாறு, அத்தகைய கம்பனியின் பணிப்பாளர்களைத் தவிர,ஐம்பது ஊழியர்களுக்குக் குறையாதோரை தொழிலுக்கமர்த்துகின்றதும் அத்துடன் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப்பகுதி முடிவுறும்வரை தொடர்ந்து தொழிலுக்கமர்த்றகின்றதுமானதும்; அத்துடன்

(ஊ) முன்பிருந்த ஏதேனும் தொழிலைக் கூறுபடுத்துவதன் மூலம் புனரமைப்பதன் மூலம் அல்லது கொள்ளலின் மூலம் அமைக்கப்படாததுமான,

ஏதேனும் கம்பனிக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(எ) இவ்வுட்பிரிவில்:

(i) "கைத்தொழில் பொறுப்பு முயற்சி" என்னும் சொல்லமைப்பானது சமுர்த்தி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் விலங்கு வேளாண்மை க்கான, உல்லாசப் பிரயாணத்துக்கான அத்துடன் சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியை உள்ளடக்கும்;

(ii) "ஊழியர்" என்பது, 16 ஈ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

11. பின்வரும் புதிய பிரிவு, 17 ஓ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்னர் உட்புகுத்தப்படுகின்றதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஓஓ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

" மேம்பாடடைந்த தொழில்நுட்பவியலைப் பெற்றுப் பயன்படுத்தும் பொறுப்பு முயற்சியொன்றின் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்.

17ஓஓ (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதுடன் எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் தயாரிப்பிற்கு அல்லது உற்பத்திக்கு அல்லது ஏதேனும் சேவையை வழங்குவதற்கு ஏதேனும் பொறுப்பு முயற்சியின் புதிய மூலதனச் செலவினத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலனவான இலாபங்களும் வருமானமும் இயைபான திகதியிலிருந்து கணிப்பிடப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ;

(அ) இயைபான திகதியிலிருந்து தொடர்ந்தும் பன்னிரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் மேம்பாடடைந்த தொழில்நுட்பவியலைப் பெற்றுப் பயன்படுத்துவதன்மீது நான்கு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத தொகையான புதிய மூலதனச் செலவினத்தை உற்றிருக்கின்றதும்; அத்துடன்

(ஆ) அதன் பொருட்டு 1997 திசெம்பர் 31ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்யப்பட்ட எழுத்திலான விண்ணப்பமொன்றின் மீது 1998, மாச்சு 31ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம், இப்பிரிவு எந்தப் பொறுப்பு முயற்சிக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்தப் பொறுப்பு முயற்சியொன்றாக இருப்பதாக அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதும்; அத்துடன்

(இ) இயைபான திகதியிலிருந்து உள்ளவாறு அல்லது அத்தகைய திகதியிலிருந்து ஆறுமாதங்களுக்குப் பிந்தாமல் சொல்லப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப்பகுதி முடியும்வரை, இயைபான திகதியன்று முடிவடையும் ஆண்டின் போது அப்பொறுப்பு முயற்சியால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியர்களின் சராசரி எண்ணிக்கையைவிடக் கூடுதலாக, ஐம்பதுக்குக் குறையாத ஊழியர்களைத் தொழிலுக்கு அமர்த்தி உள்ளதும் தொடர்ந்து தொழிலுக்கமர்த்துகின்றதுமான ஏதேனும் பொறுப்பு முயற்சிக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

ஆயின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் சொல்லப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்டகாலப்பகுதிக்குட்பட்ட வரி மதிப்பீட்டாண்டின் போது, ஏதேனும் நேரத்தில், அத்தகைய பொறுப்பு முயற்சியில் தொழிலுக் கமர்த்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையானது அத்தகைய சராசரி எண்ணிக்கையை ஐம்பதால் விஞ்சாதவிடத்து (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அப்பொறுப்பு முயற்சியின் அத்தகைய இலாபங்களும் வருமானங்களும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படலாகாது.

இவ்வுட்பிரிவில் –

(i) "கைத்தொழில் பொறுப்பு முயற்சி" என்னும் சொல்லமைப்பு, சமுர்த்தி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட விலங்கு, வேளாண்மை, கடற்றொழில், உல்லாசப் பிரயாணம் அல்லது ஏதேனும் சமூக அபிவிருத்தி கருத்திட்டம் என்பவற்றை உள்ளடக்கும்; அத்துடன்

(ii) "ஊழியர்" மற்றும் "சராசரி எண்ணிக்கை" என்னும் சொல்லமைப்புக்கள் 16ஈ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியினால் அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அந்தப் பொருட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக –

(அ) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பிலும் "புதிய மூலதனச் செலவினத்துக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான" "இலாபங்களும் வருமானமும்" என்னும் சொல்லமைப்பானது –

(i) மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் (எவை யேனும் மூலதனச் சொத்துக்களின விற்பனையிலிருந்து அல்லது எவை யேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் கொள்வனவிலும் மறு விற்பனையிலிருந்து வருகின்றவையான எவையேனும் இலாபங்க ளையும் வருமானத்தையும் தவிர) அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏற்புடைத்தானதாக இருக்கின்றவாறு இப் பந்திக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான நூற்று வீதத்தால் குறைக்கப்பட்டதான அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு இப் பொறுப்பு முயற்சியின் இலாபங்க ளும், வருமானமும்;

(ii) ஓராம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அப்பொறுப்பு முயற்சியானது, இயைபான திகதிக்கு முன்னர் மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு அல்லது அதற்கு மேல் தொழிலைக் கொண்டு நடாத்தி வருகின்றவிடத்து, இயைபான திகதிக்கு உடன் முன்னரான மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குக் கணிப்பிடப்பட்ட அல்லது பொறுப்பு முயற்சி இயைபான திகதிக்கு முன்னர் மூன்றாண்டுகளுக்கு குறைவானவொரு காலப்பகுதிக்கு தொழிலைக் கொண்டுநடாத்தி வந்த முழுக்காலப்பகுதிக்கும் கணிப்பிடப் பட்ட அப்பொறுப்பு முயற்சியின் ஆண்டு சராசரி அத்தகைய இலாபங் களினதும், வருமானத்தினதும் ஆண்டு சராசரியை விட எந்தத் தொகையால் விஞ்சுகின்றதோ அந்த விஞ்சுதொகை

என்று பொருள்படும்.

ஆனால் 3ஆம் பிரிவின் (அ)என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் (எவையேனும் மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான அல்லது எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் கொள்வனவிலும் மறு விற்பனையிலுமிருந்தான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) புதிய மூலதனச் செலவினத்திலும் இயைபான தேதியன்று எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் தயாரிப்பிற்கு அல்லது உற்பத்திக்கு அத்தகைய பொறுப்பு முயற்சியால் பயன்படுத்தப் பட்டுவந்த ஏதேனும்,

(i) பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி பொருத்திகள் அல்லது உபகரணம்; அத்துடன்

(ii) ஓராம் உட்பந்தியில் உள்ளடக்கப்படாத சொத்து (ஏதேனும் காணியை அல்லது கட்டிடத்தைத் தவிர)

என்பவற்றின் கொள்ளலின்போது அவற்றின் பெறுமதியினதும் கூட்டுமொதத்துடன் எந்த விகிதாசாரத்தில் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தில் கொண்டுள்ள பணத்தொகையின் நூற்றி இருபது சதவீதத்தை விஞ்சுதலாகாது ஆயினும், மேலும் (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் பொறுப்பு முயற்சியானது, 17 ஊ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் பொறுப்பு முயற்சியாகவும் இருக்குமிடத்து ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் கூடுதலான நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்யவும் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய பொறுப்பு முயற்சி தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**அட்டவணை**

| வரிமதிப்பீட்டாண்டு | சதவீதம் |
|---|---|
| இயைபான திகதி எவ்வரிமதிப்பீட்டாண்டில் வருகின்றதோ அவ்வரிமதிப்பீட்டாண்டு (இதனகத்துப் பின்னர் "இயைபான ஆண்டு" என இவ்வட்டவணையில் குறிப்பீடு செய்யப்படும்) | 10 சதவீதம் |
| இயைபான ஆண்டை அடுத்துறும் முதலாம் ஆண்டு (முதலாவது) | 10 சதவீதம் |
| இயைபான ஆண்டை அடுத்துறும் இரண்டாம் ஆண்டு | 12.5 சதவீதம் |
| இயைபான ஆண்டை அடுத்துறும் மூன்றாம் ஆண்டு | 15 சதவீதம் |
| இயைபான ஆண்டை அடுத்துறும் நாலாம் ஆண்டு | 17.5 சதவீதம் |
| இயைபான ஆண்டை அடுத்துறும் ஐந்தாம் ஆண்டு | 20 சதவீதம் |

(ஆ) "இயைபான திகதி" என்ற சொல்லைமப்பு 1996 நவெம்பர் மாதத்துக்கு முந்தாமலும் 1998 ஏப்பிறல் மாதத்துக்குப் பிந்தாமலும் அத்துடன் அப்பொறுப்பு முயற்சியினால் தெரிவு செய்யப்பட்டு, அம்மாதத்தின் கடைசித் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிவிக்கப்படும் ஏதேனும் பஞ்சாங்க மாதத்தின் முதலாம் நாள் எனப் பொருளாகும்.

ஆயின், இயைபான திகதியானது அவ்வாறு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்படாதவிடத்து, 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியானது இயைபான திகதியாகக் கருதப்படல் வேண்டும்;

(இ) "புதிய மூலதனச் செலவினம்" என்ற சொல்லமைப்பானது மேம்பாடடைந்த தொழில் நுட்பவியலைப் பெறுவதற்காகவும் பயன்படுத்துவதற்காகவும் அப்பொறுப்பு முயற்சியினால் ஏதேனும்–

(i) புதிய பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி பொருத்திகள் அல்லது உபகரணம்; அத்துடன்

(ii) உட்பந்தி (i) இல் உள்ளடக்கப்படாத புதிய சொத்து (ஏதேனும் காணியை அல்லது கட்டிடத்தை தவிர)

என்பவற்றின் கொள்ளளவில் உறப்படும் செலவினம் எனப் பொருள்படும்.

ஆயின் இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அப் பொறுப்பு முயற்சியின் சொத்துக்களின் பாகமாக அமைந்த ஏதேனும் உபகரணத்தை இயைபான திகதிக்குப் பின்னர் மாற்றீடு செய்வதில் உறப்பட்ட ஏதேனும் செலவினம் அல்ல எனக் கருதப்படுதல் வேண்டும்.

12. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது;–

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (உஉஉ) என்னும் பந்தியில் –

(i) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் "1987 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1987 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1997 ஏப்பிறல் 1ஆந் திகதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்;

(ii) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்;

"(i அ) உட்பந்தி (ii)இல் குறிப்பீடு செய்யப்படும் பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது பொருத்திகள் அல்லாதவையும் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டவையுமான ஏதேனும் பொறித்தொகுதி எந்திரத் தொகுதி அல்லது பொருத்திகள் அவரால் கொண்டு

நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில் உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் அவரால் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக, சேதாரத்தினாலும், தேய்மானத்தினாலும் எழுகின்ற அத்தகைய மதிப்பிறக்கத்துக்காக அவற்றின் கொள்ளலுக்கான விலையின் மீது ஆண்டொன்றுக்கு ஐம்பது சதவீதத்திலான விடுதொகை ஒன்று;"

(iii) அப் பந்தியின் காப்பு வாசகத்தில், "இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் அல்லது (ii) ஆம் உட்பந்தியில் அல்லது (iii) ஆம் உட்பந்தியில் "என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் அல்லது (iஅ) என்னும் உட்பந்தியில் அல்லது (ii) ஆம் உட்பந்தியில் அல்லது (iii) ஆம் உட்பந்தியில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(iv) அப் பந்திக்கான காப்பு வாசகத்தை உடனடுத்துப் பின்னர், பின்வரும் மேலதிக காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும் ;-

"ஆயின், மேலும் அத்தகைய ஆள் குத்தகைக்குக் கொடுக்கும் தொழிலைக் கொண்டுநடாத்துகின்றவிடத்து, அத்தகைய குத்தகைத் தொழிலைக் கொண்டு நடாத்தும்போது அவரினால் கொள்ளப்பட்டுக் குத்தைகக்குக் கொடுக்கப்பட்டன வான எவையேனும் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி பொருத்தி மோட்டார் வாகனம், லொறி, வசுவண்டி, உழவு இயந்திரம், இழுவண்டி அல்லது அலுவலகத் தளபாடங்கள் தொடர்பில் (i) அல்லது (iஅ)அல்லது (ii)ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் விடுதொகையானது, 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, அத்தகைய குத்தகைக்கு விடும் தொழிலில் இருந்து பெறப்படும் இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயப்படுத்துகையில் மாத்திரம் அவ்வாறு கழிக்கப்படுதல் வேண்டும்; "

(ஆ) அவ்வுட்பிரிவின் (உஉஉஉஉ) என்னும் பந்தியில், "அத்தகைய விடுதொகையானது அத்தகைய கணனி மென்ரகத்தைக் கொள்ளுவதற்கான செலவின் முப்பத்துமூன்றுடன் மூன்றிலொரு சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகையாகும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக அத்தகைய விடுதொகையானது-

(i) அத்தகைய கணனி மென்ரகம் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் அவ்வாறு கொள்ளப்பட்டால், அத்தகைய கணனி மென்ரகத்தைக் கொள்வதற்கான செலவின் முப்பத்து மூன்றுடன் மூன்றிலொரு சதவீதத்திற்கும்; அத்துடன்

(ii) அத்தகைய கணனி மென்ரகம் 1997, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் அவ்வாறு கொள்ளப்பட்டால், அத்தகைய கணனி மென்ரகத்தைக் கொள்வதற்கான செலவின் ஐம்பது சதவீதத்திற்கும்,

சமமான ஒரு தொகையாகும்.

(இ) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்தியில் "அக்கம்பனியை அமைப்பதில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(2) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில், (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் "(உஉஉ) என்னும் பந்தியின் கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(உஉஉ) என்னும்

பந்தியின் கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின் (உஉஉஉஉ) என்னும் பந்தியின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்.

13. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்று நாலாம் ஆண்டின் 21ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது;-

(1) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியில், (அ), (ஆ) என்னும் உட்பந்திகளில் "1987 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1987 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1997 ஏப்பிறல் 1ஆந் திகதிக்கு முன்னா" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் -

"(டட) (i) பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள் அல்லது சாதனம் அல்லாத ஏதேனும் பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி பொருத்திகள் அல்லது சாதனம் தொடர்பில் 1997 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் ஆண்டில் அவரால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் கீழ் செலுத்தப்படற்பாலதான மொத்த வாடகையின் அரைப்பங்கிற்குச் சமனாகவுள்ள ஒரு தொகையை விஞ்சுவதாக அத்தகைய உடன்படிக்கையின் கீழ் அவரால் செலுத்தப்பட்ட வாடகையின் அத்தகைய பாகம் ; அத்துடன்

(ii) ஏதேனும் மோட்டார் வாகனம், லொறி, வசுவண்டி, உழவு இயந்திரம், இழுவைவண்டி அல்லது அலுவலகத் தளபாடம் தொடர்பில் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் ஆண்டில் அவரால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் கீழ் செலுத்தற்படற்பாலதான மொத்த வாடகையின் நான்கிலொரு பங்குக்குச் சமனாகவுள்ள ஒரு தொகையை விஞ்சுவதாக, அத்தகைய உடன்படிக்கையின் கீழ் அவரால் செலுத்தப்பட்ட வாடகையின் அத்தகைய பாகம்.;"

14. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது;-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ;-

(அ) பந்தி (அ)வில் "இப்பந்தியின் நோக்கங்களுக்காக "வட்டி" என்னும் பதம், 1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு" என்னும் சொற்கள், எண்களில் இருந்து தொடங்கி இப்பந்தியின் முடிவுவரையிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;-

"இப்பந்தியின் நோக்கங்களுக்காக "வட்டி" என்னும் பதம், 1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு-

(i) ஏதேனும் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கு அல்லது கொள்வனவிற்கு அல்லது ஏதேனும் கட்டிடத்தில் நிர்மாணத்துக்கென ஏதேனும் இடத்தின் கொள்வனவு;

(ii) ஏதேனும் கம்பனியில் ஏதேனும் பங்குக் கொள்வனவு; அத்துடன்

(iii) ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில்,

என்பவற்றுக்காக எந்தக் கடனிலிருந்தான வரும் படிகள் பயன்படுத்தப்படுகின்றனவோ அக்கடன் மீது செலுத்தப்பட்ட வட்டி என்று பொருள்படும்."

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் -

(i) "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின்போது" என ஆரம்பிக்கும் எல்லாச் சொற்கள், எண்கள் ஆகியவற்றிலிருந்து "முந்திய ஆண்டொன்றின் அவரது நியதிச் சட்டமுறையான வருமானத்துக்கு எதிராகக் கழிக்க அனுமதிக்கப்பட்டிருக்க வில்லையோ அந்த நட்டத்தொகை" வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் -

"(ஆ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டானது -

*(i) 1997 மாச்சு 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவுறும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்கின்றவிடத்து, ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டின்போது ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் உறப்பட்ட (மூலதன நட்டம் அல்லாத (7)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நட்டம் அல்லது (7அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நட்டம் அல்லாத) எந்த நட்டத் தொகையானது ஒரு இலாபமாக இருந்திருப்பின், இச்சட்டத்தின் கீழ் அல்லது 1963 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ், வரிமதிப்பிடற்பாலதாக இருந்திருக்குமோ, அத்துடன், எந்த நட்டத்தொகை அச்சட்டங்களின் கீழ் முந்திய ஆண்டொன்றின் அவரது நியதிச் சட்டமுறையான வருமானத்திற்கு எதிராகக் கழிக்க அனுமதிக்கப்பட்டிருக்கவில்லையோ, அந்த நட்டத்தொகை ; அத்துடன்*

*(ii) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்கின்றவிடத்து -*

*(அ) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் போது (முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட வரிமதிப்பீட்டாண்டுக்கு நேரடி முற்போந்த ஆறு ஆண்டு காலப்பகுதிக்குள் வரும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்கின்ற) 1997 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டின்போது, ஏதேனும் வியாபாரத்தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில், தொழிலில் உறப்பட்ட (மூலதன நட்டம் ஒன்றை, (7) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நட்டம் அல்லது (7அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நட்டம், இவ்வுட் பந்தியின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நட்டம் 23(1) (உஉஉ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மதிப்பிறக்கத்துக்கான ஏதேனும் விடுதொகைக்கு ஏற்றிக்*

கூறப்படற்பாலதான ஒரு நட்டம் அல்லது 23(1) (உஉஉஉஉ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விடுதொகைக்கு ஏற்றிக் குறிப்பிடற்பாலதான ஒரு நட்டம் அல்லது 23(1)(ஊ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகைக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான ஒரு நட்டம் ஆகியவற்றைக் கொண்டிருக்கக் கூடிய வாறான அத்தகைய ஒரு நட்டத்தின் அத்தகைய பாகம் அல்லாத (ஏதேனுமிருப்பின்) ஒரு நட்டத்தொகை.

(ஆ) முதலாவதாக குறிப்பிடப்பட்ட வரிமதிப்பீட்டாண்டுக்கு நேரடி முற்போந்த பதினோராண்டு காலப்பகுதிக்குள் வரும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்கின்ற) 1997 ஆம் ஆண்டின் ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின்போது அவரினால் ஏதேனும் கமத்தொழில் பொறுப்பு முயற்சியில் உறப்பட்ட 23(1)(உஉஉ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மதிப்பிறக்கத்துக்கான ஏதேனும் விடுதொகைக்கு அல்லது 23(1) (உஉஉஉஉ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விடுதொகைக்கு அல்லது 23(1)(ஊ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகைக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான அத்தகைய நட்டத்தின், அத்தகைய பாகம் அல்லாத (ஏதேனும் இருப்பின்) ஒரு நட்டத் தொகை.

அந் நட்டத்தொகையானது ஒரு இலாபமாக இருந்திருப்பின் இச் சட்டத்தின் கீழ் வரி மதிப்பிடற்பாலதாகவும், அத்துடன் இச் சட்டத்தின் கீழ் விடயத்திற்கேற்ற வாறு அத்தகைய ஆறாண்டு அல்லது பதினொரு ஆண்டு காலப்பகுதிக்குள்ளான ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு அவரது நியதிச் சட்டமுறையான வருமானத்திற்கெதிராகக் கழிக்க அனுமதிக்கப் படாததாகவும், உள்ளவொரு நட்டத் தொகையாகும்.

(இ) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின்போது ஏதேனும் வியாபாரத்தில் தொழிலில், உயர் தொழில் அல்லது, வாழ்க்கைத் தொழிலில் உறப்பட்ட 23(1) (உஉஉ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மதிப்பிறக்கத்துக்கான விடுதொகை 23(1) (உஉஉஉஉ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விடுதொகை அல்லது 23(1) (ஊ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை என்பவற்றுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான அத்தகைய நட்டத்தின் அத்தகைய பாகம் (ஏதேனும் இருப்பின்) அது, ஒரு இலாபமாக இருந்திருப்பின் இச் சட்டத்தின்கீழ் அல்லது 1963ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் வரிமதிப்பிடற்பாலதாகவும், அத்துடன் இச் சட்டத்தின் கீழ் முந்திய ஆண்டொண்றின் அவரது நியதிச்சட்டமுறையான வருமானத்துக்கு எதிராகக் கழிக்க அனுமதிக்கப்பட்டிருக்காததாகவும் உள்ள அந்த நட்டத்தொகையின் அத்தகைய பாகமாகும்.

(ii) அப்பந்திக்கான காப்பு்வாசகத்தின் (iii)ஆம் உட்பந்தியில், "நிகழ்ந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிகழ்ந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(iii) அப்பந்திக்கான காப்பு்வாசகத்தின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்;

"(iv) 1997 மாச்சு 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்ட ஏதேனும் நட்டம் இப்பந்தியின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, 1997 மாச்சு 31ஆம் திகதியன்று முடிவடையும் வரிமதிப்பீட்டாண்டிற்கான மொத்த நியதிச் சட்ட வருமானத்திலிருந்து கழிப்பனவு செய்யப்பட்ட பின்னர் மீதி ஏதுமிருப்பின் அம்மீதி, (மூலதன நட்டமொன்றை, (7) ஆம் உட்பிரிவில் அல்லது (7அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நட்டமொன்றைத் தவிர) இப்பந்தியின் (11) ஆம் உட்பந்தியின் நோக்கங்களுக்காக 1998 மாச்சு 31ஆம் திகதியன்று முடிவடையும் வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்ட நட்டமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் –

(அ) பந்தி அ என்பதில் "பிரிவு 17ஏ அல்லது பிரிவு 17ஒ அல்லது பிரிவு 22அ" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "பிரிவு 17 ஏ அல்லது பிரிவு 17ஒ அல்லது பிரிவு 17ஒஒ அல்லது பிரிவு 22அ" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) பந்தி (ஆ) என்பதில் "அத்தகைய முழுத்தொகை அல்லது அதன் பாகம் உடனடுத்து வரும் வரிமதிப்பீட்டாண்டிற்கான அவரது நியதிச் சட்டமுறையான மொத்த வருமானத்திலிருந்து மேலும் அவ்வாறே தொடர்ந்தும் கழிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய மீதி முழுத்தொகை அல்லது அதன் பாகம் –

1997 மாச்சு 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய விலக்களிப்பு இல்லாதொழியுமிடத்து 1997 மாச்சு 31ஆம் திகதியன்று முடிவடையும் ஆண்டில் அல்லது அத்தகைய விலக்களிப்பு 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் இல்லாதொழியுமிடத்து அத்தகைய விலக்களிப்பு இல்லாதொழியும் வரிமதிப்பீட்டாண்டில் –

உறப்பட்ட நட்டமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் (2) உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்." ;

(3) அப்பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் காப்புவாசகத்தை சேர்ப்பதன் மூலம் ;–

"ஆயினும், எந்த வரிமதிப்பீட்டாண்டின்போது விலக்களிக்கப்பட்ட காலப்பகுதி முடிவடைகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவில் உள்ளவாறு அத்தகைய மொத்தத்திலிருந்து அத்தகைய கூட்டுமொத்தம் கழிப்பனவு செய்யப்பட்ட பின்னர் அதன்மீது எதுவும் எஞ்சியிருக்குமிடத்து, அத்தகைய மீதியானது, (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்கு, எந்த வரிமதிப்பீட்டாண்டில் விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைகிறதோ அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப்பின்னுறும் வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்ட நட்டமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.";

15. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது;–

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அஅஅஅஅஅ) என்னும் பந்தியில், "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ஒரு இலட்சம் ரூபா படியொன்று, அத்துடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ஒரு இலட்சம் ரூபாப் படியொன்றுடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அஅஅஅஅஅ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் –

"(அஅஅஅஅஅஅ) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ஒரு இலட்சத்து நாற்பத்துநாலாயிரம் ரூபா படியொன்றுடன், அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் –

"(ஆ) அவர் 31ஆம் பிரிவின் கீழ் அல்லது 31அ என்னும் பிரிவின் கீழ் எந்தப் படிக்கு உரித்துடையவராகின்றாரோ அந்த ஏதேனும் படியொன்றுடன்;" : அத்துடன்

(ஈ) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் "அல்லது (அஅஅஅஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது (அஅஅஅஅஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅஅஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) "31ஆம் பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக " 31ஆம் பிரிவின் கீழ் அல்லது 31அ என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் ;

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான முதலாவது காப்புவாசகத்தில் –

(i) அக்காப்பு வாசகத்தின் (ஏ) என்னும் பந்தியில் "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அக்காப்பு வாசகத்தின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் ;

"(ஒ) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதி அல்லது அதன் பின்னர் தொடக்கம் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபா படியொன்று" ; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவிற்கான இரண்டாம் காப்பு வாசகத்தில் –

(i) அக்காப்பு வாசகத்தின் (iii) ஆம் உட்பந்தியில் "1995 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து அறுபதினாயிரம் ரூபாவுக்கு; அத்துடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1995 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து அறுபதினாயிரம் ரூபாவுக்கு;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அக்காப்பு வாசகத்தின் (iv) ஆம் உட்பந்தியில் "அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டொண்றாக இருக்குமிடத்து ஒரு இலட்சம் ரூபாவுக்கு;" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டொன்றாக இருக்குமிடத்து ஒரு இலட்சம் ரூபாவுக்கு; அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(iii) அக்காப்பு வாசகத்தின் (iv) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் ;-

"(v) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டொன்றாக இருக்குமிடத்து ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவுக்கு;"

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்;-

"தகைமையளிக்கும் முதலீடு தொடர்பில் படியொன்று

31அ. (1) இப்பிரிவின் அடுத்துறும் ஏற்பாடுகளுக்கமைய, 30ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அந்த வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆளினால் செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான தகைமையளிக்கும் முதலீடு ஒவ்வொன்று தொடர்பிலும் எவரேனும் ஆளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து விடுதொகையொன்று கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும் (இது இதனகத்துப் பின்னர் இப்பிரிவில் "முதலீட்டு வரி விடுதொகை" எனக் குறிப்பீடு செய்யப்படும்)

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக –

(அ) எவரேனும் ஆள் தொடர்பிலும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் "தகைமையளிக்கும் முதலீடு" என்பது அத்தகைய ஆளினால் –

(i) 1996 நவெம்பர் 6ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1998 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர்;

(ii) எவையேனும் பொருட்களின் அல்லது வியாபாரப் பண்டங்களின் தயாரிப்பிற்கு அல்லது உற்பத்திக்கு அல்லது ஏதேனும் மொத்த அல்லது சில்லறை வியாபாரத்தில் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சேவையை அளிப்பதற்கான ஏதேனும் தொழிலில் அவரால் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் பொறுப்பு முயற்சியில் பயன்படுத்துவதற்கான (எந்த மூலதனச் சொத்துத்

தொடர்பில் 24ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 23ஆம் பிரிவின் கீழ் பெறுமானத் தேய்விற்கான விடுதொகையொன்று கழிப்பனவு செய்யப்படற்பாலதாகின்றதோ அந்த ஏதேனும் மூலதனச் சொத்தாகிய) ஏதேனும் புதிய மூலதனச் சொத்தின் கொள்ளளவில் செலவிடப்படும் ஏதேனும் பணத்தொகை என்று பொருள்படும்.

(ஆ) எவரேனும் ஆளினால் கொள்ளப்பட்ட ஏதேனும் மூலதனச் சொத்து (அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் தகைமையளிக்கும் முதலீட்டில் அடங்கியுள்ள மூலதனச் சொத்தொன்று ஆகவுள்ள) அத்தகைய மூலதனச் சொத்து கொள்ளப்பட்ட தேதியிலிருந்து முந்நூற்றி அறுபத்தைந்து நாட்களுக்குப் பிந்தாமல் (அ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியில் பயன்படுத்தப்படுமிடத்து அத்தகைய மூலதனச் சொத்து தொடர்பிலான தகைமையளிக்கும் முதலீடு எந்த வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய கொள்ளும் திகதி இடப்பெறுகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) தகைமையளிக்கும் முதலீடானது –

(i) இருநூற்றி ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாதவொரு தொகையாக இருக்குமிடத்து அல்லது கொழும்பு நிருவாக மாவட்டத்துள் அமைந்துள்ள எல்லா மாநகர சபைகளினதும் எல்லைகளுக்கு வெளியே அமைந்துள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சியில் செய்யப்படுமிடத்து, அந்த முதலீடு தொடர்பிலான முதலீட்டுவரி விடுதொகையானது அந்த முதலீடு முழுவதற்கும் சமமான ஒரு தொகையாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) இருநூற்றி ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறைவான ஒரு தொகையாக இருக்குமிடத்து அத்துடன் கொழும்பு நிருவாக மாவட்டத்துள் அமைந்துள்ள ஏதேனும் எல்லா மாநகர சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சியில் செய்யப்படுமிடத்தும் அத்தகைய முதலீடு தொடர்பிலான முதலீட்டு வரி விடுதொகையானது அத்தகைய முதலீட்டின் எழுபத்தைந்து சதவீதத்திற்குச் சமமான ஒரு தொகையாக இருத்தல் வேண்டும்.

(4) ஏதேனும் தகைமையளிக்கும் முதலீடு எந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்யப் படுகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் ஆளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து அத்தகைமையளிக்கும் முதலீடு தொடர்பிலான முதலீட்டு வரி விடுதொகையின் கழிப்பனவானது –

(i) அத்தகைய தகைமையளிக்கும் முதலீடு, (3) ஆம் உட்பிரிவின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் தகைமையளிக்கும் முதலீடாக இருக்குமிடத்து, அத்தகைய வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தில் எழுபத்தைந்து சதவீதத்திற்குச் சமமான ஒரு தொகை அல்லது அத்தகைய முதலீட்டின் முழுத்தொகை ஆகிய இவற்றுள் எது குறைந்ததோஅதுவாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) அத்தகைய தகைமையளிக்கும் முதலீடு, (3) ஆம் உட்பிரிவின் (ii)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் தகைமையளிக்கும் முதலீடாக இருக்குமிடத்து, அத்தகைய வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தின் ஐம்பது சதவீதத்திற்குச் சமமான ஒரு தொகை அல்லது அத்தகைய முதலீட்டின் முழுத்தொகை ஆகிய இவற்றுள் எது குறைந்ததோ அதுவாக இருத்தல் வேண்டும்.

(5) ஏதேனும் முதலீட்டு வரி விடுதொகை (4) ஆம் உட்பிரிவிற்கிணங்க கழிப்பனவு செய்யப்பட்ட பின்னர் அதன்மீதி, ஏதேனுமிருப்பின், அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் வரிமதிப்பீட்டாண்டிற்கு முன்னெடுத்துச் செல்லப்படுதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு முன்னெடுத்துச் செல்லப்பட்ட அத்தகைய மீதி, அத்தகைய அடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டிற்கான முதலீட்டுவரி விடுதொகையாக அந்தப்படியே முதலீட்டு வரி விடுதொகையின் முழுத்தொகையும் கழிப்பனவு செய்யப்படும்வரை கருதப்படுதல் வேண்டும்.

(6) இப் பிரிவின் ஏற்பாடுகள் –

(அ) (i) எந்த மூலதனச் சொத்துத் தொடர்பில் மேம்பாடான தொழில்நுட்பவியலின் பயன்பாட்டிற்காக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்பு செயற்றிட்டங்களின் நியதிகளின்படி சுங்கத்தீர்வையின் ஏதேனும் தள்ளுபடிக்கு அல்லது விடுகைக்கு உரித்தெதுவுமிருப்பின் அது பயன்படுத்தப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் மூலதனச் சொத்தைக் கொள்ளுவதற்கு முதலீடு செய்யப்பட்ட தொகை தொடர்பில்; அல்லது

(ii) அத்தகைய சொத்து (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியில் பயன்படுத்தப்படின் அல்லது பயன்படுத்தப்படவிருப்பின் எந்த இலாபங்களும் வருமானமும் 1996 நவெம்பர் 6ஆம் திகதி தொடங்கி 1999 மாச்சு 31ஆம் திகதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது வருமான வரியிலிருந்து ஏதேனும் விலக்களிப்புக்கு உரித்துடையதாகின்றதோ அந்த இலாபங்கள் அனைத்தும் வருமானம் முழுவதற்கும் அல்லது அந்த இலாபங்களினதும் வருமானத்தினதும் ஏதேனும் பாகத்திற்கு ; அல்லது

(ஆ) அத்தகைய மூலதனச் சொத்து கொள்ளப்பட்ட திகதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்று ஆண்டுகள் முடிவுறுவதற்கு முன்னர் அத்தகைய மூலதனச் சொத்து கையுதிர்க்கப்படின்," ;

ஏற்புடைத்தாக மாட்டாது.

(7) எவரேனும் ஆளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து –

(அ) அத்தகைய மூலதனச் சொத்து கொள்ளப்பட்ட திகதியின் பின்னரான முந்நூற்றி அறுபத்தைந்து நாட்கள் முடிவுறுவதற்கு முன்னர் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியின் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியில் பயன்படுத்தப்படாத ; அல்லது

(ஆ) ஆறாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் மூலதனச் சொத்து தொடர்பில் முதலீட்டுவரி விடுதொகையொன்று கழிப்பனவு செய்யப்பட்டுள்ள விடத்து அப்போது, இச் சட்டத்திலுள்ள எது எவ்வாறிருப்பினும் அவ்வாள் தொடர்பில் எந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய விடுதொகை அளிக்கப்பட்டதோ அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில், அத்தகைய விடுதொகை எதுவும் அளிக்கப்படாதிருந்திருப்பின் விடுதொகை அளிக்கப்பட்டுள்ள ஆள் எந்த வருமான வரிக்கு ஆளாகியிருப்பாரோ அந்த வருமான வரிக்கும் அந்த வரி மதிப்பீட்டிற்கு அறவிடப்பட்ட வருமானவரியின் தொகைக்கும் இடையிலான வித்தியாசம் அடங்கிய மேலதிக வரிமதிப்பீடொன்று செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் வரிமதிப்பீட்டு மேன்முறையீடு பற்றிய அறிவித்தல் மற்றும்

வேறு நடவடிக்கைகள் என்பன தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(8) இப்பிரிவின் நோக்கங்களுக்கு –

(அ) "ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சேவையை அளித்தல் என்னும் சொல்லமைப்பு–

(i) மின்சார, வாயு, விநியோகம், சுற்றாடற் பாதுகாப்புச் சேவைகள், வைத்திய சாலைச் சேவைகள், கணனிக் கனிமம், கணனி வழிமுறை திட்டமிடல் அல்லது கணனி ஒழுங்குகள் ; அல்லது

(ii) தொலைத் தொடர்பு, கணனி பிரயோகங்களிற் பயிற்சி, கப்பல் அல்லது வானூர்தி பழுதுபார்த்தல், கடல்சார் கப்பற் சரக்கு கொள்கலன்களைச் செவ்வைப்படுத்துதல், பண்டகசாலைத் தொகுதிகளில் வைத்தல், களஞ்சியப் படுத்தல், வீட்டு நிர்மாணம் ஆகிய சேவைகளை வழங்குதல்;

(iii) இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையுடன் உல்லாசப் பிரயாணிகளுக்காக ஊேறாட்டல் தொழிற்பாடு.

என்று பொருள்படும்.

(ஆ) "கொள்ளப்படும் தேதி" என்னும் சொல்லமைப்பு ஏதேனும் மூலதனச் சொத்துத் தொடர்பிலும் எவரேனும் ஆள் தொடர்பிலும் அத்தகைய மூலதனச் சொத்து அத்தகைய ஆளினால் கொள்ளப்படும் தேதி என்று அல்லது அத்தகைய சொத்தின் கொள்ளலுக்கு அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியால், அவருக்கு முன் வைக்கப்பட்ட ஆவணச்சான்று எதனையும் கருத்திற் கொண்டு ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தேதி என்று பொருள்படும்;

(இ) ஏதேனும் மூலதனச் சொத்தத்தொடர்பில் "கையுதிர்தல்" என்னும் பதம் 23(7) ஆம் பிரிலில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டுள்ளது.

(ஈ) ஏதேனும் மூலதனச் சொத்துத் தொடர்பில் "புதிய" என்னும் பதம் அத்தகைய மூலதனச் சொத்து கொள்ளப்படும் தேதிக்கு முன்னர் இலங்கையில் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை என ஆவணச் சான்றினால் ஆணையாளர் தலைமை அதிபதி திருப்தியுறும் வகையில் எண்பிக்கப்பட்ட ஏதேனும் மூலதனச் சொத்து என்று பொருள்படும்."

(உ) இவ்வுப்பந்தியின் நோக்கங்களுக்கு "மூலதனச் சொத்து" என்னும் பதம் ஏதேனும் கட்டிடத்தை, பிணைச்சலை, இணைப்பை, பாத்திரத்தை அல்லது ஏதேனும் மோட்டார் வாகனத்தை தவிர்ந்த ஏதேனும் பொறி, பொறித் தொகுதி அல்லது உபகரணம் என்று பொருள்படும் ;

(ஊ) "பெறுமானத் தேய்வுக்கான விடுதொகை" என்ற சொல்லமைப்பு 23 (7) ஆம் பிரிவில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டுள்ளது.

(எ) "மோட்டார் வாகனம்" என்பது ஒரு மோட்டார் அம்பியூலன்ஸ் ஆகவோ, லொறியாகவோ, ட்ராக்டராகவோ, கை ட்ராக்டராகவோ, இழுவை வண்டியாகவோ அல்லது முப்பது ஆட்களுக்குக் குறையாதவர்களை ஏற்றிச் செல்வதற்கென

நிர்மாணிக்கப்பட்ட ஒரு மோட்டார் கோச்சாகவோ அல்லாத இயந்திரநுட்பத்தில் இயக்கப்படும் ஏதேனும் வாகனம் என்று பொருள்படும்.

(ஏ) "ஆசுப்பத்திரிச் சேவைகள்" என்பது (220 ஆம் அத்தியாயமான) மருத்துவ விடுதிகள் ஒழுங்கு விதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றினால் உள்ளக நோயாளர்களுக்கு வழங்கப்படுவதற்கென அதிகாரமளிக்கப்பட்ட சேவைகள் என்று பொருள்படும்"

17. ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஆம் பிரிவு இத்தால் மேலும் திருத்தப் படுகின்றது;-

(1) அப்பிரிவின் (1.) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (ix) ஆம் உட்பந்தியில் "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;- அத்துடன்

(ஆ) அப்பந்தியின் முடிவில் பின்வரும் உட்பந்தியை சேர்ப்பதன் மூலமும் ;-

"(x) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் பாகம் 11ஏ என்பதில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களின்படி ;"

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் -

(அ) அக் காப்புவாசகத்தின் (vi) ஆம் உட்பந்தியில் "1995 ஏப்பிறல் 1ஆந் திகதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபாவையும் அத்துடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபாவையும் என்னும்" சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அக் காப்புவாசகத்தின் (vii) ஆம் உட்பந்தியில் "1996 ஏப்பிறல் 1ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாவையும் என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாவையும் அத்துடன் "என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அக்காப்பு வாசகத்தின் (vii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் -

"(viii) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவையும் என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஒரு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒரு மில்லியன் எட்டு இலட்சம் ரூபாவை" என்றும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ix) என்னும் உட்பந்தியில் "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11எ என்னும் பாகத்தில்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11எ என்னும் பாகத்தில் அல்லது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ix) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் ;-

"(x) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஏ என்னும் பாகத்தில் ;"

18. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉ என்னும் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டாக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

19. ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 27ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 33அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது;

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் "அத்தகையகழிப்பனவு" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அத்தகைய கழிப்பனவு, 1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து –

(i) பிரிவு 33(1) (அ) என்பதன் கீழும் ; அத்துடன்

(ii) பிரிவு 32ஊ, பிரிவு 32ஏ அல்லது பிரிவு 32ஓ அல்லது பிரிவு 32க அல்லது பிரிவு 32ங என்பதன் கீழ் அத்தைகய கம்பனியினால் அந்த வரிமதிப்பீட்டாண்டில் செலுத்தற்படற்பாலதான வரியின் கூட்டுமொத்தத்தின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுதலாகாது; அத்துடன் என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்:

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

20. கடைசியாக 1996 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 73ஆம் பிரிவு; இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அவ்வுட்பிரிவின் (vi)ஆம் பந்தியில் "1995 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபா அத்துடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1995 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபா" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (vii)ஆம் பந்தியில் "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஒரு இலட்சம் ரூபா " என்னும் இலக்கங்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" ஒரு இலட்சம் ரூபா; அத்துடன் " என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் ;-

(viii) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவையும்."

21. கடைசியாக 1982ஆம் ஆண்டின் 27ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 81அ என்னும் பிரிவு; அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில். "ஒவ்வோராளும் அத்தகைய கொடுப்பனவுத் தொகையின் முப்பத்து முன்றொடு முன்றிலொரு சதவீதத்திற்குச் சமமான வருமான வரியைக் கழித்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக,

" ஒவ்வோராளும்

(i) அத்தகைய கொடுப்பனவு; 1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் செய்யப்படுமிடத்து அத்தகைய கொடுப்பனவுத் தொகையின் முப்பத்து முன்றொடு முன்றிலொரு சதவீதத்திற்கு; அத்துடன்

(ii) அத்தகைய கொடுப்பனவு; 1997 ஏப்பிறல் 1ஆம் திகதி அல்லது அதன் பின்னர் செய்யப்படுமிடத்து அத்தகைய கொடுப்பனவுத் தொகையில் பதினைந்து சதவீதத்திற்குச் சமமான வருமானவரியைக் கழித்தல் வேண்டும் என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

22. கடைசியாக 1996ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 99ஆம் பிரிவு; அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) (அ) மாதம் ஒன்றுக்கு பன்னிரண்டாயிரம் ரூபாவுக்குக் கூடுதலான அல்லது ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவுக்குக் கூடுதலான ஊதியத்தைப் பெறும் எவரேனும் தனியாளை; அல்லது

(ஆ) இலங்கையில் செய்த சேவைகளுக்காக மாதமொன்றுக்கு எண்பத்தைந்து ரூபாவுக்கு அல்லது ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாவுக்குக் கூடுதலான ஊதியத்தைப் பெறுகின்ற வதிவற்ற தனியாள் எவரையும்.

தொழிலுக்கமர்த்தியுள்ளவரும் 1963 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, உண்ணாட்டரிசிறைச் சட்டத்தின் 107இ என்னும் பிரிவின்கீழ் அல்லது இச் சட்டத்தின் இவ்வத்தியாயத்தின் கீழ் ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அறிவித்தல் கொடுத்திராதவருமான தொழில்தருநர் ஒவ்வொருவரும் (இதனத்துப்பின்னர் இவ்வத்தியாயத்தில் "குறித்துரைக்கப்பட்ட ஊழியர்" ஒருவராகக் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான) அத்தகைய தனியாளைத் தாம் தொழிலுக்கமர்த்தியிருப்பதாக 1997 செத்தெம்பர் 30 ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்".

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "தொழில்தருநர்" என்பதன் வரைவிலக்கணத்தில் "செயலாளர்,முகாமையாளர் அல்லது வேறு முதன்மைஅலுவலர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பணிப்பாளர், செயலாளர், முகாமையாளர் அல்லது வேறு முதன்மை அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்

(2) "சம்பளக்காலம்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் :-

"ஏதேனும் கம்பனி அல்லது ஆட்கள் குழுத் தொடர்பில் "முதன்மை அலுவலர்" என்பது அக் கம்பனியின் அல்லது ஆட்கள் குழுவின் சார்பில் இந்த அத்தியாயத்தின் அல்லது அத்தியாயம் XXi என்பதன் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த ஆள் அக்கம்பனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் தமக்குத் தொடர்பெதுவும் இல்லையென அல்லது இலங்கையில் வதிவுள்ள வேறோர் ஆளே அதன் முதன்மை அலுவலர் என்று எண்பித்தாலன்றி, அந்த ஆள் என்று பொருள்படும்."

24. கடைசியாக 1994 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 113அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (i) ஆம் பந்தியில் "1986 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1992 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாக இருக்குமிடத்து அவ்வாறு கொடுபடற்பாலதான வட்டியின் இருபது சதவீதம் என்ற வீதப்படியும் அத்துடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக- இருக்குமிடத்து, அவ்வாறு கொடுபடற்பாலதான வட்டியின் இருபது சதவீதம் என்ற வீதப்படியும், அத்துடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ii)ஆம் பந்தியில் "1992 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து அவ்வாறு கொடுக்கப்படற்பாலதான வட்டியின் பதினைந்து சதவீதப்படியும்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1982 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து, அவ்வாறு கொடுபடற்பாலதான வட்டியின் பதினைந்து சதவீதம் என்ற வீதப்படியும்;" அத்துடன் என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (ii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(iii) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து அவ்வாறு கொடுபடற்பாலதான வட்டியின் பத்து சதவீதம் என்று வீதப்படியும்; ".

25. ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 56ஆம் இலக்கச் சட்டத்தால் உட்புகுத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 113இ என்னும் பிரிவு அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "வரிமதிப்பீட்டாண்டொன்றின் இச் சட்டத்தின் கீழ் வருமானவரி விதிக்கப்படுவதற்குரிய ஆட்களுக்கு அதனால் கொடுக்கப்படும் வட்டி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் எவரேனும் ஆட்களுக்குக் கொடுக்கப்படும் வட்டி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

26. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்டவாறான முதன்மைச்சட்டவாக்கத்தின் 113ஒ என்னும் பிரிவு பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "அத்தகைய குறித்துரைக்கப்பட்ட கட்டணத்திலிருந்து அத்தகைய குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் மூன்று சதவீதம் என்ற வீதப்படி வருமானவரியைக் கழித்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக" அத்தகைய குறித்துரைக்கப்பட்ட கட்டணத்திலிருந்து –

(i) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1992 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து அத்தகைய குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் மூன்று சதவீதம் என்ற வீதப்படியும்; அத்துடன்

(ii) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1997 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து அத்தகைய குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் ஐந்து சதவீதம் என்ற வீதப்படியும் வருமானவரியைக் கழித்தல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) அதன் (2)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "வேறு எவரேனும் ஆளின் அல்லது பங்குடைமையின் சார்பில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேறு எவரேனும் ஆளின் அல்லது ஆட்களின் பங்குடைமையின் அல்லது சார்பில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113க என்னும் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் " 1993 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டா ண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக," 1993 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ங என்னும் பிரிவு அப்பிரிவில்" 1993 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும்

சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1993 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ஔ என்னும் பிரிவு; அப்பிரிவில் "1993 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1993 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113த என்னும் பிரிவு; அப்பிரிவில் "தொழில் தருநரால் செலுத்தப்படுகின்றதுமான" என்னும் சொற்களுப் பதிலாக, "தொழில்தருநரால் 113க என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க செலுத்தப்படுகின்றதுமான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 151ஆம் பிரிவு; அதன் (2)ஆம் உட்பிரிவின் (iii) ஆம் பந்தியில், "அல்லது 103 ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்னும் பந்திகளின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அல்லது 103ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), அல்லது (உ) என்னும் பந்திகளின" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அல்லது 103ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்னும் பந்திகளின் அல்லது 113அ என்னும் பிரிவின் (2)ஆம் உட்பந்தியின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

32. கடைசியாக 1996 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது;-

(1) அவ்வட்டவணையின் பாகம் 11 எ என்பதில் " 1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமானவரி வீதங்கள் பின்வருமாறு;-

"1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமானவரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) அவ்வட்டவணையில் பாகம் 11எ என்பதனை உடனடுத்து பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

பாகம் 11ஏ

1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமானவரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் ;

| | |
|---|---|
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானமாகிய முதலாவது ரூபா 100,000 மீது | 10 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானமாகிய அடுத்த ரூபா 100,000 மீது | 15 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானமாகிய அடுத்த ரூபா 100,000 மீது | 25 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானமாகிய மீதியின் மீது | 35 சதவீதம் |

3. அவ்வட்டவணையின் பாகம் iv இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது;-

(அ) அப்பாகத்தின் (இ) என்னும் பந்தியில் "1990 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1990 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பாகத்தின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்;-

"(ஈ) 1997 ஏப்பிறல் 1ஆம் திகதி அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு :

| | |
|---|---|
| முதலாவது ரூபா 400,000 மீது | இல்லை |
| அடுத்த ரூபா 100,000 மீது | 5 சதவீதம் |
| அடுத்த ரூபா 100,000 மீது | 10 சதவீதம் |
| மீதியின் மீது | 15 சதவீதம் |

33. 1996ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஏழாம் அட்டவணை இத்தால் திருத்தப்படுகின்றது;-

(1) "1994 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக் கம்பனி வரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்;" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1994 ஏப்பிறல் 1ஆம் திகதி அல்லது அதன் பின்னர் ஆனால் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக் கம்பனி வரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வட்டவணையின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்;

"1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக் கம்பனி வரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்;-

(i) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது-

(அ) பிரிவு 32ஊ அல்லது பிரிவு 32ஏ அல்லது பிரிவு 32ஒ அல்லது பிரிவு 32க என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க, வரி விதிக்கப்படும் இலாபங்கள் அல்லாத வேறு இலாபங்களிலிருந்து

54 சதவீதம்

(ஆ) பிரிவு 32ஒ அல்லது பிரிவு 32ஓ அல்லது பிரிவு 32க அல்லது பிரிவு 32ங என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க வரி விதிக்கப்படும் இலாபங்களிலிருந்து

17 சதவீதம்

(இ) பிரிவு 32ஊ என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க வரி விதிக்கப்படும் இலாபங்களிலிருந்து

11 சதவீதம்

(ii) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றல்லாத நம்பிக்கைப் பொறுப்புக் கூறு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் அல்லது வேறு ஏதேனும் கம்பனியினால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது –

(அ) பிரிவு 32ஊ அல்லது பிரிவு 32ஏ அல்லது பிரிவு 32ஓ அல்லது பிரிவு 32க அல்லது பிரிவு 32ங என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க வரி விதிக்கப்படும் இலாபங்கள் அல்லாத வேறு இலாபங்களிலிருந்து

27 சதவீதம்

(ஆ) பிரிவு 32ஏ அல்லது பிரிவு 32ஓ அல்லது பிரிவு 32க அல்லது பிரிவு 32ங என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க வரிவிதிக்கப்படும் இலாபங்களிலிருந்து

8 சதவீதம்

(இ) பிரிவு 32ஊ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வரி விதிக்கப்படும் இலாபங்களிலிருந்து

5 சதவீதம்

34. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 9(1) (ஆஆ) என்னும் பிரிவில் இச் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவிற்கு இச்சட்டத்தின் 13(1)(அ) என்னும் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச் சட்டத்தின் 16ஆம் பிரிவு எல்லா நோக்கங்களுக்காகவும் 1996 நவெம்பர் 6ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இச் சட்டத்தின் 2(2) ஆம் அத்துடன் 4(2) முதல் 4(6) வரையிலான பிரிவுகளால் செய்யப்பட்டவையான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4(1) (ஈ), 9(1) (ஆஆஆ), 9(1) (க) என்னும் பிரிவுகளுக்கான திருத்தங்களும், 91(1)(ஞ) என்பதன் உட்புகுத்துகையும் எல்லா நோக்கங்களுக்காகவும் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

(5) இச் சட்டத்தின் 12ஆம், 13ஆம், 14ஆம், 15ஆம், 17ஆம், 18ஆம், 19ஆம், 20ஆம், 21ஆம், 23ஆம், 26ஆம், 27ஆம், 28ஆம், 29ஆம் பிரிவுகளால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23, 24, 29, 30, 32, 32உஉஉ, 33அ, 73, 81அ, 113அ , 113க, 113ங, 113ஞ, 113த என்னும் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இச் சட்டத்தின் 31ஆம் 32 ஆம் பிரிவுகளால் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் ஏழாம் அட்டவணைக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

35. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் , சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1997ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க. நிதி (திருத்தச்) சட்டம்

[1997 திசெம்பர் மாதம் 10ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1963ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத்
திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச் சட்டம் , 1997 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 11ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"கணக்குகளின் கணக்காய்வு

11. பகிரங்க கூட்டுத்தாபனங்களினது கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரை, சபையின் நிதியத்தினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்."

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது: -

"தேசிய லொத்தர்கள்

14. (1) சபையானது, அதனால் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நடாத்தப்படும் எவையேனும் லொத்தர்களோடு சேர்த்து மேலதிகமாக ஒவ்வோராண்டும் விதித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினவான லொத்தர்களை நடாத்துதல் வேண்டும். அத்தகைய லொத்தர் ஒவ்வொன்றும், விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய முறையில் சபையினால் நடாத்தப்படல் வேண்டும்.

(2) சபையானது, ஏதேனும் அமைச்சு, அரசாங்கத் திணைக்களம் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்காக அல்லது ஆகியவற்றின் சார்பில், சபைக்கும், விடயத்துக்கேற்றவாறு அத்தகைய அமைச்சுக்கும் அரசாங்கத் திணைக்களத்திற்கும் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையே உடன்பட்டுக் கொள்ளப்படக் கூடியவாறான, (மற்றவற்றுக்கிடையே, அத்தகைய உடன்படிக்கையின் கீழ் நடாத்தப்படும் ஏதேனும் லொத்தரில் வெல்லப்படாத பரிசுகளை அத்தகைய உடன்படிக்கையின் கீழ் பின்னர் நடாத்தப்படும் லொத்தர்களில் பரிசுகள் அளிக்கப்படுவதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கெனப் பரிசு ஒதுக்குக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்கின்ற நியதிகள் அத்துடன் அத்தகைய உடன்படிக்கையின் கீழ் நடாத்தப்படும் லொத்தர்களில் இழக்கப்படுகின்ற பரிசுகள் என்ன முறையில் கையுதிர்க்கப்படல் வேண்டும் என்ற நியதிகள் உட்பட) அத்தகைய நியதிகளின் மேல், லொத்தர்களை நடாத்தலாம்.

(3) இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் சபையினால் நடாத்தப்படும் லொத்தர் ஒவ்வொன்றும், இதனகத்துப்பின்னர் "தேசிய லொத்தர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1)(அ) பதினாலாம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் கீழ் தவிர, வேறு வகையில் சபையினால் நடாத்தப்படும் தேசிய லொத்தர் ஒன்றில் அளிக்கப்படவேண்டிய பரிசுகளின் எண்ணிக்கை, அத்துடன் அத்தகைய பரிசு ஒவ்வொன்றினதும் பெறுமதி, விதித்துரைக்கப் பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(ஆ) பதினாலாம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்றின் கீழ் சபையினால் நடாத்தப்படும் லொத்தர் ஒன்றில் அளிக்கப்படவேண்டிய பரிசுகளின் எண்ணிக்கை, அத்துடன் அத்தகைய பரிசு ஒவ்வொன்றினதும் பெறுமதி அத்தகைய உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்."

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"3(அ) பதினாலாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் கீழ் தவிர, வேறு வகையில் சபையினால் நடாத்தப்படும் தேசிய லொத்தர் ஒவ்வொன்றிலும் பரிசு பெறுபவர்கள், விதித்துரைக்கப்படக் கூடியவறான அத்தகைய முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பதினாலாம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் கீழ் சபையினால் நடாத்தப்படும் தேசிய லொத்தர் ஒன்றில் பரிசு பெறுபவர்கள், அத்தகைய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் தீர்மானிக்கப்படல் வேண்டும்."

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(4) சபையினால் நடாத்தப்படும் தேசிய லொத்தர் ஒன்றில் வெற்றி பெற்றவர்கள் தீர்மானிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதியொன்று முடிவடைந்த பின்னர், அதற்கென உரித்துடைய ஆளுக்கு, அத்தகைய ஆளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற நிகழ்வு காரணமாக அத்தகைய தேசிய லொத்தரில் வழங்கப்படாதிருக்கும் பரிசு எதுவும் வழங்கப்படாது இழப்பிக்கப்படுதல் வேண்டும். அத்துடன், அத்தகைய பரிசானது 14ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் கீழ் தவிர, வேறுவகையில் சபையினால் நடாத்தப்பட்ட தேசிய லொத்தர் ஒன்று தொடர்பானதாக இருந்தால், சபையின் நிதியத்துக்கும், அத்துடன் அத்தகைய பரிசு 14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் கீழ் சபையினால் நடாத்தப்பட்ட தேசிய லொத்தர் ஒன்று தொடர்பானதாக இருந்தால், அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளுக்கு இணங்கக் கையுதிர்க்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பரிசு தொடர்பில் செய்யப்பட்ட ஏதேனும் உரிமைக் கோரிக்கையிலிருந்து எழுகின்ற ஏதேனும் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கையானது, மேலே கூறப்பட்ட காலப்பகுதியின் முடிவின்போது ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் முடிவுறாதிருக்கின்றவிடத்து, அத்தகைய இழப்பிப்பு

செய்யப்படுதலாகாது. அத்துடன், அவ்வழக்கின் அல்லது வழக்கு நடவடிக்கையின் இறுதித் தீர்மானத்தில், அத்தகைய பரிசுக்கு எவரேனும் ஆள் உரித்துடையவர் என வெளிப்படுத்தப்பட்டால், சபை, அவ்வாளுக்கு அத்தகைய பரிசை வழங்குதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு ஆளெவரும் வெளிப்படுத்தப்படாவிட்டால், அத்தகைய பரிசு இழப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன், அத்தகைய பரிசு 14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் கீழ் தவிர வேறுவகையில் சபையினால் நடாத்தப்பட்ட தேசிய லொத்தர் ஒன்று தொடர்பானதாக இருந்தால், அது, சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன், அத்தகைய பரிசு, 14ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் கீழ் சபையினால் நடாத்தப்பட்ட லொத்தரொன்று தொடர்பானதாக இருந்தால், அது, அத்தகைய உடன்படிக்கைகளின் நியதிகளுக்கிணங்கக் கையாளப்படுதல் வேண்டும்."

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவைஉடனடுத்துப் பின்னர், பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(1அ) பதினாலாம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட உடன் படிக்கையொன்றின் கீழ் தவிர, வேறுவகையில் சபையினால் நடாத்தப்படும் தேசிய லொத்தர் ஒன்றில் பணத்தைக்கொண்ட பரிசொன்று ஆள் எவரினாலும் வெல்லப்படாதிருக்கின்றவிடத்து, அத்தகைய பரிசுப்பணமானது இப்பிரிவில் முரணாக எது எப்படியிருப்பினும், பரிசு ஒதுக்குக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன்அத்தகைய கணக்கில் சேருகின்ற பணங்கள், 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட உடன்படிக்கையான்றின் கீழ் தவிர வேறுவகையில் சபையினால் தொடர்ந்து பின்னர் நடாத்தப்படும் தேசிய லொத்தர்களினால் பரிசுகள் வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்."

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "நிரந்தரச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட பணத் தொகையொன்றை ஒவ்வொரு தேசிய லொத்தரினதும் அத்தகைய வரும்படிகளிலிருந்து கழித்ததன் பின்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொகையை, 14ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் கீழ்த் தவிர வேறுவகையாக, சபையினால் நடாத்தப்படும் ஒவ்வொரு தேசிய லொத்தரினதும் அத்தகைய வரும்படிகளிலிருந்து கழித்ததன்பின்னர்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்:

(3) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(3) சபையானது, 14ஆம் பிரிவின்(2)ஆம் உட்பிரிவின் கீழ் எந்த அமைச்சுடன், அரசாங்கத் திணைக்களத்துடன் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதோ, விடயத்துக்கேற்றவாறு அந்த அமைச்சுக்கென அரசாங்கத் திணைக்களத்துக்கென அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கென சபையினால் நடாத்தப்படும் ஒவ்வொரு தேசிய லொத்தரினதும் வரும்படிகளையும் அத்தகைய வரும்படிகளிலிருந்து அத்தகைய தேசிய லொத்தரினால் அளிக்கப்பட்ட பரிசுகளின் பெறுமதியையும், அத்தகைய தேசிய லொத்தரை நடாத்தியதற்கென அந்த உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் சபைக்குச் செலுத்தப்படற்பாலனவான எவையேனும் கட்டணங்களையும் கழித்ததன் பின்னர் திரட்டு

நிதியத்துக்கூடாக, அமைச்சுக்கு, அரசாங்கத் திணைக்களத்திற்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்துதல் வேண்டும்.

(4) பதினாலாம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் கீழ் தவிர, வேறுவகையில் சபையினால் நடாத்தப்படும் தேசியலொத்தர் ஒன்றில், 16ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படாது இழப்பிக்கப்பட்டு சபையின் நிதியத்துக்குச் செலுத்தப்பட்டிருக்கின்ற எல்லாப் பரிசுகளும் சபையினால் திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படல் வேண்டும்."

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது.

லொத்தர்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்புடைமை

19. லொத்தர்கள் கட்டளைச் சட்டம், இச் சட்டத்தின் இப் பாகத்தின் கீழ் சபையினால் நடாத்தப்படும் ஏதேனும் தேசிய லொத்தருக்கு அல்லது லொத்தர் தொடர்பில் ஏற்புடையதாதலாகாது"

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "ஒவ்வொரு தேசிய லொத்தரிலும் எந்த விலையில் டிக்கட்டுக்கள் விற்கப்படல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் கீழல்லாது, வேறு வகையில் சபையினால் நடாத்தப்படும் ஒவ்வொரு தேசிய லொத்தரிலும் எந்த விலையில் விற்கப்படல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "நிதியாண்டு" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"நிதியாண்டு" என்பது ஏதேனும் ஆண்டின் சனவரி 1ஆம் தேதியன்று தொடங்கி, அவ்வாண்டின் திசெம்பர் 31ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியெனப் பொருள்படும்."

(2) "அமைச்சர்" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"அமைச்சர்" என்பது, நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தொதுக்கப் பட்டுள்ளதோ, அவ்வமைச்சர் எனப் பொருள்படும்." அத்துடன்

(3) அப் பிரிவின் இறுதியில் பின்வரும் வரைவிலக்கணத்தை சேர்ப்பதன் மூலமும்:-

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, மானியம் என்ற வகையில் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதி அல்லது மூலதனம் வழங்கப்படுவதும், 1982ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதுமான அல்லது தாபிக்கப்படுகின்றதுமான ஏதேனும் கூட்டுத்தாபனம் சபை அல்லது வேறு குழு எனப் பொருள்படும்."

10. இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1997 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

[1997 திசெம்பர் மாதம் 19ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

1998 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந் நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த முயற்சிகள் தொடர்பில் நிதிகள் ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு அந்நிதியாண்டின் போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச் செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் மேற்சொல்லப்பட்ட கருமங்களுடன் தொடர்பான அல்ல அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

*1. இச் சட்டம் 1997 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*2. (1)* இச் சட்டத்தில் "நிதியாண்டான 1998 ஆம் ஆண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும் 1998 சனவரி 01 ஆந் தேதி தொடங்கி 1998 திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கான சேவைக்காக இருநூற்றுப் பதினெட்டு பில்லியன் முந்நூற்று முப்பத்து மூன்று மில்லியன் நானூற்று ஐம்பத்தாறாயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி –

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும்: அத்துடன்

(ஆ) அரசாங்கத்திற்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும் பெறப்படல் வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியில் கூட்டு மொத்தத் தொகையானது நூற்றுப்பதின்மூன்று பில்லியன் எண்பத்தொன்பது மில்லியன் ரூபாவினை விஞ்சுதலாகாது. இதன்கண் முன்னர் குறிப்பிட்ட இரு நூற்றுப் பதினெட்டு பில்லியன் முந்நூற்று முப்பத்துமூன்று மில்லியன் நானூற்று ஐம்பத்தாறாயிரம் ரூபா கொண்ட பணத்தொகை இச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப் பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி பயனுடையனவாதல் வேண்டும்.

(3) (1) நிதியாண்டான 1998 ஆம் ஆண்டின்போது, இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் பெறுகைகள் அத்தகைய முயற்சியின் கணக்கிற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும். ஆனால், அவ்வாறு வரவு வைக்கப்படும் பெறுகைகளின் கூட்டு மொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் 111ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்

குறைந்த எல்லையை விஞ்சுதலாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மிகை ஏதேனும் இருப்பின் அத் தேறிய மிகையானது நிதியாண்டான 1998 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தேறிய மிகையைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகப் பின்வரும் கட்டணங்கள் அவையாவன:-

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி பொறுப்பாக்கப்படற்பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ்சரி அல்லது சேர்மானமானவையாயினுஞ்சரி, முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன மற்றும் ஏனைய செலவுகள் : அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு என்பன ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப்படல் வேண்டும்.

(3) நிதியாண்டான 1998ஆம் ஆண்டின்போது இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின்பேரிலும், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம், அந்த நிதியாண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து, அரசாங்கம் பெறும் பெறுகைகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். ஆனால், அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் 11ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

(4) நிதியாண்டான 1998 ஆம் ஆண்டின் முடிவில், இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சிலிருந்து நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் IV ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லையை விஞ்சுதலாகாது. அத்துடன் அந்த நிதியாண்டின் இறுதியில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புக்கள் அந்த அட்டவனணயின் V ஆம் நிரலில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் ஆகக் கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

4. நிதியாண்டான 1998 ஆம் ஆண்டின்போது எப்போதேனும் இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் பெறுகைகள், அத்தகைய முயற்சியின் மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினங்களைச் சமாளிப்பதற்குப் போதியனவாயிராவிடின் அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படற்பாலதாதல் வேண்டுமெனக் காலத்துக்குக் காலம் கட்டளை மூலம் பணிக்கலாம்: எவ்வாறாயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத் தொகைகளின் கூட்டு மொத்தத் தொகை, அந்த அட்டவணையின் 11ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக் கூடிய எல்லையை விஞ்சாதிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி தொடர்பில் அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சரால் கட்டளை மூலம் பணிக்கப்படக் கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்திற்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, அந்த அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் மீண்டுவருஞ் செலவினத்திற்குக் குறித்தொதுக்கப்பட்டிருந்து, ஆனால் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்டளை மூலம் அந் நிகழ்ச்சித்திட்டத்திற்குட்பட்ட ஆக்கப்பொருட்

செலவினத்துக்கென செய்யும் குறித்தொதுக்கலுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டுவருஞ் செலவினத்தின் அல்லது மூலதனச் செலவினத்திள் குறித்தொதுக்கலுக்கும் கைமாற்றப்படலாம்.

(2) இச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித் திட்டம் எதன் கீழும் ஆக்கப் பொருட் செலவினத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணங்களெவையும் குறித்தொதுக்கலில் இருந்து கைமாற்றப்படல் ஆகாது.

6 (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் பெறுகைகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கு என எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளையும் விடக் குறைவாக இருக்குமென, அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாதென, அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த ஏதேனும் பிற நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப் பத்திரத்தில் அதிகாரத்தின் கீழான செலவினத்துக்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப் பெறலாம்.

7. (1) (அ) இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 11 ஆம் நிரையிலும் ஞுளுஆம் நிரையிலும் ளுஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லைகளுள் எதனையும்:

(ஆ) இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 111 ஆம் நிரையிலும் குறித்துரைக்கப் பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளையும்:

அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 1999 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளை மூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

(2) இப்பிரிவின் கீழ் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும், பாராளுமன்றத்தினாலான தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி பயனுடையதாதல் ஆகாது.

(3) இப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன் கண் குறிப்பிடப்பட்டிருக்கக் கூடியதும், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட திகதிக்கு முந்தியதுமான அத்தகைய திகதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது தீமானத்தின் மூலம் இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அந்த அட்டவணையின் தோதான நிரைகளுக்கு, ஏதேனும் முயற்சியையும், அத்துடன் –

(அ) அத்தகைய முயற்சி தொடர்பான எல்லா ஆகக் கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும்,

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக் குறைந்த எல்லையையும்

சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

9. இச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1997 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்

[1997 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1997ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் விரிவுப் பெயர், "1996 சனவரி 1, அத்துடன் 1997 சனவரி 1 என்ற திகதிகளில்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1996 சனவரி 1 ஆகிய திகதியிலும் அத்துடன் 1997 சனவரி 1ஆம் திகதியில் அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வோர் ஆண்டிலும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவானது –

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "1995 சனவரி 1, 1996 சனவரி 1, 1997 சனவரி1" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் ;-

"1995 சனவரி 1, அத்துடன் 1996 சனவரி 1 என்ற திகதிகளிலும் அத்துடன் (இதனகத்துப் பின்னர்) "இயைபான காலாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1997 சனவரி 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் மீது அல்லது அதன் பாகத்தின் மீது இச் சட்டத்திற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் கணிப்பிடப்பட்ட (இதனகத்துப் பின்னர் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய பாதுகாப்பு அறவீடொன்றை" ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்;-

(ஊ) அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்தின் பெறுமதி;

(ஊ ஊ) அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் இரத்தினக் கற்களின் அல்லது ஆபரணத்தின் பெறுமதி:

(ஊ ஊ ஊ) அத்தகைய ஆளினால் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் இரத்தினக்கல்லின் அல்லது ஆபரணத்தின் விற்பனையிலிருந்தான வருவாய்கள்;

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு அதன் (எ) என்னும் பந்தியில் "1997 சனவரி 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 1998 சனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1997 சனவரி 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டினதும்

காலாண்டு ஒவ்வொன்றிற்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "மத்திய வங்கி" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப்பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"இரத்தினக்கல்" என்பது 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரச்சபைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஓர் இரத்தினக்கல் என்று பொருள்படும் என்பதுடன் விழுப்பொன் மற்றும் வெள்ளி என்பவற்றையும் உள்ளடக்கும்;

(2) "இறக்குமதியாளர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப்பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்;

"ஆபரணம்" என்பது 1993ஆம்ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஆபரணம் என்று பொருள்படும்; அத்துடன்

(3) "ஆள்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"மொத்த விற்பனை வரவு" என்பது இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆளொருவர் தொடர்பில் பயன் படுத்தப்படும்போது-

(அ) அவர் இறக்குமதியாளர் ஒருவராக இல்லாதவிடத்து, மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்தின் 5ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள் அந்த ஆளின் மொத்த விற்பனை வரவு என்று பொருள்படும்; அத்துடன்

(ஆ) அவர் இறக்குமதியாளராக இருக்குமிடத்து -

(i) சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கிணங்க சுங்கத்தீர்வையின் நோக்கங்களுக்காக அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருளின் (உண்மையான விலை, காப்புறுதி அத்துடன் கேள்விப் பெறுமதி என்பனவற்றைக் குறிக்கும்) பெறுமதியினதும் :

(ii) அத்தகைய பொருளின்மீது சுங்கத்தீர்வை எதுவும் செலுத்தப்பட்டிருப்பின் அத்தொகையினதும்; அத்துடன்

(iii) உட்பந்தியின் (i) மற்றும் (ii) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட தொகைகளைச் சேர்ப்பதன் விளைவாகத் தேறும் தொகையின் இருபத்தைந்து சதவீதத்தினதும்

கூட்டுமொத்தம் எனப்பொருள்படும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை அவ்வட்டவணையின் 7ஆம் விடயத்தில் "1997 சனவரி 1ஆம் தேதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆனால் 1998 சனவரி 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் காலாண்டிற்கு என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1997 சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோராண்டினதும் ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவிற்கு, இச் சட்டத்தின் 5ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 3ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1997 நவெம்பர் 6ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1996 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவு தொகை (திருத்தச்) சட்டம்

[1997 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1996ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவு தொகைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*1. இச் சட்டம், 1997 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவு தொகை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவுதொகைச் சட்டத்தின் பிரிவுப் பெயர், "முறையே 1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்றும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்றும் தொடங்கும் ஆண்டுகளின் ஒவ்வொருகாலாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிற்கும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.*

*3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின், "முறையே 1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்றும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்றும் தொடங்கும் ஆண்டுகளின்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்றும் தொடங்கும் ஆண்டினதும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு ஆண்டினதும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.*

*4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*